அனைவருக்கும் எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
MELON'S
186 Mitcham Road, Tooting, London
தமிழ்க்கடை
Tel: 0181- 6721461.
தரமான இலங்கை Groceries கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 24 – 30 டிசம்பர் 1998 முழக்கம்: 206

Sakthy Video
Video Filming for Wedding's B'day's & any other Occasion's By 3 CCD CAMERA'S
Please Cont:- 0181 -6956822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se -13
Tel: 0181-2979432

## வான்புலி அச்சுறுத்தல்

# ஏவுகணைகளுக்கு அரசு உத்தரவு

## ஒரு விமானமும் உலங்குவானூர்தியும் பறக்கின்றன – இராணுவம்

(21.12.1998)

வான் புலிகளின் அச்சுறுத்தல்களிலிருந்து தமது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களை பாதுகாக்க விமான எதிர்ப்பு ஏவுகணைகளை சிறீலங்காப் படையினர் கொள்வனவு செய்கின்றனர். இதற்கான கொள்வனவு வேண்டுதல்களை அவசர அவசரமாக சிறீலங்கா அரசு வெளியிட்டுள்ளது.

தரையிலிருந்து வான் நோக்கி வீசக்கூடிய ஏவுகணைகளுக்கான முதலாவது வேண்டுதல்களை வெளியிட்டுள்ள அரசு வான் புலிகளின் அச்சுறுத்தல்கள் தொடர்பான எச்சரிக்கை அறிவிப்புக்களை தனது தரைப் படைகளிற்கு விடுத்துள்ளதாக சர்வதேச இராணுவ வெளியீடான 'ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி' செய்தி வெளியிட்டுள்ளது. இதுவரை காலமும் போபர்ஸ் 40 மிமீற்றர் பீரங்கிகளையும், இலகு இயந்திரத் துப்பாக்கிகளையும் கொண்ட தமது விமான எதிர்ப்பு படைப்பிரிவுகளை, சிறீலங்காப் படையினர் தமது புதிய ஏவுகணைகளை முக்கிய அரசியல், இராணுவ, பொருளாதார மையங்களைப் பாதுகாக்க மட்டுமே பாவிப்பர் என அறிவித்துள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)

## குடாநாட்டில் படைமுகாம்கள் மீது புலிகள் மோட்டார் தாக்குதல்

### 8 படையினர் பலி 26 பேர் காயம்

யாழ்.குடாநாட்டில் கைதடி, குடாரப்பு பகுதிகளிலும் பரந்தனிலும் நிலைகொண்டுள்ள சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய மோட்டார் தாக்குதல்களில் குறைந்தது எட்டுப் படையினர் கொல்லப்பட்டதுடன், 26 பேர் காயமடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

பரந்தன் பகுதியில் நிலைகொண்டுள்ள சிப்பாய்கள் மட்டுப்படுத்திய அளவிலான இராணுவ நகர்வு ஒன்றினை மேற்கொள்ள முனைந்த சமயம் இராணுவ அணிகளை முன்னேற விடாது பலத்த தாக்குதலை விடுதலைப் புலிகள் தொடுத்தனர். விடுதலைப் புலிகளின் மோட்டார் வீச்சுகள் மிகவும் கடுமையாக இருந்ததால் படையினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டன. இதனையடுத்து படை

(☞ 2ம் பக்கம்)

## எமது இராணுவ பலம் குறைந்து வருகின்றது

– ரணில் விக்கிரமசிங்க –

(21.12.1998)

புலிகள் முன்பிலும் தற்பொழுது பலமானவர்களாக உள்ளனர். மரபு ரீதியான போரை நடாத்தும் ஆற்றலை அவர்கள் பிரதேச ரிதியாக பெற்றுள்ளனர். முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் அவர்கள் பெற்ற



வெற்றி உலகின் எத் தரத்திலும் பிரதானமான வெற்றியாகும் என சிறீலங்கா எதிர்க்கட்சி தலைவரும், ஐ.தே.க தலைவருமான ரணில் விக்கிரமசிங்க 'புரொண்ட் லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்

(☞ 2ம் பக்கம்)

## வன்னி படைநிலை மீது விமானத் தாக்குதல்!

### சிப்பாய்கள் சிதறியோடினர்

வன்னியிலுள்ள சிறீலங்கா இராணுவ படைநிலை ஒன்றின் மீது MI-24 தாக்குதல் உலங்கு வானூர்தி தாக்குதல் நடாத்தியதில் எட்டு சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர். தாக்குதலை நடாத்தியதும் சிறீலங்கா விமானப்படையினரின் உலங்கு வானூர்தியெனவே பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வன்னியிலுள்ள விடுதலைப் புலிகளின் அணியொன்றின் மீது தாக்குதல் நடாத்தவென இவ் உலங்கு வானூர்தி அழைக்கப்பட்டிருந்தது. ஆனால் சிப்பாய்களின் நடமாட்டத்தினை விடுதலைப் புலிகளின் அணியென கருதிய உலங்குவானூர்தி அவர்கள் மீது தாக்குதலை நடாத்தியது.

தம் மீது விடுதலைப் புலிகளின் உலங்கு வானூர்தி ஒன்றே தாக்குதல் நடாத்துவதாக கருதிய சிப்

(☞ 2ம் பக்கம்)

## ஒட்டுசுட்டான்

## புலிகளின் முப்படைகளும் தயாராகின்றன! படையினருக்கு எச்சரிக்கை

(21.12.98)

ஒட்டுசுட்டான் தெற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறீலங்காவின் 53ம் இராணுவப் பிரிவு மீது புலிகளின் தரை-கடல் படையினர் கூட்டுத்தாக்குதலை நடாத்தலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. புலிகளின் விமானப் படையினரும் இக்கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற ஊகத்தையும் வெளியிட்டுள்ள சிறீலங்கா இராணுவ வட்டாரம் தற்போது வன்

(☞ 2ம் பக்கம்)

## ஈராக்

## 62 படைகள் பலி; 180 படைகள் காயம்

ஈராக் மீது அமெரிக்க பிரித்தானிய படைகள் நடாத்திய தாக்குதலில் தமது 62 படையினர் கொல்லப்பட்டு 180 பேர் காயமுற்றதாக ஈராக்கின் துணைப் பிரதமர் தாரிக் அசீஸ் அறிவித்துள்ளார். இன்று காலை பக்தாத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தனது உத்தி



யோகபூர்வ சேத விபரங்களை அறிவித்த அவர், அரச கட்டடங்கள், கட்சிப் பணிமனை, வனொலி தொலைக்காட்சி நிலையங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பன அமெரிக்கப படைகளினால்



தாக்கப்பட்டதாக குற்றம் சாட்டியதுடன், இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புகளினதும் பன்மடங்கு பாதிப்புக்களை ஈராக்கிய பொதுமக்கள் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளார்.

• இதேவேளை இன்று தமது படைகளின் தாக்குதல்கள் தொடர்பாக கருத்துத் தெரி

(☞ 2ம் பக்கம்)

வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804


# சிறீலங்கா மோசமான நாடு ஆசிய மனித உரிமை ஆணைக் குழு அறிவிப்பு

சிறீலங்கா உலகின் மோசமான மனித உரிமை மீறல்களை புரியும் நாடு என கொங்கொங்கை மையமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் 10ம் திகதி உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற மனித உரிமைகள் பிரகடனத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி மேற்படி ஆணைக் குழு புதிய நடவடிக்கைத் திட்டங்களை சிறீலங்காவுக்கு எதிராக அறிவித்துள்ளது.

காணாமல் போனவர்களின் விபரங்களை தொடுக்கும் கணினி ஊடான வலைவேலைத்திட்டம் ஒன்றை அறிவித்த மேற்படி ஆணைக் குழு சிறீலங்காவில் காணாமல் போனவர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு கொலைசெய்யப்படுகின்றனர் எனக் குற்றம் சாட்டியுள்ளது.

# வான் புலிகளின் 'யாக்கோப்' பயிற்சி

வான் புலிகள் தற்போது முல்லைத்தீவு ராம்பியடி பகுதியில் கடுமையான பயிற்சிகளையும் வான்மார்க்க தாக்குதல் ஒத்திகைகளையும் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வான்புலிகள் தமது உலங்கு வானூர்திகளிலிருந்து தரையிறங்கி தாக்குதலை நடாத்துவதற்கு ஏதுவாக 'யாக்கோப்' ஏணியிறக்கப் பயிற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இப் பயிற்சிகளை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் சிலரும் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கும் அச் செய்திகள் வான் புலிகளின் கட்டுமானம் அமைப்பு தற்போது மிகவும் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளன.

# ஆறு பொதுமக்கள் கொலை

(21.12.1998)

வவுனியா நெடுங்கேணியில் நிலை கொண்டுள்ள சிறீலங்கா ஜெயசிக்குறுய் படையினரால் நெடுங்கேணி—முல்லைத்தீவு வீதியில் வைத்து ஆறு பொது மக்கள் இன்று காலை 8.30 மணியளவில் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் மூன்று பிள்ளைகளின் தந்தையான S.சிவபாலசிங்கம் முள்ளியவளை (26), ஆறு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் வல்லிபுரம் (45), ஒரு பிள்ளையின் தந்தையான பொன்னுத்துரை சிறிபாலு (28), மூன்று பிள்ளைகளின் தந்தையான நல்லதம்பி நடராஜா (49), ஆறு பிள்ளைகளின் தந்தையான நற்குணம் மாணிக்கவாசகம் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## குடாநாட்டில்...

யினர் தமது நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டு மீண்டும் தமது நிலைகளுக்குப் பின்னோக்கி சென்றுவிட்டனர்.

இத் தாக்குதலில் பலியான படையினரின் எண்ணிக்கையை மறுத்த சிறீலங்கா பாதுகாப்பமைச்சு 15 சிப்பாய்கள் மட்டும் காயமடைந்ததாக அறிவித்துள்ளது.

இதேவேளை கைதடி, குடாரப்பு ஆகிய பகுதிகளிலும் இராணுவத்தினர் மீது புலிகள் மோட்டார் தாக்குதலை நடாத்தி அவர்களுக்கு பலத்த இழப்பினை ஏற்படுத்தினர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஓட்டுசுட்டான்...

னிப் போர்முனையில் நிலவும் மந்த நிலையினை புலிகளின் இக் கூட்டு நடவடிக்கை முடிவிற்குக்கொண்டுவரும் என அறிவிக்கின்றது.

முல்லைத்தீவு றம்பையடி பகுதியில் வான்புலிகள் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும், வானூர்திகள் மூலம் தரையிறங்கி தாக்குதல்களை நடாத்துவதற்கான பயிற்சிகளே இங்கு இடம்பெறுவதாகவும் அரசவட்டாரங்களை ஆதாரம்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. இதேவேளை 'ரொக்கட்' மூலம் தரையிறங்கி தாக்குதல்களை நடாத்துவதற்கான பயிற்சிகளை புலிகள் இடை நிறுத்தி உள்ளதாகவும் தாழப்பறக்கும் வானூர்திகளிலிருந்து ஏணிகள் மூலம் குதித்து தரை இறங்கும் பயிற்சிகள் இடம்பெறுவதாகவும் அச்செய்தி அறிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## 62 படைகள்...

வித்த பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர், ஈராக்கிய இராணுவத்தின் உட் கட்டுமானத்தை சிதறடித்துள்ளதாக தெரிவித்தார். ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசேனை, இராணுவத்தை பாவித்தேனும் கட்டுப்படுத்த தாம் முயல்வோம் எனவும் இல்லையெனில் சரியான அரசொன்றினை பக்தாத்தில் நிறுவும் சாத்தியங்கள் பற்றி தாம் ஆராய்வோம் எனவும் ரொனி பிளேயர் அறிவித்துள்ளார்.

இன்று தமது ஆயுதக்கண்காணிப்பாளர்களை தொடர்ந்தும் ஈராக்கிற்கு அனுப்புவது தொடர்பாக ஆராய ஐ.நா. பாதுகாப்புச்சபை விசெட கூட்டத்தொடர் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. ஐ.நா ஆயுதக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்க மாட்டோம் என ஈராக் அறிவித்துள்ளது. இவ் மறுப்பினை முறியடிப்பதற்கு இராணுவத்தினரை தொடர்ந்தும் பாவிப்போம் என அமெரிக்க இங்கிலாந்து அரசுகள் அறிவித்து வருகின்றன. எனினும் பிரான்ஸ் புதியதொரு அணுகுமுறை தேவையென கோரியுள்ளது.

தற்போதைய ஆயுத கண்காணிப்புக் குழுவின் தலைமை கண்காணிப்பாளரை நீக்க வேண்டும் என ரஷ்சியா பகிரங்கமாகக் கோரியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வான்புலி...

புலிகளிடம் குறைந்த ஒரு இறக்கை பூட்டப்பட்ட விமானமும், உலங்குவானூர்தி ஒன்றும் பாவனையில் உள்ளதாக இராணுவத் தலைமை நம்புகிறது என இராணுவ உளவு வட்டாரங்கள் தம்மிடம் கூறியதாக அறிவித்துள்ள 'ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி' இவ் விமானங்களின் உண்மையான மூலம் பற்றி தமக்குத் தெரியாது என உளவு வட்டாரங்கள் தப்பிச் செல்வதுடன் வன்னியில் வைத்துத்தான் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பாகங்களைப் பொருத்தி விமானங்களைப் புலிகள் பறக்கும் நிலைக்கு கொண்டுவந்திருப்பர் என கூறியுள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளது.

புலிகளின் வான் மூலமான ஆற்றல் சிறீலங்கா படையினை அச்சுறுத்தி உள்ளமையை சுட்டிக்காட்டிய அவ் இராணுவ சஞ்சிகை 200 கிலோ கிராம் குண்டுகளை தேர்வுசெய்த இலக்குகள் மீது புலிகள் வீசலாம் என்பதே சாத்தியமானது என சுட்டிக்காட்டியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னி...

பாய்கள் அலறியடித்துக்கொண்டு பாதுகாப்புத்தேடி ஓடினர். ஆயினும் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏழு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## எமது இராணுவம்...

துள்ளார்.

தமது ஆட்சிக்காலத்தில் புலிகளை தாம் மூன்று இடங்களில் கையாண்டோம். அவர்கள் யாழ்ப்பாணத்தை பராமரிக்க வேண்டும், வன்னிக் காடுகளை பாதுகாக்க வேண்டும், கிழக்கில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். தற்பொழுது இத் தந்திரோபாயம் மாற்றப்பட்டு சிறீலங்கா படைகள் அளவுக்கு மீறி முழுப்பகுதியிலும் பரவியுள்ளனர். புலிகள் முல்லைத்தீவில் தமது பிரதான படைகளை கொண்டுள்ளனர், என சுட்டிக்காட்டிய அவர், கடந்த நாலு வருட காலத்தில் 11,500 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவத்தில் இணைய மக்கள் மறுக்கின்றனர். தினசரி எமது பலம் குறைந்துகொண்டு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப்போரின் காலத்தில் இருந்து இன்றுவரை உள்ள வரலாற்றில் நீண்ட இராணுவ நடவடிக்கையான ஜெயசிக்குறுய் மீளமீள பின்னடைவுகளை சந்தித்தது. இது தோல்வியடைந்தது. புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்து அரசியல் ரீதியாக மூலைக்குள் தள்ளும் மூல உபாயத்தின் அடிப்படையிலேயே இது இடம்பெற்றது எனவும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.


# தேவை

அச்சு இயந்திரம் இயக்க அனுபவம் உள்ளவர்கள் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

**தமிழ் அச்சகம்**

60 Rue Louis Blanc, 75010 Paris.
Tel *et* Fax: 01 42 09 60 64

# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
Mº: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருடம் அரசியல் பொருளாதார நெருக்கடி தோன்றும்!

## – ரொனி டிமெல் எச்சரிக்கை –

அடுத்த ஆண்டு இந்நாட்டில் பாரிய அரசியல் பொருளாதார நெருக்கடிகள் தோன்றும் அபாயங்கள் எதிர்நோக்கியுள்ளதாக ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரொனிடிமெல் தெரிவித்துள்ளார்.

கிழக்காசியா, தெற்காசியாவை பொறுத்தவரை சிறீலங்காவிற்கான முதலீட்டுப்பாய்ச்சல் மிகவும் சிறியதாகும். றப்பர் செய்கை ஒருபோதும் இல்லாத அளவிற்கு வீழ்ச்சி கண்டுள்ளது. ரஷ்யாவின் பொருளாதார வீழ்ச்சியால் தேயிலை விற்பனையும் பாதிக்கப்பட்டுள்ளது. இரத்தினக்கல் ஏற்றுமதியும் மட்பாண்டப்பொருள் ஏற்றுமதியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடி காரணமாக அரசு நாணய மதிப்பினை மீள பரிசீலிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. உலகச் சந்தையில் பெற்றோல், கோதுமை, சீனி போன்றவற்றின் விலைகள் குறைவடைந்தும் உள்நாட்டில் பொருட்களின் விலை குறைக்கப்படாமையே அரசின் பொருளாதார நெருக்கடிக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.

சர்வதேச நாணய நிதியம் (IMF) அரசின் பொருளாதாரத்தை புகழ்ந்து கூறுவதாக கூறப்பட்டால் அதுவெறும் பேச்சு. அதன் பிந்திய அறிக்கையை நோக்கினால் அரசின் பொருளாதார நடவடிக்கைகள் கடுமையாக அதில் விமர்சிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு முதலீட்டுத்துறை வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் பணவீக்கம் 14 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு வரி 2.5 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டிருப்பதால் மக்களுக்கு மேலதிகமான சுமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பொருளாதார நெருக்கடி காரணமாக பொருளாதாரத்தில் பாரிய ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. அரசியல் குழப்பங்களுடன் இப்பொருளாதார நெருக்கடிகளும் இணைந்து கொள்வதால் அடுத்த வருடம் நாட்டில் பெரும் நெருக்கடி நிலை தோன்றும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறு ரொனிடிமெல் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாணவர்கள் வழக்கு தாக்கல்

பல்கலைக்கழக அனுமதி கோரி யாழ். மாவட்டத்தை சேர்ந்த ஆறு மாணவர்கள் சிறீலங்காவின் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்துள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தில் அனுமதி கோரியே மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்து.

இவ் வழக்கில் பல்கலைக்கழக மானியக் குழுத்தலைவர், மேலதிக செயலாளர், சட்டமா அதிபர், உயர்கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

97ம், 98ம் ஆண்டிற்கான கல்வி ஆண்டில் மருத்துவ பீடத்தில் தமக்கு இடங்கள் கிடைக்காமையை சுட்டிக்காட்டியே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## யாழில் கடமையாற்றிய சிப்பாய் எங்கே?

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தில் கடமையாற்றிய தனது மகனை காணவில்லை என அவரது தந்தை அம்பாறையில் உள்ள மனித உரிமை ஆணைக் குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளார். ,

கடந்த மே மாதத்தில் இவர் யாழ் படைப்பிரிவில் கடமையாற்ற சென்றதாக பதியப்பட்டுள்ளது என்றும் அதன் பின்னர் அவர் காணாமல் போய்விட்டார் எனவும் புகாரில் தெரிவித்த தந்தை, இது குறித்து அறிந்துகொண்ட சிப்பாயின் தாயார் அதிர்ச்சியுற்று மரணமாகி விட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## வடமராட்சியில் கரையொதுங்கிய தமிழக மீனவர்கள்

தமிழக மீனவர்கள் பதினாறு பேர் வடமராட்சி நாகர்கோயில் பகுதியில் தமது படகுகளுடன் கரையொதுங்கியுள்ளனர். இவர்கள் தூத்துக்குடி, நாகபட்டினம், இராமநாதபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் ஆவர்.

கடந்த பதினேழாம் திகதி மீன் பிடிப்பதற்காக இவர்கள் புறப்பட்டதாகவும் மீன் பிடித்துக் கொண்டிருந்தவேளை கடும் காற்றும் கடற் கொந்தளிப்பும் ஏற்பட்டதால் தமது படகுகளில் இயந்திர கோளாறு ஏற்பட்டு அவை கடல் நீரோட்டத்தில் இழுத்துச் செல்லப்பட்டு வடமராட்சி கரையில் ஒதுங்கியதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது இம் மீனவர்கள் நாகர்கோயில் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டு அப் பகுதி மக்களால் உணவு உடை வழங்கி பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

## செம்மணிப் பகுதியில் வெள்ளம்

செம்மணி புதைகுழி அமைந்திருக்கும் இடங்களாக கருதப்படும் பகுதி தற்பொழுது வெள்ளத்தில் முற்றாக மூழ்கியுள்ளது. கடந்த ஒரு வாரமாக குடாநாட்டில் பெய்து வரும் கடும் மழையால் இப் பகுதியில் சுமார் ஒரு அடி வெள்ளம் தேங்கி காணப்படுகிறது.

செம்மணி புதைகுழிப்பகுதி யாழ்கடல் நீரேரியை அண்டிய சதுப்பு நிலப்பகுதி என்பதால் இப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளம் வற்றுவதற்கு குறைந்தது மூன்று மாதங்கள் செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் புதைகுழிகளை தோண்டும் முயற்சி அடுத்த ஆண்டு சித்திரைவரை நடாத்த முடியாது எனவும் கூறப்படுகின்றது.

## காத்தான்குடியில் 10,000 முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து காத்தான்குடி முதலாம் குறிச்சி பள்ளிவாசலில் கடந்த வெள்ளியன்று 10,000 மேற்பட்ட முஸ்லிம் மக்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தியுள்ளனர்.

றம்ழான் மாதத்தில் இத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டதில் முஸ்லிம்களின் உணர்வுகள் சிதைக்கப்பட்டுள்ளது எனவும் ஆர்ப்பாட்டத்தை நடாத்தியவர்கள் தெரிவித்துள்னர். இதே போன்ற ஆர்ப்பாட்டம் ஒன்று வவுனியாவிலும் நடாத்தப்பட்டுள்ளது.


## வீடு வாடகைக்கு

Colombes (92) இல் SNCF ற்கு மிகவும் அருகாமையில்
திருத்த வேலைகள் செய்து மிகவும் நல்ல நிலையிலுள்ள
2 Pieces வீடு வாடகைக்கு உண்டு.
**வாடகை 3250F மட்டுமே.**
சகல விபரங்களையும் பெற தொடர்பு கொள்ளவும்
(21.00 மணி முதல் 22.30 வரை)
**சிவா - Tel: 0146716691 - Mobil: 0609911266**


## பால்தரும் வேப்பமரம்

திருமலை நகரில் திருஞான சம்பந்தர் வீதியில் உள்ள வெள்ளை வில்வ பத்திரர் ஆலய வளாகத்தில் இருக்கும் வேப்ப மரத்தின் நடுப்பகுதியில் இருந்து பால் போன்ற வெண்மையான திரவம் குபுகுபு எனச் சொரிந்த சம்பவம் கடந்தவாரம் இடம் பெற்றுள்ளது.

சொரிந்த இத் திரவத்தினை பக்தர்கள் அருந்தியும் சென்றுள்ளனர். இவ் ஆலயம் வரலாற்று சிறப்பு மிக்கதெனவும் சோழர் காலத்து ஆலயம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னம்பிட்டி குண்டு விசாரணை கொழும்பில்

மன்னம்பிட்டியில் உள்ள சிறீலங்கா இராணுவ காவலரணின் முன்னே தரித்துநின்ற பேருந்து வண்டியொன்றில் குண்டொன்று காணப்பட்டதை அடுத்து அப்பேருந்தில் பயணம் செய்த ஏழு தமிழர்கள் தீவிர விசாரணைகளுக்கென கொழும்பில் உள்ள குற்றப்புலனாய்வு பணியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வெழுவரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் [illegible] எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாஞ்சோலைக் காவலரண் புலிகளின் அதிரடி

ஒட்டமாவடிப் பகுதியில் உள்ள மாஞ்சோலை பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடி தாக்குதலில் பொலிசார் பலர் காயப்படுத்தப்பட்டதாக கிழக்குச் செய்திகள் தெரிவிக்கின்றன: கடந்த திங்கள் (14.12.1998) அன்று அதிகாலை நடாத்தப்பட்ட இவ் அதிரடித் தாக்குதல் சுமார் அரை மணி நேரமாக நடைபெற்றுள்ளது.

புலிகளின் தாக்குதல் ஆரம்பித்ததும், காவலரணில் இருந்த பொலிசாரும் ஊர்காவற் படையினரும் காவலரணைவிட்டு ஓடி சென்றுவிட்டனர்.

ஆயினும் புலிகள் அவர்களை பின் தொடர்ந்து தாக்கியதால் பல பொலிசார் காயப்படுத்தப்பட்டுள்ளனர். பொலிசார் வசமிருந்த பல ஆயுதங்களும் புலிகள் வசம் சிக்கியுள்ளன. புலிகள் தாக்குதலை முடித்து சென்ற பின்னரே அப் பகுதிக்கு மேலதிக பொலிசார் அனுப்பப்பட்டனர்.

## குச்சவெளியில் ஆயுதபாணிகளால் பாலியல் வல்லுறவு

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பகுதியில் உள்ள யோகபுரம் கிராமத்தில் வீடொன்றுக்குள் இரவு வேளையில் புகுந்த ஆயுதபாணிகள் நால்வர், அங்குள்ள குடும்பப் பெண்ணை பலவந்தமாகக் கடத்திச் சென்று அவர் மீது பாலியல் வல்லுறவினைப் புரிந்துள்ளனர்.

மனைவியை கடத்திச் செல்ல முற்பட்டவர்களை தடுக்க முனைந்த கணவனும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வீட்டைவிட்டு துரத்தியடிக்கப்பட்டுள்ளார்.

கடற்கரைப் பகுதிக்கு மேற்படி ஐந்து குழந்தைகளின் தாயாரை இழுத்துச்சென்ற இக் கொடியமிருகங்கள், அவர்மீது மாறிமாறி பாலியல் வல்லுறவினை மேற்கொண்டுள்ளனர்.

முகமூடிகளை இவர்கள் அணிந்திருந்தபோதும் அவர்களில் ஒருவர் பாதிப்புக்கு உள்ளானவரால் இனம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கொடுமையைப் புரிந்தவர்கள் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து செயல்படுகின்றவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிறைச்சாலை உத்தியோகத்தர் அதிரடிப்படையால் சுட்டுக்கொலை

காரைதீவு பகுதியில் வைத்து மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தரான தங்கராசா சிவராசா என்பவர் சிறீலங்கா அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நண்பர் ஒருவரின் வீட்டிற்கு சென்றுவிட்டு இரவு எட்டு முப்பது மணியளவில் வீடு திரும்பிய வேளையிலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் வீடு திரும்பாததால் கவலை கொண்ட இவரது தாயார் இவரை தேடிச் சென்ற போது, இவரது சடலம் கல்முனை வைத்தியசாலையில் இருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை அடையாளம் காட்டினார். இவரது சடலம் அதிரடிப்படையினராலேயே தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டிற்குள் வைத்து புலிகள் என்னை சந்தித்தனர்

## – என்.ஏ.ஒபடகே –

வன்னி மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத பகுதிகளில் வாழும் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான தொகையை அறிவதற்கு சுதந்திரமான கணக்கெடுப்பொன்றை நடாத்த, சந்திரிகாவிற்கு சிபாரிசு செய்யப் போவதாக சிறீலங்காவின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரும் வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவருமான என்.ஏ.ஒபடகே தெரிவித்துள்ளார்.

கடந்தவாரத்துக்கு முந்திய வாரம் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் சென்ற ஒபடகே அங்குள்ள நிலைமைகளை அவதானித்துவிட்டு கொழும்பு திரும்பிய பின்னர் தனது விஜயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாங்களுக்கு தான் சென்ற வேளை, நிவாரணம் தொடர்பாக பலரும் விசனத்துடன் விபரித்ததாவும் தான் பிரயாணம் செய்தவேளை காட்டுப்பகுதி ஒன்றிற்குள் வைத்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சிலர் தன்னை சந்தித்து அகதிகளுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணம் போதுமானதாக இல்லை, எல்லா அகதிகளுக்கும் உணவு நிவாரணம் கிடைப்பதில்லை எனத் தெரிவித்ததை அடுத்து தான் அவர்களுக்கு பதிலளித்தபோது, இடம்பெயர்ந்தோர் தொகை தொடர்பாக அரசிற்கும் அரசாங்க அதிபர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாட்டினை நிவர்த்திப்பதற்காகவுமே தனது விஜயம் எனவும் குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார்.

# வெல்லம் – பிட்டியில் இருவர் சுட்டுக்கொலை

வெல்லம்பிட்டி பகுதியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றிற்குள் நுழைந்த சில ஆயுதபாணிகள் அங்கிருந்தவர்கள் மீது நடாத்திய துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் ஒருவர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும் தாக்குதலை நடாத்தியவர்கள் கொண்டுசென்றனர்.

பின்னர் அச் சடலங்கள் அரைகுறையாக எரிந்து கருகிய நிலையில் தலங்கம பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதேவேளை கிருலப்பனை சித்தார்த்த வீதியில் அமைந்துள்ள வாவியில் இளைஞனின் சடலமொன்று கிடக்கக் காணப்பட்டுள்ளது. சுமார் இருபது இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இவ் இளைஞனின் சடலத்தில் பல வெட்டுக்காயங்கள் காணப்பட்டுள்ளன.

# ஐ.தே.க.விற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள்

தொண்டமானின் அமைச்சகத்துக்கு ஒதுக்கப்படும் நிதி தொடர்பாக சிறீலங்கா பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் எதிராக வாக்களித்து அப் பிரேரணையை தோற்கடிக்க காரணமானவர்களாக இருந்த ஐ.தே.க.வுக்கு எதிராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடந்தவாரம் மலையகத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் சத்தியாக்கிரக போராட்டங்களையும் நடாத்தியுள்ளது.

ஹற்றன், பொகவந்தலாவ, கொட்டக்கலை, தலவாக்கலை, மஸ்கெலியா, டிக்கோயா ஆகிய பகுதிகளிலேயே இவ் ஊர்வலங்கள் நடாத்தப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களே இப் போராட்டங்களில் கலந்து கொண்டுள்ளனர்.

ஹற்றனில் நடைபெற்ற ஊர்வலத்தில் ஐ.தே.கட்சி பிரமுகர் ஒருவரின் கொடும்பாவி ஒன்றும் எரிக்கப்பட்டுள்ளது.

# கூட்டணி அலுவலகத்தில் மாநகரசபைக் கூட்டம்

யாழ்ப்பாண மாநகர சபையின் பொதுக் கூட்டம் சில மாதகால இடைவெளிக்கு பின்னர் பலத்த இராணுவ பாதுகாப்புடன் கூட்டணி யாழ்ப்பாண அலுவலகத்தில் கடந்த புதனன்று நடாத்தப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் கூட்டணி உறுப்பினர்களுடன் ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு எந்த ஒரு பத்திரிகையாளர்களும் அனுமதிக்கப்படவில்லை. பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டே பத்திரிகையாளர்கள் கூட அனுமதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செப்டெம்பர் மாதம் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் குண்டு வெடித்ததில் கூட்டணியின் யாழ் மேயர் உட்பட பலர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# எல்லைக் கிராமத்தில் மீன் மழை

மட்டக்களப்பு பொலநறுவை எல்லைக்கிராமப் பகுதியில் கடந்த வியாழனன்று நண்பகல் பெய்த பெரும் மழையில் பெருமளவு மீன்களும் வீழ்ந்துள்ளன. வீழ்ந்தவற்றில் பெருமளவானவை இரண்டு முதல் மூன்றங்குள நீளமுள்ள மீன்கள் எனவும் இவை தமது தலைகளுக்கு மேலும் வீழ்ந்ததாகவும் அப்பகுதிக் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# விமான நிலையத்தில் ஐந்து தமிழர்கள் கைது

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து ஐந்து தமிழர்கள் சிறீலங்காவின் புலனாய்வுத்துறை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். போலிக் கடவுச் சீட்டுக்களுடன் கனடா செல்லும் நோக்குடன் இவர்கள் பல்கேரிய விமானம் ஒன்றில் ஏறத்தயாராக இருந்த வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஐவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.








எங்கும் கிடைக்கிறது

Marketed & Distributed by
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail: bhasky@aol.com

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு மலிவுவிலை செய்யவிருக்கும் வியாபாரிகள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

விரைவில்...







போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களிற்கு தணிக்கை நீக்கப்படவில்லையாம்

வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களிற்கான போர்ச் செய்தித் தணிக்கை நீக்கப்பட்டுள்ளதாக முன்னர் வெளியான செய்திகள் தவறானவை என சிறீலங்காவின் தகவல் திணைக்களப் பணிப்பாளரும் போர்ச் செய்தித் தணிக்கைக்கான அதிகாரியுமான ஆரியரூபசிங்க தெரிவித்தார்.

போர் செய்திகள் தொடர்பான தணிக்கை விடயங்களை கையாளும் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொண்டதையடுத்து செய்தி வெளியிட்ட இவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்தி ஊடகங்கள் அனைத்திற்கும் தணிக்கைமுறை தொடர்ந்து அமுலில் இருப்பதாகவும் அதனைக் கையாளும் பொறுப்பு மாத்திரமே இராணுவ அதிகாரிகளிடம் இருந்து சிவில் அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தகவல் திணைக்கள அதிகாரிகள் சிலரை மேற்கோள் காட்டி, வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களிற்கான செய்தி தணிக்கை தளர்த்தப்பட்டுவிட்டதாக முன்னர் வெளியான செய்திகள் தவறானவை எனவும் போர்செய்திகளுக்கான தணிக்கையை தளர்த்தும் அதிகாரம் தனக்குக் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

பிபிசி செய்திகளைப் பொறுத்தவரை அவர்களால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாக ஒலிபரப்புச் செய்யப்படும் 'சந்தேசிய' நிகழ்ச்சியில் தணிக்கைக்குட்படாத போர் செய்திகள் ஒலிபரப்பப்பட்டால் அது பற்றி தான் நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# சொத்தி உபாலி சுட்டுக்கொலை

சிறீலங்காவின் பாதாள உலகக் கோஷ்டியின் மிக முக்கியமானவர் எனக் கருதப்படும் சொத்தி உபாலி கடந்த வியாழக்கிழமை அன்று மாலை இரு இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். பிலியந்தலைப் பகுதியிலே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. கொரணைப் பகுதி ஊடாக உபாலி பயணம் செய்து கொண்டிருந்த பேருந்து வண்டியைப் பின்தொடர்ந்து வந்த இரு துப்பாக்கி நபர்கள் பேருந்து வண்டியினை சந்தி ஒன்றில் வைத்து இடைமறித்து சொத்தி உபாலியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பின்னர் அவரை வாகனமொன்றில் கடத்திச் சென்றுள்ளனர். இச் சம்பவம் நடந்த சில மணிநேரத்தின் பின்னர் பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உபாலியின் சடலம் வீதியோரத்தில் கிடக்கக் காணப்பட்டுள்ளது. இவரைக் கொலை செய்தவர்கள் யாரெனத் தெரியவில்லை என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே பல கொலை, கொள்ளை சம்பவங்களிற்காக உபாலி கைது செய்யப்பட்டு அண்மையில்தான் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். லலித் அத்துலத்முதலியின் கொலை தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட குற்றப் பத்திரிகையிலும் இவரே முதலாவது எதிரியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்றில் தீவிர தேடுதல்

அக்கரைப்பற்றில் தமிழ் மக்கள் குடியிருக்கும் பகுதிகளை கடந்த ஒரு வாரமாக பாதுகாப்புப் படையினர் திடீர் திடீரென சுற்றி வளைப்பதுடன், வீடு வீடாகத் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். சுற்றி வளைப்பின்போது கைது செய்யப்படும் தமிழ் மக்கள் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு முகமூடி நபர்களின் முன் அடையாளம் காண்பதற்காக நிறுத்தப்படுகின்றனர்.

இதே வேளை ஆலையடி வேம்புக் கிராமத்தில் இயங்கி வந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையை மூடிய படையினர் அங்குள்ள உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும்படி உத்தரவிட்டுள்ளனர். அத்துடன் ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் உள்ள சில்லறைக் கடைகள் யாவும் மாலை 6.00 மணிக்கு முன்னர் மூடப்பட வேண்டும் எனவும் படையினர் புதிய உத்தரவொன்றினைப் பிறப்பித்துள்ளனர். காட்டுப் பகுகளில் திடீர் திடீர் என ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனால் விவசாயிகள் பலர் தமது வயல்களுக்குச் செல்வதற்கு அச்சம்கொண்டுள்ளனர்.

# லலித்கொலை 8 பேருக்கு குற்றப்பத்திரிகை

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாகவும் அவர் கொலையுண்ட இடத்திற்கு அருகாமையில் மறுநாள் அதிகாலை கொலை செய்யப்பட்ட ரகுநாதன் என்பவரின் கொலை தொடர்பாகவும் 8 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட அனைவரும் சிங்களவர்களாவர். 1993-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதிக்கும் 24-ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் லலித் அத்துலத் முதலி கொலை செய்வதற்கு சதி செய்ததாக இவர்களுக்கெதிராகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் ரகுநாதன் என்ற இளைஞனை சட்டத்துக்கு விரோதமாக தடுத்து வைத்திருந்து கொலை செய்ததாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கு விசாரணையில் 59 சாட்சிகளின் சாட்சியத்தை நெறிப்படுத்த உள்ளதாகவும் குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் நிந்தவூரில் கடத்தல்

நிந்தவூரில் நடைபெற்ற சிறீலங்கா காங்கிரசின் விழா ஒன்றில் கலந்துகொள்ளச் சென்ற ஆதரவாளர்கள் மூவர் ஆயுதம் தாங்கிய சிலரால் கடத்திச் செல்லப்பட்டனர். கடத்திச் சென்றவர்கள் இம் மூவரையும் தென்னந்தோப்பொன்றில் வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர். இத் தாக்குதலினால் இம் மூவரும் காயமடைந்துள்ளனர். எனினும் நள்ளிரவு வேளையில் ஆயுதபாணிகள் மதுவருந்திக் கொண்டிருந்தபோது இம் மூவரும் தப்பிச் சென்று தமக்கு நடந்ததை விபரித்துள்ளனர்.

தங்களை கடத்திச் சென்று தாக்கியவர்கள் ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள்தான் என்பதையும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஒளிவிழா வேளை திருட்டும் நடந்தது

யாழ். கன்னியர்மடம் தமிழ் வித்தியாலயத்தில் கடந்தவாரம் கிறிஸ்மஸ் ஒளிவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை அங்கு புகுந்த திருடர்கள் ஆசிரியைகளின் கைப்பைகளை அபகரித்துச் சென்றுள்ளார்கள். அபகரித்துச் செல்லப்பட்ட கைப்பைகளில் பணமும் நகைகளும் இருந்தன எனவும் அவற்றின் பெறுமதி பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் எனவும் தெரிய வருகின்றது.

ஒளிவிழா நடந்தவேளை மேல் மாடியில் உள்ள ஆசிரியைகளின் ஓய்வு அறைக்குள் புகுந்த திருடர்கள், அங்கிருந்த கைப்பைகளைத் திருடி அதிலிருந்த பெறுமதியானவற்றை எடுத்துவிட்டு அடையாள அட்டைகளை வீதியோரத்தில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட டோட்மூண்ட் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவர்

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட சுமார் நூறு தமிழர்களை டோட்முன்ட் வெளிநாட்டுத் திணைக்களம் சிறீலங்காவிக்கு திருப்பி அனுப்ப முயற்சிக்கின்றதா? இனிமேல் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிக வதிவிட அனுமதி புதுப்பிக்கப்படமாட்டாது என மேற்படி திணைக்களம் அறிவித்துள்ளதையடுத்தே இச் சந்தேகம் எழுந்துள்ளது.

மேற்படி தமிழர்களின் சார்பில் தூதுக்குழுவொன்று அரசின் கூட்டணிக்கட்சியான குருணன் கட்சியின் டோட்முன்ட் கிளையினருடன் சந்திப்பொன்றை ஏற்படுத்தியது. SPD கட்சியின் உறுப்பினரே உள்துறை அமைச்சராக இருப்பதால் அவரிடமே இதுபற்றி முறையிடவேண்டும் என குருணன் கட்சிக்கிளையினர் கூறியபோதும், நாம் அவரின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக்கொண்டு வருவதாக உறுதியளித்தனர்.

மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்க மேற்படி தூதுக்குழு முடிவு செய்துள்ளது. அதனால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் ரவி என்பவரின் 0231-4459575 அல்லது 01719375 626 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# சிப்பாய்களுக்கு மீண்டும் '48 மணி நேரம்'

சிறீலங்காவின் இராணுவ சேவையில் இருந்து தப்பிச் சென்ற சிப்பாய்களுக்கு புதிதாக பதவியேற்ற தளபதி, 48 மணி நேர புதிய மன்னிப்பு வழங்கியுள்ளார். கடந்த 19-ம் திகதி சனிக்கிழமை முதல் 20ம் திகதி நள்ளிரவு வரையுமே இக்கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இக் கால அவகாசவேளையில் மீண்டும் சேவையில் இணைந்து கொள்ளும் சிப்பாய்களுக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது என புதிய தளபதி அறிவித்துள்ளபோதிலும் இக் கால அவகாசவேளையில் பெரியளவிலான தொகையினர் இராணுவத்திற்குத் திரும்பிவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் சர்வமத ஊர்வலம்

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 50-வது வருட நிறைவை முன்னிட்டு மன்னார் நகரில் சர்வமத ஊர்வலமொன்று நடாத்தப்பட்டுள்ளது. மன்னார் புனித செபஸ்தியார் பேராலய முன்பாக காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகிய இவ் ஊர்வலம் பிரதான வீதி, பேருந்து நிலையம், வைத்திய சாலை என்பவற்றின் ஊடாகச் சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. பின்னர் அங்கு நடாத்தப்பட்ட கூட்டத்தில் அனைத்து சமயத் தலைவர்களாலும் சமய வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

# யாழ் நீதிமன்றங்கள் மீண்டும் இயங்குமாம்

யாழ்ப்பாணத்தில் மீண்டும் நீதி மன்றங்களை இயங்க வைக்கப் போவதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. யாழ். நீதிமன்ற அதிகாரிகள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ஆகியோர் சமீபத்தில் நடத்திய கூட்டமொன்றின் பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் உள்ள நீதி மன்றங்களே மீண்டும் விரைவில் இயங்க உள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

# குடை திருத்துபவர்கள் வேடத்தில் இருந்த இராணுவ அதிகாரிகள் கைது

சிறீலங்கா ஜனாதிபதி தங்கும் அலரி மாளிகையின் அருகாக குடைதிருத்துபவர்கள் வேடத்தில் நடமாடிய இராணுவ புலனாவுப் பிரிவைச் சேர்ந்த இரு அதிகாரிகளை பொலிசார் கைது செய்துள்ளனர். அலரி மாளிகைக்குச் சமீபமாக இவர்கள் குடைதிருத்திக்கொண்டிருந்த போது பொலிசார் இவர்களைக் கைதுசெய்து விசாரித்த வேளையிலேயே இவ் விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. தாம் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் விடுதலைப் புலிகளுக்கு வேவு பார்ப்பவர்கள் நடமாட்டங்களை கண்காணிக்கும் பணியிலேயே தாங்கள் மாறுவேடத்தில் அப்பகுதியில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறீலங்கா

# தேசிய அரசியலாகிவிட்ட வரட்டுக்கௌரவம்

— கொழும்பிலிருந்து ஊரோடி

சிறீலங்காவிற்கு மிக அண்மைக் காலமாக விஜயம் செய்யும் வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் சிறீலங்கா அரசின் இன ஒடுக்கல் செயற்பாடுகளைக் கண்டு கொண்ட நிலையில் வெளியிடும் அறிக்கைகள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கும், அவரது வெளியுறவு அமைச்சகத்திற்கும் அரசியல் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகவே அறியமுடிகின்றது. சர்வதேச அழுத்தங்கள் சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சகத்தையே பெரிதும் தாக்கியுள்ளன. ஏனெனில் பொ.ஐ.மு. அரசு பதவிக்கு வந்த காலத்தில் இருந்து புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தில் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையிலான வெளியுறவு அமைச்சகமே மிக வேகமாக ஈடுபட்டுவந்தது; குறிப்பாக கதிர்காமர் தனது தனிப்பட்ட செல்வாக்குகள் மூலமாகவும் வெளிநாடுகளில் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை செய்துவந்தார் என்பது உலகறிந்த விடயம்.

ஆனால் இப்போது அவரது பிரச்சாரத்திற்கு நேர் எதிர்மாறான விளைவுகளையே சிறீலங்காவிற்கு விஜயம் செய்யும் தூதுக்குழுக்கள் நேரடியாகக்கண்டு கொள்கின்றன.

நான்கு ஆண்டுகால ஆட்சியில் பொ.ஐ.மு. அரசு சாதித்தது என்ன? சிங்கள மக்கள் கேட்பதைவிட வெளிநாட்டு தூதுக்குழுக்களினதும்; ராஜதந்திரிகளினதும் இத்தகைய கேள்விகளுக்கே அரசு தீர்க்கமான பதில் சொல்ல தயங்குகின்றது. இந்நிலையில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ரத்வத்தை 'புலிகளை இராணுவரீதியாக அடக்கிய பின்னரே பேச்சுவார்த்தை' என மீண்டும் தம்பட்டம் அடிக்க ஆரம்பித்துள்ளார். சிறீலங்காவைப் பொறுத்தவரை வெளியுறவு அமைச்சகம் அரசியல் ரீதியாக எவ்வகையான பின்னடைவுகளை எதிர்நோக்குகின்றது என்பதையும்; அதேபோல பாதுகாப்புத்துறை இராணுவ ரீதியாக எத்தகைய பின்னடைவுகளை எதிர்நோக்குகின்றது என்பதையும்; இரு அமைச்சகங்களுமே ஒன்றையொன்று புரிந்துகொள்ளாமல் செயற்படுவது ஜே.ஆர் அரசில் இருந்து சந்திரிகா அரசுவரை வழமையாகிவருகின்றது. கூடுதலாக சந்திரிகாவின் அரசிலேதான் சட்டத்துறை, நிதித்துறை, நீதித்துறை என்ற அரசின் மூன்று முக்கிய பகுதிகளும் ஒன்றையொன்று புரிந்து கொள்ளாது தன்னிச்சையாக செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக சட்டத்துறைக்குள் இருக்கும் ஒவ்வொரு அமைச்சகங்களும் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றன.

அதற்காக அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு சிறீலங்காவில் பின் பற்றப்படுகின்றது என்பது அர்த்தமல்ல. அதிகார பிரிவினைக் கோட்பாட்டின்படி சட்டம், நிதி, நீதி போன்ற மூன்று துறைகளும் சமநிலைத்தலையீடுகள் அடிப்படையில் செயற்படுவதானால் அங்கு மாநிலங்களுக்கான சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது என்பதே அர்த்தமாகும். ஆனால் சிறீலங்காவில், சட்டம், நிதி, நீதி போன்ற மூன்று துறைகளும் தன்னிச்சையாக செயற்படுவதென்பது, யதார்த்தத்தை உணர் பொ.ஐ.மு. அரசின் சில அமைச்சர்களும், எம்.பி. களும் எதிர்த்மை தெரிந்தவிடயம், தற்போது அரசின் வரவு செலவுத் திட்டத்தைக்கூட சில அமைச்சர்களும் எம்.பிகளும் எதிர்த்து வருகின்றனர். எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியின் எம்.பி.கள் பாராளுமன்றத்தை கசாப்புக்



கடையாகவே மாற்ற முனைகின்றனர். ஒரு தேசிய அரசியல் ஆளும்கட்சி எதிர்க்கட்சிக்கு இடையேயான அரசியல் பண்பு என்பது சிறீலங்காவின் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை பூச்சியமாகவே உள்ளது. மாறாக வரட்டுக் கௌரவமான அரசியலே இன்றுவரை மேலோங்கியுள்ளது.

வரட்டுக்கௌரவத்திற்காக தொடங்கிய இராணுவத் தாக்குதலான 'ரிவிபல' தற்போது எதையும் கூறமுடியாத நிலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந் நிலையில் ரத்வத்தை விதண்டாவாதம் பேச ஆரம்பித்திருக்கிறார். ஏனெனில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் புதிய இராணுவத்தளபதி, பிரதமர் சிறீமாவிற்கு நேரடியான அறிமுகமானவர் என்பதால் ஜனாதிபதி சந்திரிகாவினால் அரசிற்கான விசுவாசமான தளபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆகவே தான் அமைச்சர் ரத்வத்தை தனது விதண்டாவாத பேச்சினூடாக அரசின் இராணுவ திட்டங்களை குழப்பக்கூடும் என எதிர்வு கூறப்படுகிறது. 'புலிகளை இராணுவ ரீதியாக அடக்கிய பின்னரே பேச்சுவார்த்தை' என்ற ரத்வத்தையின் பேச்சு, புதிய இராணுவ தளபதிக்கு ரத்வத்தை கூறிய ஒரு சவால் என்றே இராணுவ ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. இந்நிலையில் சிறீலங்கா அரசின் இராணுவ உத்திகள் இலகுவாக புலிகளுக்கு எட்டிவிடக்கூடிய ஏது நிலைகளும் தென்படுகின்றது.

ரத்வத்தை மீதான நம்பிக்கையீனம் அல்லது வெறுப்புணர்வு என்பது சந்திரிகாவிற்கு மேலோங்கியபோதும், பாதுகாப்பு அமைச்சர் பதவியை மாற்றக்கூடிய சாதக சூழ்நிலைகளும் கிட்டியதாக இல்லை, அதோடு தேர்தல் காலங்களும் நெருங்குவதால் ஆளும் தரப்பினரிடையே அதுவும், சந்திரிக்கா - ரத்வத்தை - சிறீமா என்ற மூன்று முக்கியஸ்தர்களிடையே முரண்பாடு என்பதை மக்கள் கண்கூடாக கண்டு கொண்டால்; தமது எதிர்கால அரசியலுக்கும் பொ.ஐ.மு. அரசின் நான்காண்டுகால இறுதியில் மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கை கெட்டுவிடும் என்பதாலேயே சில கசப்பான மன உணர்வுகளோடு அரசை நகர்த்திச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் சந்திரிகாவிற்கு ஏற்பட்டுள்ளது.

ரிவிபல இராணுவ தாக்குதல் மூலம் ஏதேனும் ஒரு வெற்றியை அல்லது வெற்றி போன்ற ஒரு மாயையை சிங்கள மக்களுக்கு காண்பித்துவிட்டு ஏதேனும் ஒரு பதவி மாற்றத்தை செய்யலாம் என்றே சந்திரிகா முயற்சித்தார். ஆனால் அதுவும் முடியாது போய்விட்டது. அதேவேளை மாமனார் ரத்வத்தையை நேரடியாக அரசியலில் இருந்து தூக்கி எறியமுடியாத சக்தி அற்றவராகவும் சந்திரிகா காணப்படுகிறார். ஏனெனில் பொ.ஐ.மு. அரசு பதவிக்கு வந்த காலத்திலிருந்து இன்றுவரை சகல இராணுவ திட்டங்களையும் பாதுகாப்புகளையும் ரத்வத்தையே செய்துவந்தார். அதோடு இராணுவ அதிகாரிகளில் பெரும்பாலானோர் ரத்வத்தைக்கு விசுவாசமாகவே செயற்படுகின்றனர். இந்நிலையில் ரத்வத்தையை திடீரென பதவிமாற்றம் செய்வது விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதும், இராணுவத்தை கட்டுப்படுத்தி செயற்படுத்தக்கூடிய தகுதி வாய்ந்த எவரும் பொ.ஐ.மு. அரசில் இல்லை என்பதும் ஒரு முக்கிய காரணமாகும். இந்நிலையில் தான் வெளியுறவு அமைச்சகம் அரசியல் ரீதியாக சந்திரிகாவிற்கு முக்கியமாக இருந்தது. ஆனால் கதிர்காமரின் செயற்பாடுகளும் தற்போது நம்பிக்கை இழந்துவிட்டதற்கு வெளிநாட்டு தூதுக்குழுக்களின் அறிக்கைகளே காரணமாகும். மொத்தத்தில் 'பாதுகாப்புத்துறை' 'வெளியுறவுத்துறை' என்ற இரு துறைகளுமே சந்திரிகாவிற்கு நம்பிக்கை இழந்தவைதான்.

**'புலிகளை இராணுவ ரீதியாக. அடக்கிய பின்னரே பேச்சுவார்த்தை' என்ற ரத்வத்தையின் பேச்சு, புதிய இராணுவ தளபதிக்கு ரத்வத்தை கூறிய ஒரு சவால் என்றே இராணுவ ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.**

**குறிப்பாக ஆளும் அரசின் அமைச்சர்களும், எம்.பி. களும் தாம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை மறந்து அரசிற்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபடுவதையே தற்போது காண முடிகின்றது.**

ராத நிலையில் தமது கருத்து முரண்பாடுகளையும்; தமது சுயநலத்தேலைவளுக்காக அரசியலை பயன்படுத்துவதையும் குறிக்கும். சிறீலங்காவின் பாராளுமன்றத்தில் (சட்டத்துறை) அங்கம் வகிக்கும் ஒவ்வொரு அமைச்



சர்களும், எம்.பி.களும் (தமிழ் எம்.பிகளும்) சுயநல அரசியலிலும் சந்தர்ப்பவாத அரசியலிரும் ஈடுபடுகிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை. குறிப்பாக ஆளும் அரசின் அமைச்சர்களும், எம்.பி. களும் தாம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை மறந்து அரசிற்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபடுவதையே தற்போது காண முடிகின்றது. அரசின் தீர்வுப்பொதியை முன்


## A.S.C.E.S இன் புதியவகுப்புகள்

**14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்**

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே பாடசாலை

**bio,chimie,maths,anglais,français,histoire etc**

வீட்டுப்பாடங்கள் செய்ய கூடுதல் விளக்கம் பெற உதவி செய்யப்படும்

**பிரஞ்சு**

02.01.99 சனி காலை 10.00 மணி
17.12.98 ஞாயிறு பி.ப.1.30 மணி
04.01.99 திங்கள் பி.ப. 4 மணி (Paris 18 இல்)
06.01.99 புதன் பி.ப 3 மணி (Paris 18 இல்)

**ஆங்கிலம்**

Cambridge,Toefl பரீட்சைகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
03.01.99 ஞாயிறு பி.ப 1.30மணி-3.30 மணி
02.01.98 சனி காலை 10 மணி

**கம்பியூட்டர்**

02.12.98 சனி காலை 10 மணி பி.ப 1.30 மணி

**சிறுவர்க்கான தமிழ் - பிரஞ்சு - கணித - ஆங்கில வகுப்புகள்**

பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்
நடன வகுப்புகள் ஞாயிறு பி.ப 1.30மணி
தையல் கேக் அலங்காரம் : 02.01.99 சனி பி.ப 2 மணி-3.30மணி
சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்
சனி ஞாயிறு 3.30 மணி திங்கள் புதன் 5.30 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்
41, rue Didot 75014 Paris M° Pernety Dir N° 13
Tél 01 42 57 23 56
திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clignancourt


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்புலிகள், வான்புலிகள்
# நீண்டுசெல்லும் புலிகளின் படையணிகள்



## போர்முனை ஆய்வு

**பண்ணையார்**

சிறீலங்காவின் போர்க்களம் கடந்தவாரம் மிக அமைதியாகக் காணப்பட்டது. ஆனால் கொழும்பின் இராணுவ பின்தளத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் சில நடந்து முடிந்தன. ஜெனரல் ரத்வத்தையின் ஆத்ம நண்பனான ரொகான் தளுவத்தை தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்று அந்த இடத்திற்கு ரத்வத்தையின் மறைமுக எதிரிகளில் ஒருவரான சிறீலால் விஜயசூரிய சிறீலங்காவின் புதிய முப்படைத் தளபதியாக பதவியேற்றுள்ளார். தனது பதவியேற்பு வைபவத்தில் அரசியல் கலந்த இராணுவ வசனங்களால் தனது உரையை நிகழ்த்தினார். தங்களது இராணுவம் ஒரு அங்குல நிலப் பகுதியையேனும் விடுதலைப் புலிகளுக்கு விட்டுக்கொடுக்காதென்றும் இழந்த நிலப் பகுதிகள் எல்லாவற்றையும் மீளக் கைப்பற்றிய பின்னரேயே அரசியல்வாதிகள் தீர்வுகள் பற்றிப் பேசலாம் என்றும் கூறியுள்ளார். எம்மைப் பொறுத்தவரை சிறீலங்காவின் முப்படைத் தளபதி என்னும் பதவியானது சிறீலங்கா அரசின் சீருடைய அணிந்த ஓர் அரசியல்வாதி என்றே கொள்ளலாம். காரணம் சிறீலங்காவின் படைகள் என்றும் ஆட்சியிலிருக்கும் அரசின் கூலியாகவே செயற்பட்டு வந்துள்ளது. அதன் தளபதிகூட அப்போது ஆட்சியிலிருக்கும் அதிகார சக்திக்கு முண்டு கொடுக்கும் ஒருவராகவே எப்போதுமே கணிக்கப்படுகிறார். தமிழீழப்போரைப் பொறுத்தவரை இதுவரைகாலமும் பல தளபதிகள் களத்திற்குள் வந்தும் அதுபோல் ஓய்வுபெற்றும் போயுள்ளார்கள். அதேபோல் ஏராளமான அதிகாரிகள் கூட களங்களிலிருந்து அடிக்கடி அப்புறப்படுத்தப்பட்டு புதியவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த ஒவ்வொரு தளபதிகள் உள்ளே வரும்போதும் அவரவர் தங்களது கணிப்பிற்கேற்ற முறையில் அமைந்த நகர்வு உத்திகளையும் போர்த்திட்டங்களையும் பயன்படுத்துவது வழக்கம். இப்படியான பல தளபதிகள் தங்களது படைத்துறை அனுபவங்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் ஓர் தளமாக ஈழப்போர் அமைந்துள்ளது. தற்போது பதவியேற்றுள்ள புதிய தளபதியைப் பொறுத்தவரை அவர் ஓர் அனுபவம் வாய்ந்த போராளராக இருக்கலாம். ஆனால் ஈழப்போரைப் பொறுத்தவரை அவரது போர் அனுபவங்கள் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுவிட்டன. புதிதாக அவரிடமிருந்து வெளிப்பட எதுவுமேயில்லை. முக்கியமாக புதிய தளபதியைப்பற்றி குறிப்பிடவேண்டுமென்றால் ஜெயசிக்குறுயின் ஆரம்பத்தில் அதன் பொறுப்பாளராக இவரே பதவிவகித்தார். ஓமந்தை தாண்டிக்குள முறியடிப்பு தாக்குதல் ஒன்றின்போது பல தளபதிகள் இறந்தும், காயப்பட்டும் இருக்கையில் இந்த ஜெயசிக்குறுயின் பிரதான தளபதி சிறீலால் விஜயசூரிய பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களின் சேலையை அணிந்துகொண்டு மக்களோடு மக்களாக தப்பியோடி வவுனியா இராணுமுகாமைச் சென்றடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் தளபதி இன்று விடுதலைப் புலிகளின் போர்த்திறன்பற்றிக் கூறுகிறார். பொறுத்திருந்து பார்ப்போம்.

அடுத்ததாக கடந்தவாரம் சிறீலங்காவின் கடற்படைக்கும் அதன் உளவுத்துறைக்கும் தலையிடியைக்கொடுத்த ஒரு விடயமாக முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் அமைந்திருந்தது. சர்வதேச கடற்பரப்பையும், சிறீலங்காவின் கடற்பகுதியின் பெரும்பகுதியையும் தமது படைகள் கண்காணித்து வருகின்றன என சிறீலங்காவின் வான்படையும், இடைவிடாத ரோந்து நடவடிக்கைகளால் புலிகளின் படகுகளை மூழ்கடித்து வருகிறோம் என அதன் கடற்படை அடிக்கடி கூறிவரும்வேளை தங்களது உளவுத்துறை விடுதலைப் புலிகளின் விநியோகங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதில் சர்வதேச ரீதியில் இயங்குவதாக படைத்துறை பிரதானிகள் கூறிவரும்வேளை விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலொன்று முல்லைத்தீவில் பொருட்களை இறக்கிவிட்டுச் சென்றுள்ளது என்ற செய்தி கொழும்பின் பத்திரிகைகளாலேயே வெளியாக்கப்பட்டுள்ளது. இந்த கப்பல் சம்பவத்தினை ஏராளமான மக்கள் அவதானித்துள்ளனர் என அப்பத்திரிகை கூறும்போது ஏன் அப்பிராந்தியதிலேயே ஓடித்திரியும் சிறீலங்காவின் விமானங்களோ கப்பல்களோ அதனைக் கண்டுகொள்ளவில்லை.

**கொழும்பின் பத்திரிகைகள் விடுதலைப் புலிகளின் விமானங்கள் பற்றி கட்டுரைகள் வரைந்து கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகளும் முதன் முறையாக அவைகளின் இருத்தல் பற்றி அறிவித்தனர். ஆனால் அதன் ரகங்கள்பற்றி யாருமே அறிந்திராத நிலையில் சிறீலங்காவின் மேதாவிகள் சிலர் இவைதான் விடுதலைப் புலிகளிடம் உண்டு என உறுதியிட்டுக்கூறி சிலவற்றின் படங்களையும் வெளியிட்டனர்.**

இல்லாவிடில் கண்டதன் பின்பு கூட எப்படியோ போகட்டும் எனக்கூறி தங்கள் தலையைக் காப்பாற்றிக்கொண்டு ஒதுங்கி விட்டார்களோ? இதற்கிடையே விடுதலைப்புலிகளின் விமானங்கள் பற்றிய தகவல்கள், செய்திகள் தொடர்ந்தும் சிங்களத்தின் தென்பகுதியை அலக்கழித்து வருகின்றன. இதற்கெல்லாம் மூலமாக அமைந்தது சிறீலங்காவின் விமானப்படை கொழும்பு நகரில் ஒட்டிய சுவரொட்டிகள் தான். கொழும்பின் பத்திரிகைகள் விடுதலைப் புலிகளின் விமானங்கள் பற்றி கட்டுரைகள் வரைந்துகொண்டிருக்கையில் விடுதலைப் புலிகளும் முதன் முறையாக அவைகளின் இருத்தல் பற்றி அறிவித்தனர். ஆனால் அதன் ரகங்கள்பற்றி யாருமே அறிந்திராத நிலையில் சிறீலங்காவின் மேதாவிகள் சிலர் இவைதான் விடுதலைப் புலிகளிடம் உண்டு என உறுதியிட்டுக்கூறி சிலவற்றின் படங்களையும் வெளியிட்டனர். இவற்றின் மூலம் அவர்கள் கூறமுனைந்தது என்னவெனில் விடுதலைப் புலிகளின் விமானங்கள் எனக் கூறப்படுபவை மிகச் சிறிய ரகத்தைச் சேர்ந்தவைகளே. இவற்றின் மூலம் பெரும்தாக்குதல்கள் எதனையும் செய்யமுடியாது என்றும் பொதுவான பயமுறுத்தல்களுக்கு இவற்றை விடுதலைப் புலிகள் பாவிப்பார்கள் எனவும் கூறி இச் செய்திக்கு முற்றுப்புள்ளி வைக்கமுனைந்தனர். ஆனால் இதற்கிடையே வெளியாகிய கட்டுரைகள் எல்லாம் விடுதலைப் புலிகளின் விமானங்கள் பற்றிய எதிர்பார்ப்பினை மிகப்பெருமளவில் வெளியிட்டிருந்தன. ஒரு பத்திரிகை தனது கட்டுரையில் அது MI-24 ஆக இருக்கலாம் என்றது. மற்றொன்று அது பெல்ரகத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கூறியது. இதற்கிடையே மற்றொரு பத்திரிகை விடுதலைப் புலிகள் SN-24 ரக விமானத்தை வைத்திருக்கிறார்கள் எனக்கூறியது. இப்படி சிங்க [illegible] விமானப்படையோ அவ் விவகாரத்தை மிகச் சிறியதாக்கி முடித்துவிட முனைந்தது. ஆனால் பின்னரும் விமானங்கள் பற்றிய செய்திகள் குறைந்தபாடில்லை. முல்லைத்தீவில் வான்புலிகள் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள் என ஒரு பத்திரிகையும் மற்றொரு பத்திரிகை ஒட்டிசுட்டானில் வான்புலிகள் தாக்குதலுக்குத் தயாராகுகின்றார்கள் என்றும் கூறியுள்ளது. தற்போதுள்ள நிலையில் சிறீலங்காவின் மக்கள் விடுதலைப் புலிகளின் விமானங்கள் எப்படியிருக்கும் என்பதைவிட அவற்றின் மூலம் நிகழப்போகும் தாக்குதல்களும் அவை நிகழ்த்தப்படக்கூடிய முறைகள் பற்றியுமே அறிய ஆவலாய் உள்ளார்கள். இந்த ஆவலை ஏற்படுத்தியுள்ளதுகூட அவர்களது பத்திரிகைகளும், பாதுகாப்புத்துறையுமே யாகும்.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டிருந்த ஒரு கட்டுரையில் விடுதலைப் புலிகளின் விமானங்கள் பற்றி இப்படிக் குறிப்பிடப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகள் தங்களது விமானப்படை பற்றி அறிவித்துள்ளனர். இன்று அது பற்றிய பேச்சே பரவலான அதிர்ச்சியை எம்மிடையே தோற்றுவித்துள்ளது. இன்று அவர்களது விமானங்கள் எனக்கூறி சில சிறிய விமானங்களின் படங்களை வெளியிட்டுள்ளார்கள். அவைகளை வைத்துப் பார்க்கும்போது தற்போதைக்கு ஆபத்து இல்லையென்றே தோன்றுகிறது. இப்படித்தான் அன்று கடற்புலிகள் பற்றி அறிவித்தபோதும் அரசாங்கம் சில சிறு டிங்கிகளை உதாரணத்திற்குக்காட்டி இவைதான் அவர்களது கடற்படை எனக் கூறியது. ஆரம்பத்தில் சிறு படகுகளுடன் தோற்றம் பெற்ற கடற்புலிகள் இன்று குறிப்பிட்டுக்கூறக்கூடிய ஓர் கடற்படைபோன்ற வசதிகளுடன் மாற்றமடைந்துள்ளது. இதுபோன்றுதான் தற்போதைய விமானப்படையும். சிறீலங்கா எதிர்பார்ப்பதுபோல் அது சாதாரணமானதல்ல. இன்று அவைகள் யாருமே அறிந்துகொள்ள் முடியாத ஓர்வகை விமானங்களைக் கொண்டிருந்தாலும் வரும்காலத்தில் அவைகளின் வளர்ச்சி மிகப்பாரியதாக இருக்கும். ஓர் விடுதலை அமைப்பிற்கு வான் படை என்பது அவசியமற்றதாக இருக்கலாம். ஆனால் அவ் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தனது அமைப்பானது ஓர் தேசிய இராணுவமாக அமையவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயலாற்றுகிறார். அதன் வளர்ச்சி வடிவங்கள் ஆரம்பம் முதல் இன்றுவரை மிகப் பாரியதாகவே இருந்திருக்கிறது. அதன்படி இராணுவம், கடற்படையென தற்போது வான்படையும் இணைக்கப்பட்டுள்ளது. ஓர் சாதாரண கெரில்லா இராணுவமாக தோற்றம்பெற்ற விடுதலைப் புலிகள் இன்று பல வகை படையணிகளைக் கொண்ட ஓர் இராணுவமாக மாற்றமடைந்துள்ளது மட்டுமல்லாமல் ஓர் பெரும் கடற்படை அணியையும் வைத்திருக்கின்றார்கள். அதே போன்று தற்போது தோற்றம் பெற்றுள்ள அவர்களது வான்படையும் நிச்சயம் சிறீலங்காவிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்பது எதிர்பர்க்கக்கூடியதே.

***


## தமிழ் ஒளி ஒலி நிகழ்ச்சிகளை பார்த்தும் கேட்டும் மகிழவேண்டாமா?

இந் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் தரமான புதிய Decorder எம்மிடம் உண்டு. இவ் Decorder மூலம் 90 இற்கும் மேற்பட்ட தமிழ், இந்தி, ஆங்கிலம், ஜேர்மன் உட்பட பல நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழலாம். இவற்றை ஜேர்மன் தொழில்நுட்ப முறையின் மூலம் பொருத்துவதற்கும், பழுது பார்ப்பதற்கும் நீங்கள் நாடவேண்டிய

**தொலைபேசி இலக்கம்: 0202741937**
**கை.தொலை பேசி இலக்கம்:. 0172293126**



## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.




**நித்தி:**
**தொலைபேசி: 0148050214**
**0613342518**
**0607348051**
**0148385825**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெற்றிவாகை சூடுவது எப்போது?

### தமிழ்நாட்டிலிருந்து 'சாதாரணன்' எழுதுகிறார்

## உடைபடும் மௌனம்

மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ., 'நந்தன்' டிசெம்பர் 1ம் திகதி இதழில் அளித்த பேட்டியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியா விதித்துள்ள தடையை நீக்கவேண்டும், தமிழகத்தில் நீண்ட காலமாக வாழும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பனபோன்ற கோரிக்கைகளை முக்கியமாக வலியுறுத்தி இருந்தார்.

தமிழீழப் போராட்டம் குறித்து தமிழகத்தின் ஆழ்ந்த மௌனத்தை நீண்டகாலத்திற்குப் பின் வை.கோ. தனது பேட்டியின் மூலம் உடைத்தெறிந்தார். வை.கோ. பேட்டி குறித்து அண்ணா தி.மு.க.வோ பிற அரசியல் கட்சிகளோ எதிர்த்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரஞ்செறிந்த போருக்கான ஆதரவு நீறுபூத்த நெருப்பாக தமிழகத்தில் நிலவி வருவது மட்டுமல்ல, பரந்துபட்ட வெகுமக்கள் தளத்தை மீண்டும் பற்றிப் படரத் தொடங்கியிருக்கிறது என்பதை இப்பேட்டி உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால் சுப்பிரமணியசாமி, வை.கோ பேட்டியை மிகக் கடுமையாக எதிர்த்து செய்தியாளர்கள் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினையை எழுப்புவேன் என்றும் அப்போது கூறினார்.

தமிழ்நாட்டின் 'இந்து' நாளேடும் 'தினமலர்' நாளேடும் வை.கோவின் நிலைப்பாட்டை விமர்சனம் செய்துள்ளன. வை.கோ. தனது பழைய பாதையான விடுதலைப் புலிகள் ஆதரவு பாதையில் செல்ல ஆரம்பித்துவிட்டார். இது ம.தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் சோர்வை ஏற்படுத்தியுள்ளது என்று அப் பத்திரிகைகள் எழுதி வருகின்றன.

வை.கோ. புதல்வர் திருமணத்தில் இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி உட்பட பலர் பங்கேற்றனர். திருமண நிகழ்வில் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் பங்கேற்றார். அத்வானி பங்கேற்ற நிகழ்ச்சியில் காசி ஆனந்தன் எப்படிப் பங்கேற்கலாம் என்று இந்தியாடுடே வார இதழ் கேள்வி எழுப்பியுள்ளது.

மௌனங்கள் உடைபடுவதை இந்து; தினமலர், இந்தியாடுடே போன்ற ஊடகங்கள் விரும்பவில்லை. ஆனால் மக்கள் உடைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

★ ★ ★

## மறக்கப்பட்ட டி.எஸ். சொக்கலிங்கம்

'எனக்கு கல்கிதான் தாகூர், கல்கி நிறுவனம் தான் சாந்தி நிகேதன்' என்று பத்திரிகையாளர் சாவி பெருமிதம் பொங்க எடுத்துரைத்தார் 'கல்கி நூற்றாண்டு விழா' கொண்டாட்டத்தில்.

பத்திரிகையாளர் கல்கி, ஆனந்தவிகடனில் பணியாற்றி, பின் கல்கி பத்திரிகையின் வாயிலாகத் தன் புகழ்க்கொடியை ஏற்றியவர்.

கல்கி, குருகுலத்தில் உருவானவர்களில் சாவி, பகீரதன், எஸ்.வி.எஸ், பி.எஸ்.மணி, விந்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் விந்தன் வேறுபட்டவர். 'மனிதன்' பத்திரிகையை நடத்தியவர். ராஜாஜி பஜ கோவிந்தம் எழுதியபோது விந்தன் பசிகோவிந்தம் எழுதினார். பீஷ்மர் ராஜாஜி, என்று ராஜாஜியைப் புகழ்ந்தவர் எஸ்.எஸ்.மாரிசாமி. பதவி இழந்த ராஜாஜியின் கருத்து நிலையையும் அரசியல் நிலையையும் ஆதரிக்கும் ஊடகத்தளத்தை நிறுவுவதில் கல்கி முன்னின்றார். கல்கியோடு, கல்கி சதாசிவம் [எம்.எஸ். சுப்புலட்சுமியின் கணவர்] க.சந்தானம் ஆகியோர் ஒத்துழைத்தனர். ராஜாஜியின் அரசியல் எதிரியாக உருவெடுத்தவர் பெருந்தலைவர் காமராசர். காமராசருக்குப் பெரும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்தவர் பத்திரிகையாளர் டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்கள். தினமணி நாளிதழின் முதல் ஆசிரியருமாவார். டி.எஸ். சொக்கலிங்கத்தின் கீழ் பணியாற்றியவர்கள்தான் ஏ.என்சிவராமன் புதுமைப்பித்தன் முதலானோர். தமிழில் அரசியல் கலைச்சொற்களை உருவாக்கியதில் திரு.வி.க. சாமிநாதசர்மா ஆகியோரோடு ஒருங்குவைத்து எண்ணப்படக் கூடியவர். 'நாளிதழ்' செய்திக் கலையின் முன்னோடி.

தினமணியிலிருந்து வெளியேறி "தினசரி" எனும் நாளிதழையும் நடத்தியவர். இத்தகைய பெருமைமிக்க டி.எஸ்.சொக்கலிங்கத்திற்கு இந்த ஆண்டுதான் நூற்றாண்டு.

கல்கி அவர்களுக்கு ஊர்தோறும் நூற்றாண்டு விழா. நூல்வெளியீடு என்று விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஏன் என்றால் கல்கிக்கு என்று ஒரு நிறுவனத்தளமும் உயர் அதிகார பீட ஆதரவும் இருக்கிறது. கல்கி, நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதற்குரிய தகுதி உடையவர் தான். டி.எஸ். சொக்கலிங்கம், காமராசர் கட்சி அமைய காரணமாயிருந்த பத்திரிகையாளர். பச்சைத்தமிழரை ஆதரித்த பச்சைத் தமிழர் சொக்கலிங்கத்திற்கு நூற்றாண்டுவிழா கொண்டாடுவது பற்றிய சிறு மூச்சுக்கூடக் காணோம். ஆனால் மேடைகள் தோறும் 'காமராசர் ஆட்சியமைப்போம்' என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. மறைக்கப்பட்டவர்களும் மறக்கப்பட்டவர்களும் தமிழகவரலாற்றில் இன்னும் ஏராளமானோராவர்.

★ ★ ★

## தமிழ் வெற்றிவாகை சூடுவது எப்போது?

'ஆங்கிலம் வெற்றிவாகை சூடிய வரலாற்றை ஆங்கில மொழி வரலாற்றைக் கற்றவர்கள் அறிவார்கள். தமிழ் வெற்றிவாகை சூடவேண்டும் என்றால் ஆங்கிலம் வெற்றிவாகை சூடிய வரலாற்றை அறிந்தாலே போதும். தமிழ் மேல் மூன்று மலைகள் ஏறி அமர்ந்து இருக்கின்றன. ஆட்சி நிலையிலும் கல்வி நிலையிலும் ஆங்கிலமலை, பண்பாட்டு நிலையிலும் வழிபாட்டு நிலையிலும் சமஸ்கிருதமலை, இந்திய ஒருமைப்பாட்டு நிலையிலும் மத்திய அரசு நிலையிலும் இந்திமலை இம் மூன்று மலைகளையும் உடைத்தால்தான் தமிழ் விடுதலைபெறும்.

இந்தியை எதிர்ப்பவர்கள், சமஸ்கிருதத்தை எதிர்ப்பவர்கள் ஆங்கிலத்தை ஆதரிக்கிறார்கள். தமிழை ஆங்கிலக்கோலூன்றி நடக்கும் ஔவைக் கிழவியாக எண்ணிவிட்டார்கள்போலும், தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் தமிழகக் கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும். இந்நிலையை எதிர்ப்பவர்களுக்கு மரண அடி கிடைக்கும் என்று எச்சரித்தார். தாய்மொழி தமிழில் வழிபாடு நிகழ்த்துவதை எதிர்க்கின்ற காஞ்சி சங்கராச்சாரியும், துக்ளக் சோவும் தேவாரம் திருவாசகம் யாருக்குப் புரியும் என்று எதிர்க்கேள்வி கேட்கின்றனர். தீண்டாமை கொடிய குற்றம் என்று காந்தியடிகள் கூறினார். சங்கராச்சாரியும் சோவும் தமிழையே தீண்டாமையாகக் கருதுகின்றனர். முற்று முழுமையான ஒரு மாற்றத்தை தமிழ் எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. தமிழை ஆட்சிமொழி ஆக்குகிறோம், தமிழைக் கல்வி மொழி ஆக்குகிறோம், தமிழை வழிபாட்டு மொழியாக்குகிறோம் என்பதைவிட ஆட்சிநிலை, கல்விநிலை ஆகியவற்றிலிருந்து ஆங்கிலத்தை அகற்றுகிறோம். தமிழகத் திருக்கோவில்களிலிருந்து சமஸ்கிருதத்தை அகற்றுகிறோம் என்று செயல்பட்டாலே போதுமானது, தமிழ்த்தாய் விடுதலை பெறுவாள் உறுதியாக.

★ ★ ★

# இந்தியச் செய்திகள்

## ஈராக் மீதான அமெரிக்க குண்டு வீச்சு இந்திய மார்நிலங்களவையில் பலத்த கண்டனம்!

ஆயுத கண்காணிப்பு பிரச்சினையில் ஈராக் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாக நடத்தி வரும் விமான குண்டு வீச்சு தாக்குதலுக்கு மாநிலங்களவையில் அநேகமாக அனைத்து உறுப்பினர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்திய மக்களின் கருத்தை உடனடியாக ஒருமுகப்படுத்தி வெளிப்படுத்த வேண்டுமென இந்திய அரசை வலியுறுத்தியுள்ளனர்.

ஈராக் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் நடத்திய தாக்குதல்கள் பற்றியும் ஈராக் நாட்டில் வாழும் இந்திய குடும்பங்களின் பாதுகாப்புப் பற்றியும் அயல் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அவையில் தெரிவித்ததைத் தொடர்ந்து ஒரு மணி நேரம் விவாதம் நடைபெற்றது. இந்தி விவாதத்திற்கு பதில் அளித்த அயல் துறை அமைச்சர் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா நடத்தும் தாக்குதலுக்கு எதிராக உறுப்பினர்களின் கோபத்திலும் கவலையிலும் அரசு முழுமையாக பங்கேற்கிறது என்றும் தேவைப்படும்போது தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்றும் தெரிவித்தார். ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது அதனிடம் கேட்காமலும் தெரிவிக்காமலும் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கொண்டுள்ள தாக்குதல்கள் கண்டனத்திற்குரியது என்றும் கூறினார்.

## காங்கிரஸ் தனித்தே ஆட்சி அமைக்கும்?

### சோனியா காந்தி அறிவிப்பு!

சொந்த பலத்திலேயே மத்தியில் ஆட்சியமைக்க காங்கிரஸ் விரும்புகிறது. அதே சமயம் மதச்சார்பின்மை ஜனநாயகம் சுயச்சார்பு ஆகிய கொள்கைகளில் நம்பிக்கையும் நாட்டு நலனில் அக்கறையும் உள்ள கட்சிகள் ஆதரவு தர முன்வந்தால் அதை ஏற்றுக்கொள்ளும் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அறிவித்துள்ளார். டெல்லியில் அனைத்திந்திய காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இதனை அறிவித்தார். அவர் மேலும் அவர் பேசுகையில் ஒரு நல்ல நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும், மத்திய பிராந்திய உணர்வுகள் என்ன என்றெல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு தெரியும் அதற்கேற்ற வலுவான நிர்வாகத்தை அதனால் தரமுடியும். இப்போதைய அரசு கவிழ்ந்து மாற்று அரசு அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் காங்கிரஸ் அக் கடமையை நிறைவேற்றும். அரசுடன் ஆக்கபூர்வமாக ஒத்துழைக்க காங்கிரஸ்



தயங்காது. அதே சமயம் தேச நலனுக்கு விரோதமான செயல்களை சகித்துக் கொள்ளாது. தேசிய கருத்தொற்றுமை அடிப்படையில் வெளியுறவுக் கொள்கை அமைய வேண்டும் என்றார் அவர்.

## மாராட்டிய மாநிலத்தின் உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி!

நான்கு மாநில சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று எழுச்சி பெற்றது.

சோனியா காந்தி காங்கிரஸ் தலைவராக பிறகு நடந்த முதல் தேர்தலான நான்கு மாநில சட்டசபை தேர்தல் காங்கிரஸ்காரர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியது. தற்போது மாராட்டிய மாநிலத்தில் நடந்த உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் வெற்றிப் பயணத்தை மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது.

மாராட்டியத்தில் உள்ள நான்கு மாவட்டத்திலும் காங்கிரஸ் மொத்தம் 130 இடங்களை வெற்றி கொள்ள பா.ஜ.க. 17 இடங்களை மட்டுமே தக்க வைத்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்திலேயே மூலிகை மருத்துவத்தின் முன்னோடிகள் தமிழர்தான்!

## தமிழக கல்வி அமைச்சர் க.அன்பழகன்

சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் தாவர இயல்துறை சார்பில் அமைக்கப்பட்ட மூலிகைத் தோட்டத்தை கல்வி அமைச்சர் அன்பழகன் திறந்து வைத்தார். அப்போது மருத்துவ தாவர விளக்க கையேட்டினையும் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:—

இந்த இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் துறையில் மூலிகை பற்றி முக்கிய ஆராச்சி உலகம் பூராவும் நடந்து வருகின்றது. ஆனால் நம் தமிழர்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மூலிகை பற்றிய ஆராய்ச்சியை தொடங்கி விட்டனர். தமிழர்கள் அன்று விந்திய மலைவரை வாழ்ந்து எந்தெந்த நோய்களுக்கு எந்தெந்த மூலிகைகளை பயன்படுத்துவது என்பது பற்றி அறிந்து வைத்திருந்தனர்.

இந்த உலகத்திலேயே மூலிகை மருத்துவத்தின் முன்னோடிகள் தமிழர்தான். தமிழர்கள் அழிக்கிறவர்கள் அல்ல; ஆக்குகிறவர்கள்.

ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதிகரித்த பிறகு ஆங்கில மருத்துவந்தான் சிறந்தது என்ற எண்ணம் அதிகரித்து சித்த மருத்துவம் உட்பட இயற்கை மருத்துவமே இன்று தேய்ந்து போய் விட்டது. அலோபதி மருத்துவத்தில் கூட இல்லாத மருத்துவ சிகிச்சை இயற்கை மருத்துவத்தில் உண்டு. மஞ்சள் காமாலை நோய்க்கு சித்த மருத்துவத்தில் தான் மருத்து உண்டு. சித்த மருத்துவம் இல்லையென்றால் அலோபதி மருத்துவம் கிடையாது. சித்த மருத்துவம் என்பது தமிழர் கண்டுபிடித்த மருத்துவ முறை என்பதில் நாம் பெருமை கொள்ளலாம். இன்று நம் நாட்டில் உள்ள நித்திய கல்யாணி மூலிகை கொண்டுதான் வெளிநாடுகள் முக்கிய மருந்துகளை தயாரிந்து வருகின்றது. எனவே நாம் இயற்கை வைத்தியத்தில் முளுக்கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் பேசினார்.

## அசாம் மாநில முதல்வர் செயலகம் அருகே கார் குண்டு வெடிப்பு!

அசாம் மாநில முதல்வர் பிரபுல்ல குமார் மகந்தாவின் செயலக வளாகம் அருகே சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். 36 பேர் காயமுற்றன்ர். காயமுற்றவர்களில் 26 பேர் நிலை கவலைக்கிடமாக உள்ளது. வெடி குண்டுடன் வந்த வெள்ளை நிறக் கார், முதல்வர் செயலகப் பகுதியில் உள்ள பெட்ரோல் நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு புறப்பட்டபோது இச்சம்பவம் இடம்பெற்றது.

# இந்திய மக்களவைக்கான துணை சபாநாயகராக

## காங்கிரஸ் வேட்பாளர் ஏகமனதாக தேர்வு!

இந்திய மக்களவைக்கான துணை சபாநாயகரைத் தேர்ந்து எடுப்பதில் கடந்த எட்டு மாத காலமாக ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இழுபறிப்பட்டன. ஆளும் கட்சிக்குரிய சபாநாயகர் பதவியை தெலுங்கு தேசக் கட்சிக்கு பா.ஜ.க. விட்டுக் கொடுத்தது. எனவே துணை சபாநாயகர் பதவி தனக்கு வேண்டுமென பா.ஜ.க. உரிமை கொண்டாடியது. ஆனால் இந்தப்பதவி பாரம்பரியமாக பிரதான எதிர்க்கட்சிக்கு அளிக்கப்பட்டு வருவதால் தனக்கு வேண்டுமென காங்கிரஸ் கட்சி கோரியது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாததால் துணைசபாநாயகர் பதவி எட்டு மாதங்களாக காலியாக இருந்தது. இந்நிலையில் துணைசபாநாயகர் பதவி காங்கிரசுக்கே அளிக்கப்பட வேண்டும் என பா.ஜ.க. கூட்டணியில் உள்ள முக்கிய கட்சிகளான அதிமுகவும், திரிணாமுல் காங்கிரசும் அறிவித்தன.

வேறு வழியில்லாததால் பாஜக தனது வேட்பாளரை விலக்கிக் கொண்டது. காங்கிரஸ் கட்சி தனது வேட்பாளராக சையீதை நிறுத்தியிருந்தது. இவர் லட்சத்தீவில் இருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இவரை ஆதரிக்கும் தீர்மானத்தை பிரதமர் வாஜ்பாய் முன்மொழிந்தார். எதிர்க்கட்சித் தலைவர் சரத்பவார் வழிமொழிந்தார்.

இதுபோல் அனைத்துக் கட்சி தவைர்களும் சையீதை ஆதரித்து தீர்மானம் கொண்டு வந்தனர். அதன்பிறது சையீத் அதிகாரபூர்வமாக தேர்ந்து எடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## வைகோ - நடிகர் ரஜனி சந்திப்பு

### தமிழக அரசியலில் மூன்றாவது அணி உருவாகின்றது?

மதிமுக பொதுச் செயலாளர் வைகோவின் மகன் திருமணத்திற்கு வாழ்த்தச் சென்ற நடிகர் ரஜனிகாந்த் இரண்டு மணி நேரம் வைகோவுடன் உரையாடினர் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்களை அரசியல் வட்டாரங்களில் எழுப்பியுள்ளன.

வைகோவின் மகன் திருமணத்தன்று செல்ல முடியாததால் நடிகர் ரஜனிகாந்த் தனது மனைவி லதாவுடன் சென்னை அண்ணா நகரில் உள்ள வைகோவின் வீட்டிற்கு சென்றிருந்தார். அவ்வேளையில் இருவருக்கும் இடையேயான பேச்சுகளில் த.மா.க, ம.தி.மு.க, பா.ம.க, ரஜினி மன்றம், மட்டுமின்றி பாரதிய ஜனதாவையும் கொண்ட மூன்றாவது அணியினை உருவாக்குவது பற்றி பேச்சு எழுந்தாக செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகைய அணி உருவாகும் பட்சத்தில் தேர்தல் பிரச்சாரக் களத்தில் ரஜினிகாந்த் இறங்குவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முரசொலி மாறன், ஜூனியர் விகடன் மீது ஜெயலலிதா வழக்கு தொடுப்பு!

ஐந்து கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டு முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் மீது அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்துள்ளார். சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் அவர் கூறியிருப்பதாவது:—

ஜூனியர் விகடன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் என்னையும் என் தோழி சசிகலாவைப் பற்றியும் அவதூறாக மாறன் குறிப்பிட்டுள்ளார். என்னைக் களங்கப்படுத்தும் நோக்கில்



வேண்டுமென்றே அவர் இப்படிக் கூறியுள்ளார். மாறன் கூறியதை பதிப்பித்த ஜூனியர் விகடன் பத்திரிகை ஆசிரியர் எஸ். பாலசுப்பிரமணியனும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும், இதற்காக மன்னிப்பு கேட்கவேண்டும் என்று இருவருக்கும் வழக்கறிஞர் மூலம் அறிவித்தல் கொடுத்தேன். மாறன் இதற்கு பதில் ஏதும் தெரிவிக்கவில்லை. எனக்கு நஷ்ட ஈடாக ஐந்து கோடி ரூபா தர வேண்டும். என்னை தனிப்பட்ட வகையில் விமர்சிக்கும் வகையில் எதிர்காலத்தில் எதையும் பிரசுரிக்கக் கூடாது என்று ஜூனியர் விகடன் பத்திரிகைக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் தெரிவித்துள்ளார்.

## வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி துரிதமாக நடந்து வருகின்றது. அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முடிவடைய உள்ள இந்த சிலை ரூ.8.5 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

*– தினபூமி இதழில்*

❀ ❀ ❀

☺ சுதந்திரப் போராட்ட வீரரும் பழம் பெரும் எழுத்தாளருமான சி.சு.செல்லப்பா தனது 87-வது வயதில் சென்னையில் காலமானார். இவரால் நடாத்தப்பட்ட எழுத்து என்னும் இலக்கிய இதழ் தமிழின் நவீன வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியதாகும். குறிப்பாக தமிழில் புதுக்கவிதை வடிவம் தோன்ற இவ்விதழ் களம் அமைத்துக் கொடுத்தது. தனது இறுதிக்காலம் வரையில் அவர் எழுதிக் கொண்டிருந்தார் என்பதற்கு மிக அண்மையில் வெளிவந்த நாவல் சாட்சியமாகும்.

*– தமிழ்நாட்டு நாளிதழ்களில் இருந்து*

❀ ❀ ❀

☺ நக்சல்பாரி இயக்கத் தலைவர்களில் ஒருவரான வினோத்மிஸ்ரா லக்னோவில் மாரடைப்பால் காலமானார். இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிட் லெனினிஸ்ட்) கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் பங்கேற்க வந்திருந்த போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு அவர் மரணமானார். அவர் இக்கட்சியின் பொதுச் செயலாளராக 23 ஆண்டுகள் அவர் பணியாற்றியுள்ளார். மேற்கு வங்கத்தில் நக்சல்பாரி இயக்கம் சாருமஜிந்தார் அவர்களால் தொடங்கப்பட்டபோது வினோத்மிஸ்ராவும் அதில் இணைந்து கொண்டார். பின்னர் நக்சல்பாரி இயக்கம் சிதைவுற்ற போது இவரும் பிரிந்து சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*– தமிழ்நாட்டு நாளிதழ்களில் இருந்து*

❀ ❀ ❀

☺ லெஸ்பியன் விடயம் எல்லோருக்கும் பிடிக்கும் என்பதில்லை. ஆனால் அது இல்லவே இல்லை என்பது நடந்து கொள்வது இயலாது. அல்லது அப்படி நடந்து கொள்வதால் பிரச்சனை தீரும் என்கிறதா சிவசேனை?

*– இந்தியா டுடெ இதழ் தலையங்கத்தில்*

❀ ❀ ❀

☺ 'கும்பகோணம் கோபாலு? படத்திற்கு தடை விதிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளதே?

இந்தப்படத்தின் கதாநாயகன் பாண்டியராஜன் தில்லுமுல்லு செய்பவராக நடித்திருக்கிறார். கதைப்படி அவர் கும்பகோணத்துக்காரராம். இது எங்களை இழிவுபடுத்துகிறது என்கிறார்கள் அந்த ஊர்க்காரர்கள். சர்ச்சை இருக்கட்டும். இந்தப் புகழை கும்பகோணம் எப்படிப் பெற்றது தெரியுமா? சென்ற நூற்றாண்டில் தமிழ்நாட்டில் ரயில் பயணம் செய்தார் ஒரு ஆங்கிலேயர். அவருடன் நல்லபடியாக பேசிச்கொண்டே அவருடைய பெட்டியை எடுத்துவிட்டு அந்த இடத்தில் தன் பெட்டியை வைத்து கம்பி நீட்டிவிட்டாராம் ஒரு தமிழர். அருமையாக பேசிய அவர் தன் சொந்த ஊர் கும்பகோணம் என்று சொல்லிக்கொண்டாராம். அந்த ஆங்கிலேயர் தாய்நாட்டுக்கு போய்ச் சேர்ந்ததும் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் மேற்படி விபரத்தை கடிதமாக எழுதிவிட்டாராம். அதுமுதல் ஆங்கிலேயர்களுக்கு கும்பகோணம் என்றாலே இளக்காரம்தான். அவர்கள் மட்டுமல்ல சென்ற வருடம் கேரளாவின் முதலமைச்சர் நாயனார்கூட கும்பகோண வேலை என்று சொல்லி கண்டனத்துக்கு ஆளானது நினைவிருக்குமே!

*– தமிழன் எக்ஸ்பிரஸ் இதழின் கேள்வி பதிலில்*

❀ ❀ ❀

☺ ஒழுக்கம், கற்பு என்று வாய் கிழியப் பேசுகிற நமது சமூகம் இந்த இரண்டு விடயங்களிலும் ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்ற ஒருதலைப்பட்சமான நீதியை வழக்கப்படுத்தி வந்திருப்பதை வெளிப்படையாகக் காட்டும் ஒரு முறைதான் தேவதாசி முறை.

இது ஆண்களின் வசதிக்காக அவர்களின் காம இச்சையை அவர்கள் விரும்பியபடி பூர்த்தி செய்ய ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டமிட்ட சூழ்ச்சியாகும். தேவதாசி முறையின்படி சமூகத்தில் சில பெண்கள் கடவுள் சேவை செய்வதற்காக தானம் செய்யப்பட்டனர். பெண்களுக்கு கற்பு நெறியை வலியுறுத்தும் அதே சமூக நியதியும் சமயமும்தான் தேவதாசி முறையையும் ஆண்டவனின் பெயரால் ஆதரித்தது. இதனால் தங்கள் குடும்ப கற்புக்கு களங்கம் வராமல் ஆனால் அதே சமயம் ஒடுக்கப்பட்ட பெண் மக்களை இதில் பலியாக்கி உயர்மட்ட ஆண்கள் தங்கள் இச்சையை பூர்த்தி செய்து வந்தனர். இதற்கு இந்து மதம் வலிமையான ஆதரவையும் அளித்து துணை நின்றது.

*– பெண்மணி இதழில் இருந்து*

❀ ❀ ❀

# தமிழ்நாட்டில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் அதிக இடங்களில் திமுக வெற்றி!

தமிழ்நாட்டு உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பதவிகளுக்காக நடந்த இடைத் தேர்தலில் திமுக அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. காலியாக இருந்த 1031 இடங்களுக்கு நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கட்சிச் சின்னங்களின் அடிப்படையில் நடைபெற்ற போட்டிகளிலேயே தி.மு.க. அதிக இடங்களைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலத்தீன் அமெரிக்கா

# மெக்சிக்கோ _ கியூபா முறுகல் நிலைக்கு முற்றுப்புள்ளி

மெக்சிக்கோ கடந்தவாரம் கியூபாவில் இருந்த தனது தூதுவரை மீள அழைத்துக்கொண்டது. இம் மாத ஆரம்பத்தில் இலத்தீன் அமெரிக்க தலைவர்களின் மாநாட்டில் கியூபத் தலைவர் பிடல் கஸ்ரோ மெக்சிக்கோவின் பொருளாதாரக் கொள்கைகள் அமெரிக்க சார்பாக இருப்பதாகக் கூறி மெக்சிக்கோ நாட்டின் இளைஞர்கள் தேசியத் தலைவர்களை தெரிந்துகொள்வதைவிட 'மிக்கிமவுஸ்' பற்றி நிறையத் தெரிந்து வைத்துள்ளார்கள் எனக் கூறினார். இவரது இக் கூற்று மிக நெருங்கிய நட்புறவு கொண்டிருந்த மெக்சிக்கோவிற்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. 1960 களில் கியூபா மீது தடைகள் கொண்டுவரப்பட்டபோது அந்நாட்டிற்கு ஆதரவாக குரல் கொடுத்தது மெக்சிக்கோ மாத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

கியூபத் தலைவரின் இப் பேச்சுக்களின் காரணமாக வருத்தமடைந்த மெக்சிக்கோ தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக அங்கு கடமையாற்றிய தனது தூதுவரை திருப்பி அழைத்துக்கொண்டது. கடந்த வெள்ளியன்று கியூபத் தலைவர் தனது வெளிவிவகார அமைச்சர் றொபேட்டோ றொபைனோவை தனது பிரத்தியேகக் கடிதத்துடன் மெக்சிக்கோ அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் உங்கள் நாட்டை மற்றெவரும் விரும்புவதைவிட நான் அதிகமாக விரும்புகிறேன். எனது பேச்சுக்களினால் மெக்சிக்கோவின் எந்தவொரு தனிமனிதனாவது வேதனைப் படுத்தப்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்பதில் நான் பின்நிற்கமாட்டேன். எனது பேச்சு மனதில் எதனையும் கொண்டிருக்கவில்லை என கூறினார்.

இதனையடுத்து மெக்சிக்கோ தனது தூதுவரை மீண்டும் அனுப்பியதுடன், இப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

## சீனா

# ஜனநாயகக் கட்சி அமைத்தவருக்கு 13 வருட சிறை

சீனாவின் கம்யூனிச ஆட்சிக்கெதிராக புதிய எதிர்க்கட்சி ஒன்றினை ஆரம்பித்து அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார் என குற்றம் சாட்டப்பட்டு சூவென்லி என்பவருக்கு 13 வருட கால சிறைத் தண்டனைய்யை கடந்த திங்களன்று சீன நீதிமன்றம் ஒன்று வழங்கியுள்ளது. அதிகம் பாதுகாப்பு வழங்கப்பட்டு நிகழ்த்தப்பட்ட இவ் விசாரணை மூன்றரை மணி நேரம் நீடித்ததாகச் சொல்லப்படுகின்றது. இதற்கிடையே மற்றுமொரு ஜனநாயக நடவடிக்கையாளரான லீ நியான்சுன் மருத்துவ காரணங்களைக் காட்டி சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இவரும் இவரது குடும்பமும் அரசியல் தஞ்சம் கோரி அமெரிக்கா செல்ல அனுமதிக்கப்பட்டனர். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட லீ மற்றும் அவரது மனைவி குழந்தை போன்றவர்கள் முதலில் கனடாவிற்கும், பின்னர் அங்கிருந்து நியூயோர்க்கிற்கும் செல்வார்கள். சுமார் மூன்றரை வருடம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த லீ, சர்வதேச ரீதியிலான கண்டனங்களையடுத்தே விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதுபோன்று சீனாவின் சிறைகளில் 250 இற்கும் அதிகமான ஜனநாயகவாதிகள் உள்ளதாக மனித உரிமைக் குழு ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

இக்குழு இவர்களது விடுதலைக்காக ஐ.நா சபை தலையிடவேண்டும் என அதன் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரியுள்ளது.

# புதிய இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சீனா வற்புறுத்தல் • அமெரிக்கத் தாக்குதல்களுக்கும் கண்டனம்

ஈராக்கிற்கும் ஐ.நாவின் ஆயுத பரிசோதனைக் குழுவினருக்குமிடையே தோன்றியுள்ள நெருக்கடிகளை தீர்த்துக்கொள்ள புதிய இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என சீனா வற்புறுத்தியுள்ளது. அத்துடன் அமெரிக்க மற்றும் பிரித்தானிய ஏவுகணை, விமானத்தாக்குதல்களையும் அது வன்மையாகக் கண்டித்தது. சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சூ பங்சாவோ சீனாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான சிங்குவாவிற்கு விடுத்த அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார். சீனா தற்போதைய நிகழ்வுகளுக்கு உடனடியான தீர்வுகள் ஏற்படுத்தப் படவேண்டும் என விரும்புகிறது. அதுவும் அரசியல் ரீதியானதாக இருக்க வேண்டும். நாம் அமெரிக்கா உடனடியாக ஈராக் மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் எனக் கோருகிறோம். அவர்களது நடவடிக்கை உலகை மிகவும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. ஐ.நாவின் முடிவுகளைக் கோராமல் இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஈராக்கியப் பிரச்சினைகளில் மேற்கொள்ளப்பட இருக்கும் எந்தப் பேச்சுக்களிலும் ஈடுபட தாம் தயார் எனவும் அவர் கூறினார்.

யாழ். இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளை நடாத்தும்

ஒளிவிழாவும் ஆண்டு விழாவும்

காலம்: 27.12.1998

இடம்: PAROISSE SAINTE HELENE
6, Rue Esclangon, 75018 Paris.
M°: Porte de Clignancourt

நேரம்: காலை 9 மணி

கலை நிகழ்ச்சிகளுடன் புதிய நிர்வாகக் குழுத்தேர்வும், 1998– ற்கான மலர் வெளியீடும் இடம்பெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

எமது கல்லூரியின் பழைய மாணவ, மாணவிகளையும் ஏனைய கல்லூரி பழைய மாணவ, மாணவிகளையும், சங்கங்களையும், எமது கல்லூரியின் நலன் விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளை.

## ஐரோப்பா

# பின் லாடெனின் நண்பரை ஜேர்மனி நாடு கடத்தியது

அமெரிக்க தூதரகங்கள் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான சம்பவங்களின் பின்னணியில் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள சவுதி அரேபிய கோடீஸ்வரரும் தற்போது ஆப்கானிஸ்தானில் வசித்து வருபவருமான ஓசாமா பின் லாடனின் நண்பரென கூறப்படும் 40 வயது நபரொருவர் ஜேர்மனியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருந்தார். மம்தூ சலீம் எனப்படும் அவர் அமெரிக்க நீதித்துறையின் கோரிக்கையின் பேரில் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளார். பலத்த பாதுகாப்புடன் மூனிச் விமான நிலையமூலம் அமெரிக்கா அனுப்பப்பட்ட அவர் அங்கு நடைபெறும் தூதரக தாக்குதல் விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படுவார் எனச் சொல்லப்படுகிறது. ஜேர்மனியின் சட்ட விதிகளுக்கமைய ஒருவர் மரண தண்டனையை எதிர்நோக்குவாரானால் அந்நாட்டிற்கு அவரை நாடு கடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவின் உறுதிகளை பெற்றுக் கொண்டபின்னரேயே அவர் அங்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் தனது பிரஜைகளை கொங்கோவிலிருந்து வெளியேறக் கோருகிறது

கொங்கோ குடியரசின் தலைநகர் பிறாசாவில்லிலிருந்து தனது பிரஜைகளை வெளியேறிக்கொள்ளுமாறு பிரான்ஸ் கோரியுள்ளது. அங்கு மீண்டும் அரச படைகளுக்கும் அவர்களுக்கெதிரான அமைப்பினருக்கும் இடையே மோதல்கள் தொடங்கியுள்ளது. கடந்த சில நாட்களாக இம் மோதல்கள் உச்ச நிலையை அடைந்து நகர் கட்டுப்பாடிழந்த நிலையில் காணப்படுகிறது.

பிரான்சின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் கடந்த சனியன்று விடுத்த அறிக்கையில் தலைநகர் பிறாசாவில்லில் இருந்து தனது பிரஜைகள் எவ்வளவு விரைவாக வெளியேறிக்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக வெளியேறுமாறு கோரியுள்ளது. தலைநகரின் விமான நிலையம் தொடர்ந்தும் திறந்தே உள்ளதால் 'ஏயர் பிரான்ஸ்' விமானங்கள் தொடர்ந்தும் அங்கு சென்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தலைநகரின் மையப் பகுதிகள் மற்றும் தென் பகுதி முழுவதும் கடந்த சில நாட்களாக குண்டுத் தாக்குதல்களுக்கும் துப்பாக்கிப் பிரயோகங்களுக்கும் உள்ளாகி வருகின்றன. பிரெஞ்சு அதிகாரிகளைப் பொறுத்தவரை 300 முதல் 450 வரையான பிரெஞ்சு பிரஜைகள் தலைநகரில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பிரெஞ்சுத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். அத்துடன் பிரெஞ்சுப் படைகள் பிறாசாவில் பகுதியில் உள்ள மற்றைய நாடுகளின் மக்களையும் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

கடந்தவார ஆரம்பத்தில் ஜனாதிபதி டெனிஸ் சசூ என்கேசூவின் படைகளுக்கும் அங்கோலாவின் ஆதரவுடனான முன்னாள் பிரதமர் பெர்னாட் கொலேலாசின் படைகளுக்கும் இடையே மோதல்கள் ஆரம்பமாகின. இவை பின்னர் நகரின் முழுப்பகுதிக்கும் பரவி உள்ளன.

இதற்கிடையே சீன அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தற்போது கொண்டுள்ள இராணுவ மனப்பான்மையை விடுத்து பேச்சுக்களின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்கவேண்டும் என கோரினர்.

## பங்களாதேஷ்

# படகு விபத்தில் 9 பேர் மரணம் 72 பேரைக் காணவில்லை

பங்களாதேசின் தென்கிழக்கு பகுதியான தெக்நாவிலிருந்து சென்மாட்டின் தீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இயந்திரப்படகு ஒன்று அதிக பாரம் காரணமாக கவிழ்ந்ததில் 9 பேர்கள் மூழ்கி மரணமானதுடன், 72 பேர்களைக் காணவில்லை எனச் சொல்லப்படுகின்றது. விபத்திற்குள்ளாகிய இப் படகில் கூள்னா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட 111 பேர்கள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இதே வேளை சிற்றாகோங் மாவட்டத்தில் சங்கா ஆற்றில் பயணம் செய்துகொண்டிருந்த மற்றுமோர் படகு கவிழ்ந்ததில் 9 சிறுவர்கள் மூழ்கி மரணமானதுடன், மேலும் 6 பேர்களைக் காணவில்லை எனவும் சொல்லப்படுகிறது. பங்களாதேசின் பல தீவுகளை இணைக்கும் போக்குவரத்தாக படகுப் பணயங்கயேயுள்ளன. அநேகமான சந்தர்ப்பங்களில் இப் படகுகளில் பயணிகள் அளவுக்கதிகமாக ஏற்றப்படுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. வருடாந்தம் ஆயிரத்திற்கும் அதிகமானோர் இந்தப் படகு விபத்துக்களின் மூலம் பங்களாதேசில் மரணமடைவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக் மீதான தாக்குதல்கள்


# ஈராக் மீதான நான்கு நாள் தாக்குதல்கள் முடிவுக்கு வந்தன

## ஈராக்கிற்கு வெற்றி - *சதாம்,* இலக்குகளை அழித்தோம் - *அமெரிக்கா*

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா மற்றும் பிரித்தானியா மேற்கொண்ட நான்கு கட்ட தாக்குதல்கள் கடந்த ஞாயிறுடன் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல்கள் மூலம் தாம் ஈராக்கின் இராணுவ நிலைகளையும் அழிவிற்கான ஆயுதங்கள் மறைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இடங்களையும் தாக்கி அழித்துவிட்டதாக மேற்கண்ட நாடுகளின் பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இத் தாக்குதல்கள் முடிவடைந்தன என அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களின் பின் மக்கள் மத்தியில் தோன்றிய ஈராக் அதிபர் சதாம் குசேன், இத் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான மக்களை கொல்ல மாத்திரமே அமெரிக்காவாலும், பிரித்தானியாவாலும் முடிந்ததே தவிர வேறு எதனையும் சாதிக்க அவர்களால் முடியவில்லை. இத் தாக்குதல்களை வெற்றிகரமாக எதிர்கொண்ட ஈராக்கிய



விமான எதிர்ப்பு படைப்பிரிவினருக்கு நன்றி தெரிவித்த அவர் இத்தாக்குதல்கள் ஈராக்கிற்கு வெற்றியையே பெற்றுக்கொடுத்திருக்கின்றன எனக் கூறினார். இத் தாக்குதல்களின் முடிவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் மெடலின் ஓல்பிறைட், நான்கு நாட்கள் நடந்த தாக்குதல் பற்றிய விபரங்களை வெளியிட்டார். அதில் நான்கு இரவுகள் தமது விமானங்களும் ஏவுகணைகளும் நடத்திய தாக்குதல்களில் அழிக்கப்படவேண்டிய ஆயுத நிலைகள் என தாம் கருதும் 19 இடங்களையும் ஈராக்கிய விசேட பாதுகாப்பு படையணிகளின் தலைமைக் காரியாலயங்களையும் விமான எதிர்ப்பு நிலைகளையும் தாக்கி அழித்ததாகக் கூறினார். நான்கு நாட்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 இலக்குகளை 400 ஏவுகணைகள் தாக்கியதாயும் 650 முறை தங்களது விமானங்கள் பறந்ததாயும் கூறினார். இதற்கிடையே ஈராக்கின் ஐ.நா. தூதுவர் நிசார் ஹம்டூன், இந்த நான்குநாள் தாக்குதல்களில் ஈராக்கின் பொது மக்கள்



நிலைகள் மாத்திமே தாக்கப்பட்டன என்றும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டோ, காயப்பட்டோ உள்ளனர் என்றும், ஈராக்கின் ஏராளமான கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் இதுவரை காலமும் ஈராக் வழங்கிவந்த ஒத்துழைப்புக்கள் யாவும் நடந்துமுடிந்த தாக்குதல்கள் மூலம் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் கூறிய அவர் ஐ.நாவின் ஆயுத பரிசோதனைக்குழுவினர் தேடி அறிய வேண்டிய நிலைகள் யாவும் நடந்து முடிந்த தாக்குதல்களின் மூலம் அழிக்கப்பட்டுவிட்டன. ஆகையால் மீண்டும் ஈராக்கிற்குள் இக் குழுவினர் வரவேண்டிய அவசியம் இருக்காது என்றும் கூறினார். அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் கோஹென் தமது 200 F-16, B-1B விமானங்கள் தொடர்ந்து நடாத்திய தாக்குதல்கள் மூலம் சதாம் குசேனின் அணு ஆயுத கிடங்குகளும் ராடர் வசதிகொண்ட விமான எதிர்ப்பு நிலைகளையும் தாக்கியழித்தன என்றும் கூறினார். அமெரிக்க விமானங்கள் ஈராக்கின் எண்ணெய்க் குதங்களைத் தாக்கியதாக கேள்வி எழுப்பப்பட்டபோது, ஆம்! ஈராக் திருட்டுத்தனமாக சட்டவிரோதமான எண்ணெயைக் கடத்துவதைத் தடுக்கவே நாம் அவற்றைத் தாக்கினோம் எனக் கூறினார்.

இதற்கிடையே ஈராக் அதிபர் ஞாயிறன்று தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார். முழு இராணுவ உடையில் தோற்றமளித்த அவர், ஏகாதிபத்திய நாடுகளின் ஆக்கிரமிப்பினை ஈராக்கிய மக்கள் கடவுளின் அருளுடன் எதிர்கொண்டுள்ளனர். இறுதியான வெற்றி ஈராக்கிய மக்களுக்கே கிடைத்துள்ளது எனத் தெரிவித்தார்.

# ரஷ்யா, பிரான்ஸ், சீனா இணைந்து புதிய ஈராக் தீர்வுக்கு முயற்சி

ரஷ்யா கடந்த ஞாயிறன்று வெளியிட்ட ஒரு அறிக்கையில் ஈராக்கிற்கெதிரான புதிய பிரச்சினைகளை நிறுத்தி இறுதியான ஓர் தீர்விற்கு வருவதில் தானும் தனது சக பாதுகாப்புச் சபை அங்கத்தவர்களுமான சீனா மற்றும் பிரான்ஸ் தயாராகி உள்ளதாக கூறியுள்ளது. ரஷ்ய அதிபர் ஜெல்சின் இது பற்றித் தெரிவிக்கையில், ஈராக்கின் பிரச்சினையில் பலத்தைப் பிரயோகிப்பதானது ஓர் குழப்பத்தை மட்டுமே ஏற்படுத்தும் என்பது தெளிவாகியுள்ளது. ஆகவே உடனடியான அரசியல் தீர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என அவர் தெரிவித்தார். அண்மைக்காலமாக ஐ.நாவின் பாதுகாப்புச் சபை ஈராக்கிற்கெதிராக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை ரஷ்யா தொடர்ந்தும் கண்டித்தே வருகிறது. பாதுகாப்புச் சபையின் மற்றைய ஐந்து அங்கத்தவர்களது முடிவுகளை தனது மேலாண்மையைப் பாவித்து முறியடிக்கும் உரிமையை ரஷ்யா கொண்டுள்ளது.

இதற்கிடையே பிரெஞ்சு அதிபர் ஜக் சிராக் கடந்த 8 வருடகாலமாக ஈராக்கின்மேல் மேற்கொள்ளப்பட்டுவரும் சர்வதேச எண்ணெய்த் தடையை மீளாய்வு செய்யவேண்டும் என்றும், அங்கு வாழும் மக்களின் வாழ்வில் சகஜ நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் ஈராக்கின் அன்றாட நிலைமைகள் உடனடியாக திருத்தப்படவேண்டும் என்றும் கோரியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக அங்கு வாழும் மக்கள் பல ஆண்டுகளாக அனுபவித்துவரும் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் அது அவசியமானதாகும். அதைச் செய்ய எம்மால் முடியும். அவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எம்மிடம் ஏராளமான ஏற்பாடுகள் உள்ளன என பிரெஞ்சு அதிபர் மேலும் கூறினார்.

பெல்ஜியம் இத் தாக்குதல்கள் பற்றிக் கூறுகையில், நடந்து முடிந்த தாக்குதல்கள் ஐரோப்பிய ரீதியில் ஒன்றுபட்ட முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய காலத்தினை அறிவித்துள்ளது என்றும், இத் தாக்குதல்கள் 'எல்லை மீறிய செயல்' என்றும் குற்றம்சாட்டியுள்ளது. அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தொலைக்காட்சி நிறுவனமொன்றிற்கு கடந்த வாரம் பேட்டியளிக்கையில், ஐக்கிய நாடுகள் சபையின் அணுகுமுறைகள் சர்வதேச பிரச்சினைகளில் செயற்படுத்தப்படுவதில்லை. ரஷ்யா, சீனா மற்றும் ஐரோப்பியநாடுகளை வாஷிங்டனும் இங்கிலாந்தும் தாக்குதல்களை மேற்கொள்ளமுன் கலந்து ஆலோசிக்கவில்லை. ஐரோப்பிய பங்காளர்களை கலந்து ஆலோசிக்காது இங்கிலாந்து மேற்கொண்ட முடிவானது ஐரோப்பிய ரீதியில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியத்தினைத் தோற்றுவித்துள்ளது எனக் கூறினார்.

இதற்கிடையே புனித பாப்பரசர் ஜோன்போல் அவர்கள் அமெரிக்க தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்தார். அவர் தனது வாராந்த உரை நிகழ்வில் ஈராக்கிய மக்களுக்காக தனது அனுதாபங்களைத் தெரிவித்ததுடன், சர்வதேச ரீதியான சட்டங்களை மீறி நடந்து முடிந்த இந்நிகழ்வுகளையிட்டு தாம் ஏமாற்றமடைவதாகவும் அவர் கூறினார்.

# உலகத் தலைவர்கள் எதிர்ப்பு

அமெரிக்க பிரித்தானிய தாக்குதல்கள் எதிர்பார்த்த அளவிற்கு ஆதரவினை இந்நாடுகளுக்குப் பெற்றுக்கொடுக்கவில்லை. சில காலத்திற்கு முன்வரை ஈராக்கிற்கெதிரான கொள்கைகளைக் கொண்டிருந்த பல அரபு நாடுகள் கூட அமெரிக்காவின் இத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்திருந்தன. ஈராக்கின் அண்டை நாடான சிரியா மற்றும் கொள்கை ரீதியான வேற்றுமைகளைக் கொண்டிருந்த லிபியா போன்ற நாடுகள் கூட அமெரிக்கத் தாக்குதல்களைக் கண்டித்தன. லிபியத் தலைநகர் திரிப்போலியில் பல்லாயிரம் மக்கள் திரண்டு ஈராக் ஆதரவுக் கோஷங்களை எழுப்பியதுடன், அமெரிக்க கொடிகளை தீயிட்டுக்கொழுத்தினர்.

அமெரிக்காவின் தாக்குதல்களை கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகள் மாத்திரம் வெளிப்படையாக ஆதரித்தன. அதேவேளை ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் இத் தாக்குதல்களை நிறுத்தி இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளை அணுகவேண்டும் எனக் கூறின. இத்தாலி வெளிப்படையாக தாக்குதல்களை எதிர்த்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

மத்திய கிழக்கின் பல நாடுகளில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கடந்த ஞாயிறு இடம்பெற்றன. இதில் மக்களால் அமெரிக்க எதிர்ப்பு கோஷங்கள் கோஷிக்கப்பட்டதுடன், சதாமிற்கு ஆதரவாகவும் அவர்கள் குரலெழுப்பினர். எகிப்தில் மேற்கொள்ளப்பட்ட ஊர்வலம் ஒன்றின் போது அமெரிக்க பிரித்தானிய அதிபர்களது கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. பாலஸ்தீனத்தில் காசா மற்றும் மேற்குக் கரை பகுதிகளில் பல ஆயிரம் மக்கள் திரண்டு அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சில நாட்களுக்கு முன்னர் இப் பகுதிக்கு அமெரிக்க அதிபர் விஜயத்தினை மேற்கொண்டபோது அமெரிக்கக் கொடிகளை உயரத் தூக்கிப் பிடித்து கிளின்டனை வாழ்த்திய அதே மக்கள், ஐந்து நாட்களின் பின்னர் அமெரிக்கக் கொடிகளைத் தீயிட்டுக் கொழுத்தியதுடன். வீதிகளில் கிளின்டனின் படத்தினை ஒட்டி அதன் மேல் நடந்தனர். அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வெளியுலகிற்கு மறைக்கும் வகையில் யாசிர் அரபாத் அரசிற்குச் சொந்தமான தொலைக்காட்சியையும், வானொலிகளையும் கட்டுப்படுத்தினார். சில தனியார் வானொலி நிலையங்கள் மூடப்பட்டன. ஆனால் வீதிகளில் திரண்ட மக்கள் வெள்ளத்தை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

உலகின் பல நாடுகளிலும் குறிப்பாக இஸ்லாமிய பெரும்பான்மையினரைக் கொண்ட நாடுகள் உட்பட வேறு நாடுகளிலும் பரவலாக அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. அநேகமான நாடுகளின் தொலைக்காட்சிகள் ஈராக்கின் மீதான தாக்குதல்களை ஒளிபரப்பிக்கொண்டிருந்தவேளை, அண்டை நாடான குவைத் மாத்திரம் உதைபந்தாட்டப் போட்டிகளையும், பொழுதுபோக்கு நிகழ்வுகளையும் ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

பாகிஸ்தான்

# இஸ்லாமாபாத்தில் ஐ.நா-தலிபான் பேச்சுவார்த்தைகள்

ஐக்கியநாடுகள் சபையின் விசேட தூதுவர் லக்தர் பிறாகிமி ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்களான தலிபானுடன் பேச்சுக்களை மேற்கொள்வதற்காக கடந்த சனியன்று பாகிஸ்தான் வந்துசேர்ந்தார். தலிபான் ஆட்சியாளர்களின் உயர்மட்ட தலைவர் உட்பட்ட தூதுக்குழுவினர் ஐ.நாவுடன் பேச்சுக்களை நடாத்த அனுப்பிவைக்கப்பட்டனர். இரு தரப்பினரும் அண்மைக் காலமாக ஈரானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையே தொடரும் பிரச்சினைகளை சுமூகமாக தீர்ப்பது பற்றி ஆராய உள்ளனர். கடந்த ஒகஸ்ட் மாதம் மசார் ஈ செரிவ் பகுதியில் ஈரானிய இராஜதந்திரிகள் சிலர் தலிபான்களால் கொலைசெய்யப்பட்டனர். இதனையடுத்து ஈரானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையே இருந்த உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டது. இந்தக் கொலைகள் சம்பந்தமாகவும் ஐ.நா. தூதுக் குழுவினர் விசாரணைகளை மேற்கொள்ளுவார்கள் எனச் சொல்லப்படுகிறது. கொலை நடந்த இடத்திற்கு இத் தூதுக்குழுவினர் விஜயம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அங்கு சரியான பாதுகாப்பு வழங்கப்படாத வரை அங்கு செல்வது சாத்திய மற்றது என குழு மறுத்துவிட்டது.


இதேவேளை தலைநகர் காபூலில் நிலைகொண்டிருந்த ஐ.நாவின் தொண்டர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் இத்தாலிய தொண்டர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமடைந்ததைத் தொடர்ந்து, அங்கிருந்து வெளியேறி இருந்தனர். இவர்களை மீண்டும் வரவழைப்பது பற்றியும் பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டனில்

# ஆச்சீஸ்

## ஆச்சீசில் நத்தார் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை டிசம்பர் 14 முதல்.



[1] புதிய மூன்று CD க்கள் 14.99 மட்டுமே.
[2] ஏனைய மூன்று CDக்கள் 9.99 மட்டுமே.
[3] AUDIOக்கள் 50 p இல் இருந்து.
[4] CDக்கள் 99 p இல் இருந்து.
[5] புதிய பழைய ஒறிஜினல் PYRAMID அல்லது AINGHARAN வீடியோக்கள் 4.99 மட்டுமே.
[6] வீடியோ CD க்களும் 4.99 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
[7] இலங்கை இந்திய பத்திரிகைகள் புத்தகங்கள் அனைத்துக்கும் 'ஆச்சீஸ்'.

இலவசம் 30 பவுண்களுக்கு மேல் கொள்வனவு செய்வதற்கு PYRAMID இன் 38 புதிய பாடல்கள் அடங்கிய இசைப் புதையல் பாடல் கசட் (VIDEO) இலவசம்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**Archie'S**

**205, Edgware Road, Colindale-Nw 9.**
**Tel: 0181 205 36 52 / Fax: 0181 205 16 18**

---

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

சிறுவர் கல்வி நிதிக்காக வழங்கும்

# நடனமாலை 98

இலண்டனில் பிரபல்யம் மிக்க நடன ஆசிரியைகளினதும் கலைஞர்களினதும் இருநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றும் பிரமாண்டமான நடன மாலைப்பொழுது

காலம்: 20.12.98
மாலை 6 மணி

இடம்
**WALTHAM FOREST ASSEMBLEY HALL**
**FOREST ROAD**
**WALTHAMSTOW**
**LONDON E17**

அனுமதி: சிறுவர் £5.00
தனிநபர் £7.50
குடும்பம்: £20.00











0181 - 520 5876
0181 - 550 4010
0181 503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# கணிப்புகள் மாறாது

'விடுதலைப் புலிகளை அழிக்க அதாவது தமிழ் தேசியத்தை ஒழிக்க எந்த சாத்தானுடனும் கூட்டுச் சேருவேன்' என்பது நரித்தன அரசியல்வாதியான ஜே.ஆர் ஜெயவர்த்தனா 80 களில் முழக்கமிட்ட பேரினவாதக் கூச்சலாகும்.

இன்று அதே கூச்சலின் அடியொற்றி சிங்கள தேசத்தை அரசோச்சும் சந்திரிகாவும் தமிழ் தேசியத்தை யுத்தமொன்றின் மூலமாக அடக்கிவிட கணக்குகளை எவ்வாறெவ்வாறெல்லாமோ மாற்றிப்போட்டுப் பார்க்கிறார். புதிது புதிதாக இராணுவ படைகளை மாற்றி மாற்றி நியமித்து போரை நடாத்தினால் ஒருவேளை வெற்றி தம் பக்கம் சேர்ந்துவிடாதா? என்பது அவரின் நப்பாசை.

கடந்தவாரமும் தமிழர் தாயகத்தின் மீதான போரினைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு சிங்கள தேசத்திற்கு ஒரு புதிய தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பேரினவாத பௌத்தத்தின் 'பிரித் ஓதுதல்களுடனும்', 'காப்பு கட்டுதல்களுடனும்' தமிழ் தேசியத்தை வெற்றிகொள்ள ஆசிவேண்டிய தளபதி தனது கதிரையை பொறுப்பேற்றுள்ளார். பதவியை பொறுப்பேற்ற கையோடு சிங்கள மக்களுக்கு 'கிளர்வு' உரையொன்றினை ஆற்றிய தளபதி விடுதலைப் புலிகளிடமுள்ள பகுதிகளை மீட்டெடுத்த பின்னர் தான் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு 'தீர்வு' ஒன்றினைப் பற்றிப்பேச அவகாசம் வழங்கப்படும் என்ற அதிகார தோரணையிலும் குரைத்துள்ளார்.

சிங்கள தேசத்தில் ஒருவர் அரசியல் தலைமையாகவோ அல்லது இராணுவ தலைமையாகவோ வரவேண்டுமானால், 'தமிழ் மக்கள் மீது வெறிகொண்டு பாய்ச்சல் ஒன்றினை நடாத்தியிருக்கவேண்டும்.' அவ்வாறாயின் தான் அவர்களுக்கு சிங்களத்தின் தலைமைப் பதவி கிடைக்கும். இது காலம் காலமாக பின்பற்றப்படும் சிங்களக்கோட்பாடாகும். இக் கோட்பாட்டிற்குள்தான் புதிய தளபதியும் அடங்குகிறார். தனது பங்காக தமிழர் தாயகத்தில் நடாத்திய வெறித்தனமான போருக்காக 'ரண விக்கிரம', 'ரண சூர' ஆகிய விருதுகளைப் பெற்றபோதிலும், தமிழ் தேசிய இராணுவத்தின் கட்டுமான வளர்ச்சியினை இன்று நேரடியாக காணும் வரலாற்று சாட்சியுமாகிறார். எத்தனையோ சிங்கள தளபதிகள் ஏறி விழுந்த 'பழைய குதிரையிலே' புதியவரும் ஏறியுள்ளதால் அவருக்கும் என்ன நடக்கும் என்பது ஒன்றும் மறைபொருளான விடயமல்ல.

தமிழர் தாயகத்தின் 'நீதியான போராட்டத்தினை' முறியடிக்க சிங்கள தேசம் எவ்வளவுதான் புதிய இராணுவ கணக்குகளை போட்டாலும் முடிவாகிப்போன தீர்மானமான கணக்கினை பொய்ப்பிக்க அதனால் இயலாது என்பதே வெட்ட வெளிச்சமான விடயமாகும்.

## கிறிஸ்மஸ் செய்தி

# விழித்திருங்கள் இலட்சியப் பார்வையையும் பாதையையும் இழந்துவிடாதீர்

**- எஸ்.ஜே. இம்மனுவேல்**

**என் உடன் பிறப்புக்களே!**

உலகம் முழுவதும் பரந்து பல்வேறு சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் சகோதரங்களை இந் நாட்களில் நினைவுகூர்கிறேன். சிலரை நேரில் கண்டேன், பலரை மனத்தில் கொண்டேன், உயிர் வாழத் துடிப்போர் வன்னியிலும், அந்நியரால் அடக்கப்படுவோர் குடாநாட்டிலும் அநீதியின் நிமிர்த்தம் கைது செய்யப்பட்டு சிங்கள சித்திரவதையில் துவழுகின்றவர் மறியல் குகைகளிலும், அடைக்கலம் தேடி அயல் நாடு சென்றோர் இந்தியாவிலும் மற்றும் பல நாடுகளிலும், அந்நிய பகைமை மத்தியிலும் வருங்காலத்தைப் பற்றிய கேள்விக்குறிகளுடனும் நாளுக்குநாள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இயேசுவின் தாயின் பிரசவப் பயணமும் ஈழத்தாயின் விடுதலைப் பயணமும் இரண்டும் வேதனைகள் பல நிறைந்தவை. இரண்டும் அதிகார வெறிகொண்டவரின் அடக்குமுறையின் விளைவாகத் தோன்றியவை. இரண்டையும் மன உறுதியுடன் உண்மை, நீதி, நேர்மை இவைகளின் அடிப்படையில் போராடி வெற்றிபெறவேண்டியவை.

ஏரோது மன்னனைப் போன்றவர்களின் கொடுரங்களும் அன்னை மரியின் அவலங்களுமே இயேசு பிறப்பதற்கு கருத்தூட்டும் தொட்டில் சம்பவங்களாய் இருந்தன. இவை அனைத்தையும் மரியாள் மனத்தில் சுமந்துதான் இயேசுவைப் பெற்றெடுத்தாள்.

ஈழத் தமிழ்த்தாயின் நீண்ட பயணம் ஒரு பக்கத்தில் பலரைப் பலிவாங்கிற்று. பலரை பட்டினிச்சாவின் எல்லைக்குத் தள்ளிவிட்டது. பலரைப் பரதேசிகளாக்கிற்று மறுபக்கத்தில் மனித பலவீனத்தில் பலரைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாகவும் உண்மையை மறுக்கும் மௌனிகளாகவும், நீதியைக் கைவிடும் போலி அரசியல்வாதிகளாகவும் ஆக்கிற்று.

இவை எல்லாம் அதிசயமல்ல. இவைகள் நடந்தேறும்போது இறைவனின் வருகையும் மனிதனின் விடுதலையும் அண்மித்துவிட்டது என்பதே அர்த்தம். ஆகையினால் விழித்திருங்கள் இலட்சியப் பார்வையையும் பாதையையும் இழந்துவிடாதீர். களைத்துவிடாது காட்டிக்கொடுக்காது வீறுநடை போடுங்கள். உண்மையை நன்கு உள்வாங்குங்கள். உரிமைகளை உணர்ந்து கடமைகளைச் செய்யுங்கள். வெறும் பேச்சில் நின்றுவிடாது கடும் மூச்சுடன் செயற்படுங்கள்.

துன்பத்தின் மத்தியில் உண்மையிலும் நீதியிலும் நடந்து செல்வோரே இறைவனையும் அவரின் விடுதலையையும் கண்டடைவோர்.

இயேசுக்கிஸ்துவின் பிறப்பு விழா உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் புதிய ஒளியை ஒளிர்விக்கட்டும். இருள் நீங்கி ஒளி பிறக்கட்டும்.

*நன்றி: தொடுவானம்*

## தமிழீழத்திற்கான

# புறச்சூழ்நிலைகளை தூண்டும் வீரசூரியா

## பார்வை

'மரியாதைக்குரிய மகா சங்கத்தினர்களே!' இவ்வாறுதான் தனது முதலாவது உத்தியோக பூர்வ உரையை புதிய இராணுவத் தளபதி சிறிலால் வீரசூரிய ஆரம்பித்தார். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆதார பலத்தை தலைமை தாங்கும் இராணுவத் தளபதி பேரினவாத்தின் அச்சாணியாக திகழும் பௌத்த மகா சங்கை துதித்துப் பணிந்து ஆற்றிய முதலாவது உரையானது தேசியத் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் உரையில் பேரினவாதம்பற்றி தெளிவுபட உரைத்த கருத்துக்களுக்கு ஆதாரமாக அமைகிறது. தமிழர் தாயகத்தைவிட்டு தனது இராணுவம் வெளியேறாது எனவும் அதனை ஏற்றுக்கொண்டால் மட்டுமே பிரபாகரன் பேசலாம் எனவும் அப்பட்டமான இராணுவ வெறித்தனத்துடனும், இனவெறி கூச்சலுடன் புதிய தரைப்படைத் தளபதி ஓலம் இட்டுள்ளார்.

சிங்கள - தமிழ் தேசியங்களுக்கான எதிர்கால முரண்பாட்டை வீரசூரியாவின் உரை தெளிவாக வரைவு செய்கிறது. தமிழர் பூமியை ஆக்கிரமிப்பது என்ற போர் இலக்கைத் தெளிவுபடுத்திய தளபதி எதிரியின் சதிவலையில் (பேச்சு வார்த்தைகளில்) சிறீலங்கா விழக்கூடாது என எச்சரித்துள்ளார்.

சிங்கள தலைமையின் மூல விசையாக திகழும் படைகளின் தளபதி வரைந்துள்ள இக் கோடுகள் போர் துரிதப்படுத்தப்பட்டு - மூர்க்கப்படுத்தப்பட உள்ளது என்பதற்கான அறிவிப்பாகும். ஆட்பற்றாக்குறை ஆயுத தளபாட பற்றாக்குறை, மனோவியல் உறுதி பற்றாக்குறை என்பனவற்றால் அவதியுறும் தனது படைகளை தட்டி எழுப்பும் போர்க் கோசங்களையே வீர சூரிய முன்வைக்கிறார்.

(அ) புலிகளை நம்பவேண்டாம்.
(ஆ) அரசு ஒப்புக்கொண்டாலும் கூட நாம் ஆக்கிரமிப்புக்களை நிறுத்தமாட்டோம்.
(இ) தமது இராணுவத் தோல்விகளுக்கு காரணம் நிர்வாக குறைபாடுகளே.
(ஈ) எனது பதவிக்காலத்தில் புலிகளை அழிப்பேன்.

என்பன வீரசூரியாவின் கோசங்களாகும். யாழ். குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்தபோது குடாநாட்டு தளபதியாக இருந்த வீரசூரியா செம்மணி படுகொலைகளிற்கான பொறுப்பை ஏற்க வேண்டியவர் ஆவர். ஓர் போர்க்குற்றவாளியை தரைப்படைத் தளபதியாக்கி அவர் மூலம் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் நாள் உரைக்கு பதிலளித்த சிங்கள இனவாத இயந்திரம் மறைமுகமாக இரு உண்மைகளை அவர் மூலம் ஒப்புக் கொண்டுவிட்டது.

(அ) ஆட்பற்றாக்குறை மனோவியல் போர் தோல்வி
(ஆ) புலிகளின் வரலாற்றுப் பாத்திரம்.

புலிகளை பலவீனப்படுத்தி, அவர்களை போரிட முடியாதவர்கள் ஆக்குவதன் மூலம் மட்டுமே தமிழர் பிரச்சினையை தீர்க்கலாம் என வீர சூரிய போதிக்கின்றார்.

இராணுவம் ஆட்பற்றாக்குறையால் தள்ளாடுகின்றது. புதிய ஆட்களை இணைப்பது கடினமாக உள்ளது. எனவே போரில் ஈடுபடும் துருப்பினர்களை கொமாண்டோக்களாக' பயிற்றுவித்து அதனை ஈடுசெய்யலாம் என தளபதி அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்.


வரலாற்று ரீதியாக பார்க்கும்போது இராணுவ தளபதிகள் மாறும்போது புதிய தளபதிகள் வீர உரைகளை ஆற்றுவது இயல்பானது. ஓய்வு பெறும் தளபதி லெப். ஜெனரல் தளுவத்தையின் பதவிக்காலத்தில் இராணுவத்தின் பாத்திரம் சிங்கள அமைப்பின் ஆதாரமாகவும், தலைமை சக்தியாகவும் உருமாற்றம் பெற்றது. போர்முனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி-செறிவுபடுத்தி போரினைப் பேரினவாதத்தின் இரைப்பைக்குள் இட்டு அதன் வெற்றியில் திளைக்கலாம் என்ற சந்திரிகாவின் கணிப்பை பாவித்து இராணுவத் தலைமை தீர்க்கமான சக்தியாக பூதாகரமாகியுள்ளது. வெற்றிவிழாக்கள்- வீர பதக்கமிடல்கள் - பெரும்தொகை நிதிக்குவிப்பு என்பன இத் தலைமை பாத்திரத்தை தகவல் ஊடகங்கள் ஊடாக சிங்கள வெகுசனங்களிடையே வேர்விடவைத்துள்ளது.

கடந்த 4 வருட இராணுவ விரிவாக்கம் இராணுவத் தலைமையை மேலும் மேலும் பலப்படுத்தி அரசியல் கட்சித் தலைமைகளை புறம்தள்ளி வருகிறது.

இன்று புலிகளும்-அரசும் ஐ.நா மத்தியத்துவத்துடனோ அல்லது அதுபோன்ற மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்துடனேயே பேசி உடன்பாட்டிற்கு வரினும் வீரசூரியாவின் அனுமதியின்றி சந்திரிகாவினால் உடன்பாட்டை எட்டமுடியாது. வீரசூரியா சிங்கள இராணுவ நலன்களையும், தான் வணங்கிப் பூசிக்கும் மரியாதைக்குரிய மகா சங்கின் அபிலாசைகளையும் பிரதிபலிப்பார். இராணுவ நலன்கள் மூர்க்கமானது. இனப் படுகொலை நடாத்த பயிற்றுவிக்கப்பட்டது. போரின் முடிவு தமது அதிகாரத்தின் இறுதியாகக் கருதி போரைத் தொடர விரும்புவது பௌத்த பேரினவாத மகாவம்ச கனவுகளில் மிதப்பது. மறுபுறம் சிங்கள மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய அல்லது கருத்துக்களை வழிநடாத்தக்கூடிய அரசியல் சக்திகள் இந்த அமைப்பினை ஏற்று அதன் நிழலில் தமக்கான பாத்திரத்தையே நாடுவர்.

இந்த சூழலில், போரிற்கான வரைவுகள் தெளிவாக புலப்படும் நிலையில், தமிழீழம் உருவாகுவதற்கான புறச்சூழ்நிலையை வீர சூரியா எமக்கு ஏற்படுத்தி தருகிறார் என்றே நாம் கருதவேண்டும். நீதியான தீர்வுக்கு தடையாக உள்ள கற்களை அகற்றியே ஆகவேண்டிய தமிழர்கள் அக்கற்களாக ஆக்கிரமிப்பு இராணுவமே நிற்பதால் அதனை விரட்டியடிக்க முடிவு செய்வது இயற்கையானது.

*— ராஜா*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க காங்கிரஸ் வட்டமேசை மாநாடு

# உண்மைகளின் அதிர்வலைகள்?

**கொழும்பு இராணுவ ஆய்வாளர் தராகியின் கட்டுரையைத் தழுவி...**

**11 டிசெம்பர் 1998**

**வாஷிங்டனிலுள்ள ரேபேர்ண் அலுவலகம் 2238 இலக்க அறை.**

நிர்வாக அதிகாரிகள் பாணியில் உடையணிந்த கனவான்களும், கனவதிகளும் அமர்ந்திருந்து மாநாடொன்றினை நடாத்துகின்றனர். அவர்களால் கூறப்படும் விடயங்களை நோக்குனர்களாக அமர்ந்திருப்போர் உன்னிப்பாகக் கவனிக்கின்றனர்.

மாநாட்டின் கருப்பொருள் என்ன?

ஈராக் நாடு மீதான அமெரிக்க தாக்குதல்?

அமெரிக்க அதிபர் மீதான பதவியிறக்கல் நடவடிக்கை?

இவை இரண்டுமே அல்ல. சிறீலங்காவில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் மேம்பாடு உண்டா? என்பது பற்றி ஆய்வு செய்வதற்காக அமெரிக்க காங்கிரஸ் செயற்குழுவால் கூட்டப்பட்ட வட்டமேசை மாநாடுதான் அது.

வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்கள் அனைவரும் உலகளாவிய ரீதியில் மனித உரிமை சம்பந்தமான துறையில் விசேட கவனம் செலுத்துபவர்களானதால் மனித உரிமை மீறல்களின் குகையாக விளங்கும் சிறீலங்காவின் பால் அவர்களின் கவனமும் ஈர்க்கப்பட்டிருந்தது.

**உலகில் ஈராக் நாட்டில் மக்கள் காணாமற் போவதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடம் சிறீலங்காவிற்குத்தான். இப்போது மனித உரிமை மீறல்கள் சிறீலங்காவில் ஒரு பாரிய விடயம்தான்.**

திரு. ஹானஸ் ஹோக்றிபே தலைமையில் கூட்டப்பட்ட இம் மாநாட்டில் அவரது தலைமையுரையின் கருத்து என்ன?

### சர்வதேச மத்தியஸ்தம் சிறீலங்காவுக்கு வேப்பங்காய்

தற்போது நிலவும் பிரச்சினையை தீர்ப்பதற்கு சிறீலங்காவிற்கு பல தடவைகள் முன்வைக்கப்பட்ட சர்வதேச மத்தியஸ்தத்தினை அந்நாட்டு அரசு பல தடவைகள் நிராகரித்துள்ளமையை சிலாகித்துப்பேசிய அவர், வடக்கு, கிழக்கில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யவென அமைக்கப்பட்ட மனிதவுரிமை ஆணைக்குழுகூட செயற்படாமலிருப்பதை சுட்டிக்காட்டினார்.

அடுத்ததாக, சமாதானத்திற்கும் நீதிக்குமான ஆசிய பசுபிக் நடுவகத்தைச் சேர்ந்த செல்வி. கொலின் மலோன் அவர்கள் உரையாற்றும் போது.... (இவர் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை அவதானிக்க அங்கு சென்றிருந்தவர். அண்மையில் தான் அங்கிருந்து திரும்பியவர்)

### மனித உரிமையை காக்க அமெரிக்க ஆயுதப் பயிற்சி?

சிறீலங்காவில் அமெரிக்க அரசின் 'காலூன்றலைச்' சுட்டிக்காட்டி தனது உரையை ஆரம்பித்த மலோன், அமெரிக்க அரசினால் சிறீலங்கா படையினருக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்காக என விளிக்கப்படுவதை நிராகரித்ததுடன், இவ்வாறான பயிற்சிகளின்போது உயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஆயுதப் பயிற்சிகள் அமெரிக்காவால் வழங்கப்படுவதை சுட்டிக்காட்டியது ஒரு பொருத்தமான விடயமுமாகிறது.

அமெரிக்க அரசு விடுதலை புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னணி அது கொண்டிருக்கும் வியாபார நலன்களுக்காவே எனவும் தெரிவித்த மலோன், இதன் காரணமாகத்தான் வர்த்தகத்துறையில் ஆர்வம் கொண்டிருந்த ஒருவர் தூதுவராக நியமிக்கப்பட்டதை எடுத்துக்கூறிவிட்டு சிறீலங்காவில் தான் தங்கியிருந்த காலப்பகுதியில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் நடைபெறும் மனிதவுரிமை மீறல்களை மக்களினதும், வைத்தியர்களின் ஆதார கூற்றுக்களுடன் பட்டியல் படுத்தினார்.

- ★ **தண்ணீருக்குள் தலைமை அமிழ்த்தி மூச்சு திணறலை ஏற்படுத்தல்**
- ★ **கால் பெருவிரலில் அல்லது கை விரலில் இழையினை கட்டி தொங்கவிட்டு இரும்பு குழாய்களினால் தாக்குதல்**
- ★ **எழுதுகோலை காதுக்குள்ளே வைத்து அடித்தல் (முழு செவிப் புலனையும் இழக்கவைப்பது)**

போன்ற கொடூரமான சித்திரவதைகளை பட்டியல் படுத்திய அவர் கிழக்கில் இவற்றை



புரிவதற்காக கடுமையான இராணுவ அதிகாரிகள் அனுப்பிவைக்கப்படுவதாக மக்கள் தெரிவித்ததையும் எடுத்துக் கூறி,

வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல தலைநகர் கொழும்பிலும் தமிழர்களுக்கு சோதனைச் சாவடிகளில் ஏற்படும் தொந்தரவுகளையும் தெரிவித்துவிட்டு ஒரு முக்கியமான விடயத்திற்கு தனது பேச்சினை நகர்த்தினார்.


விடுதலைப் புலிகள் சிறார்களை யுத்தத்தில் ஈடுபடுத்துகிறார்கள் என சிறீலங்கா அரசு பிரச்சாரப்படுத்தும் அதேவேளை, இராணுவ முகாம்களில் 9, 11 வயதான தமிழ் சிறார்கள் பெற்றோர்களின் அனுமதியின்றி, இராணுவத்தினரின் அச்சம் காரணமாக (வேலைக்கு அனுப்ப மறுத்தால் முழுக் குடும்பமும் பழிவாங்கப்படும் என்ற இராணுவ மிரட்டல்) வேலை வாங்கப்படுகிறார்கள். அரசின் ஆதரவுடன் இயங்கும் தமிழ் குழுக்களும் இதைச் செய்கின்றன.

சிறீலங்காவில் இருக்கும் மனித உரிமை ஆணைக் குழுக்களில் மக்களுக்கு நம்பிக்கைகிடையாது. ஏனெனில் அங்கு நீதி கிடைக்கும் என்று மக்கள் நம்புவதில்லை. செம்மணி புதைகுழிகள் தொடர்பாகவும் தமிழ் மக்களுக்கு சர்வதேச சமூகத்தில் மிகுந்த மனக்குறை உண்டு. உலகின் மற்றைய பகுதிகளில் இவ்வாறான புதை குழிகள் பற்றிய விசாரணைகள் நடைபெறும் போது எமது விடயத்தில் மட்டும் ஏன் சர்வதேச சமூகம் பாராமுகமாக நடக்கின்றது என்பதே அவர்களின் கேள்வி. உண்மையில் இக் கேள்விக்கு என்ன விடை என்பது எனக்கும் தெரியவில்லை. எனத் தெரிவித்து முடித்ததும்,

### 'அமெரிக்கப் பார்வை'

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. ஜெரி லியுடேர் அமெரிக்க 'பார்வையை' விளக்கினார். யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பினருமே மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதுதான் அவரது கருத்து (விடுதலைப் புலிகளால் உரிமை கோரப்படாத சில குண்டு வெடிப்புகளையும், கொலைகளையும் குறிப்பிட்டு, அதனை புலிகள்தான் செய்தார்கள் என்பது அவரது விளக்கம்)

ஆனால் அடுத்ததாக சர்வ



தேச மன்னிப்பு சபையின் திரு. ஸ்ரீபன் ரிச்சாட் அவர்கள் உரையாற்றியபோது ஜெரி லியுடேரின் விளக்கம் அடிபட்டுப்போய் விட்டது.

**செம்மணி புதைகுழிகள் தொடர்பாகவும் தமிழ் மக்களுக்கு சர்வதேச சமூகத்தில் மிகுந்த மனக்குறை உண்டு. உலகின் மற்றைய பகுதிகளில் இவ்வாறான புதை குழிகள் பற்றிய விசாரணைகள் நடைபெறும்போது எமது விடயத்தில் மட்டும் ஏன் சர்வதேச சமூகம் பாராமுகமாக நடக்கின்றது என்பதே அவர்களின் கேள்வி.**

ஈராக் நாட்டில் மக்கள் காணாமற் போவதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடம் சிறீலங்காவிற்குத்தான். இப்போது மனித உரிமை மீறல்கள் சிறீலங்காவில் ஒரு பாரிய விடயந்தான். செம்மணி புதைகுழிகள் விடயத்தில் மன்னிப்புச் சபை அரசிற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்தபடிதான் உள்ளது. அரசு மனித உரிமைகளை பாதுகாப்பதாக கூறிக்கொண்டாலும் அரசபடைகள் அவ்வாறு செய்கின்றனவா? என்பது அவர் எழுப்பிய ஒரு கேள்வி.

இக் கேள்விக்கு 'போவன்' அமைப்பைச் சார்ந்த செல்வி. எலிசபெத் 'போவன்' அவர்கள் பின்னர் வழங்கிய விளக்கம் ஒருவேளை விடையாகக்கூட அமையலாம்.

### உணவு - மருந்துத்தடை போர்க்குற்றம்

பொஸ்னியா, ருவண்டா போல சிறீலங்காவின் பிரச்சினை இருந்தாலும் ஒரேயொரு வித்தியாசமான வியடம் என்னவென்றால் உலகு இதனை அசட்டை செய்வதுதான். சுமார் 6 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்றபோதிலும் அவர்களுக்கு உணவு, மருந்து தடை விதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு போர்க் குற்றமாகும். போரிலே பொது மக்களுக்கு எதிராக இவ்வாறான நிலை கடைப்பிடிக்கப்படுவது ஒரு போர்க் குற்றம்தான்.

சிறீலங்காவிலே நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டமானது, மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவற்றுக்கு தோற்றுகால் வகிக்கின்றது. அரச பயங்கரவாதத்தினால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கினார்கள். இது அவர்களின் நடைமுறைவாதம்.

போர் காரணமாக சொற்ப தொகையினரான சிங்கள மக்களும், முஸ்லீம்களும் இடம் பெயர்ந்தாலும் தமிழ் மக்கள் வன்னியில் படும் அவலங்களைப் போன்று, அவர்கள் அனுபவிப்பதில்லை. அவர்கள் வசதி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்கிறார்கள். என்பதைக் குறிப்பிட்ட போவன்

- ★ **அமெரிக்க காங்கிரசினது அமெரிக்க அரசின் சிறீலங்கா தொடர்பான கொள்கைகளை மீளாய்வு செய்யவேண்டும்.**
- ★ **வன்னி பகுதிக்கான உணவு தேவையை உறுதிப்படுத்த காங்கிரஸ் தனது சக்தியை பயன்படுத்தவேண்டும்.**

இது போவனின் வாதங்கள்.

### கிளிநொச்சி சமர்

அதையடுத்து சர்வதேச செயற்குழுவைச் சேர்ந்த திருறிச்சாட் ரிஜோஷ் அவர்களே கிளிநொச்சி சமரில் அரச படைகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி விளக்கினார். 2000 இற்கும் மேற்பட்ட துருப்பினர் கொல்லப்பட்டனர். இவர்களில் 600 பேரின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் 23 பாரவண்டிகளில் ஏற்றிச்செல்லப்பட்டன என்பதையும் குறிப்பிட்டு சாதாரணமாக ஒரு போரிலே பத்துச்சிப்பாய்கள் பங்கெடுத்தால் அதில் மூவர் கொல்லப்பட்டு ஏழுபேர் காயப்படுத்தப்படுவது வழமை. ஆனால் சிறீலங்காவிலே மட்டும் ஒன்பது பேர் கொல்லப்படுவதுடன், ஒருவர் மட்டுமே உயிர் தப்ப முடிகிறது என்ற விளக்கத்தையும் தெரிவித்தார்.

இதன் பின்னர் கேள்வி பரிமாறல்கள் இடம்பெற்றன. **அநேகமான கேள்விகள் யாவும் அமெரிக்க-சிறீலங்கா அரசுகளுக்கு இடையிலான இராணுவ ஒத்துழைப்பு பற்றியும், அதன் காரணமாக மனித உரிமைகள் எவ்விதம் உறுதிப்படுத்தப்படும் என்ற சந்தேகத் தொனியில் அடிக்கடி தொக்கி நின்றமை தவறு 'ஒன்றினை' இழைத்துவிட்டோம் என்ற அமெரிக்க மக்களின் மன உறுத்தலின் விளைவுதானா? என்பதுதான் கேள்வியாக உள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா — பிரித்தானியா தாக்குதல்களின் இலக்குகள் அடையப்பட்டனவா?

அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் விமானங்கள் மீண்டும் ஒருமுறை ஈராக்கின் மேல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. அமெரிக்கா வளைகுடாவில் நிறுத்தியிருந்த தனது போர்க் கப்பல்களிலிருந்து ஏவுகணைத் தாக்குதல்களையும் ஈராக்கை நோக்கி மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவும், பிரித்தானியாவும் நான்கு நாட்கள் நடாத்திய இந்தத் தாக்குதல்களின் மூலம் எதனை அடைய முயற்சிக்கின்றது. தான் நடாத்திய இத் தாக்குதல்கள் எதிர்பார்த்த பலனைத் தந்தனவா? இதன் மூலம் என்ன தீர்வை இவ்விரு நாடுகளும் உலகிற்கு வைக்கின்றன. இவைதான் இன்று உலகின் முன் எழுந்துள்ள கேள்விகளாகின்றன.

1991-ம் ஆண்டு ஈராக்கியப் படைகள் குவைத்தினை ஆக்கிரமித்ததுடன், வளைகுடா யுத்தம் மீண்டும் ஆரம்பமாகியது. அதுவரை அமெரிக்காவின் உற்ற நண்பனாக இருந்துவந்தது ஈராக் என்பது குறிப்பிடத் தக்கது. குவைத் ஆக்கிரமிப்பின் பின் சதாம் ஹுசேனை அழிக்க வேண்டும் என்பதிலோ அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதிலோ அமெரிக்கா கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவருகிறது. ஆனால் அதனது ஒவ்வொரு நடவடிக்கையும் ஈராக்கினால் தொடர்ந்து



முறியடிக்கப்பட்டுவரும் நிலையில் தற்போது அது எடுத்துள்ள புதிய வடிவத்தின் ஓர் அங்கம் இது என அறிய முடிகிறது.

கடந்த தடவை அமெரிக்கா மேற்கொண்ட போர் முயற்சிக்கு பல நாடுகளின் ஆதரவு வெளிப்படையாகவே கிடைத்தது. ஆனால் இம்முறை தனது தாக்குதல்களிற்கு நட்பு நாடுகளிடமிருந்தே எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருசில நாடுகள் அமெரிக்க பிரித்தானிய தாக்குதல்களை ஆதரித்துள்ள அதேவேளை அநேகமான நாடுகள் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளன.

உலகளாவிய ரீதியில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. மத்திய கிழக்கு நாடுகள், ஆசிய நாடுகள் போன்றவற்றில் மட்டுமல்லாது ஐரோப்பிய தலைநகர்களில்கூட அமெரிக்க எதிர்ப்பு தலைதூக்கியுள்ளது. ஆனாலும் அமெரிக்காவும், பிரித்தானியாவும் தாம் செய்ததை நியாயப்படுத்தும் அதேவேளை அதற்கான காரணங்களையும் வரிசைப்படுத்துகின்றன. அவைகளைப் பொறுத்தவரை தாம் நடத்திய தாக்குதல்களால் தாம் எதிர் பார்த்த வெற்றிகளை அடைந்துள்ளதாக கூறுகின்றன. இராணுவ, புலனாய்வு மற்றும் அழிவிற்கான ஆயுதக் களஞ்சியங்கள், ஆயுதக் கிடங்குகள் போன்றவை தமது தாக்குதல்களால் அழிக்கப்பட்டுள்ளதாக இவ்விரு நாடுகளின் இராணுவத்

## கண்காணிப்புக் குழுவினரின் எதிர்காலம் என்ன?

## மீண்டும் தாக்குதல் தொடருமா?

தளபதிகள் அட்டவணையிட்டுக் காட்டுகின்றனர்.

ஆனால் தாக்குதல் நடந்த இடத்திலோ அழிந்துபோனவை பொதுமக்கள் சொத்துக்கள் மரணித்தவர்கள் சிறுவர்களும், பெண்களும் என செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈராக் மீதான பொருளாதாரத் தடையை ஐ.நா விதித்ததன் பின் கடந்த 8 வருடங்களாக அதனது இரண்டு அமைப்புக்கள்

1. ஐ.நாவின் விசேட குழு

2. வியன்னாவை மையமாகக்கொண்ட சர்வதேச அணுச்சக்தி அமைப்பு போன்றவை ஈராக்கில் நிலைகொண்டு அந் நாட்டில் உயிரியல் மற்றும் அணு ஆயுதங்கள் பாவனையில் உள்ளனவா என்றும் அவைகள் அழிக்கப்பட்டுவிட்டனவா என்றும், நீண்டதூர எறிகணைகள் ஈராக்கினால் அழிக்கப்பட்டுவிட்டதா என்பதையும் ஆராய்ந்து வருகின்றன.

இதற்கிடையே அந்நாட்டு மக்கள் ஐ.நாவின் பொருளாதாரத் தடையால் என்றுமில்லாத இன்னல்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றனர். மத்திய கிழக்கின் கல்விஅறிவு கூடிய ஓர் இனமும், நாகரிக சமூகத்தினையும் கொண்ட ஈராக் கடந்த 8 வருடங்களாக பெரும் அழிவுகளை சந்தித்து வருகிறது. இதற்குக் காரணமாக நேரடியாகவே அமெரிக்காவைக் குற்றம் கூறலாம்.

ஐ.நாவின் கோரிக்கைகளை ஈராக் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால்தான் தாம் அதன் மேல் நடவடிக்கை எடுக்கிறோம் என அடிக்கடி அமெரிக்கா கூறி வருகிறது. உலகெங்கும் பல நாடுகளின் நடக்கும் மனித உரிமை மீறல்களை ஐ.நா கண்டித்து வருகிறது. அத்துடன் பல நாடுகளின் அரசுகளுக்கு எதிராகவும் அது குற்றங்களையும், கண்டனங்களையும் தெரிவித்துவருகிறது. வெளிப்படையாகக் கூறப்போனால் மத்திய கிழக்கில் ஐ.நா.வின் கோரிக்கைகளையும் முடிவுகளையும் எதிர்த்துவரும் நாடாக இஸ்ரேல் காணப்படுகிறது. பல வருடங்களாக ஐ.நாவின் முடிவுகளை அது ஏற்றுக்கொண்டதாக • என்றுமே அறியமுடியவில்லை.

ஒவ்வொரு முறையும் இஸ்ரேலின்மேல் நடவடிக்கைகள் எடுக்க ஆயத்தாகும்போதும் அந் நாட்டிற்கு பாதுகாப்பு வழங்கி முண்டுகொடுத்து வருவது அமெரிக்காவே. மத்திய கிழக்கில் ஒரு புறம் மனித உரிமை மீறல்களுக்கும் அடாவடித் தனங்களிற்கும் ஆதரவு தெரிவிக்கும் அமெரிக்கா மறுபுறம் மற்றொரு நாட்டின் மேல் தாக்குதல் நடாத்துவது என்பது வேடிக்கைக்குரிய விடயமாகும். ஐ.நாவின் முடிவுகளை இஸ்ரேல்’ அமுல்படுத்தவில்லை எனும்போது அதனைத் தண்டிக்க ஏன் இந்த அமெரிக்காவால் முடியவில்லை. ஏன் ஓர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அது முயலவில்லை. ஏனென்றால் அமெரிக்காவின் பலம் பொருந்திய சமூகமாக யூத சமூகம் காணப்படுகின்றது.

**ஐ.நாவின் முடிவுகளை இஸ்ரேல் அமுல்படுத்தவில்லை எனும்போது அதனைத் தண்டிக்க ஏன் இந்த அமெரிக்காவால் முடியவில்லை.**

அந்த சமூகத்தின் பலத்தினாலேயே அமெரிக்கப் பொருளாதாரம் பலம்பெறுகின்றது.

அடுத்ததாக உலகின் மற்றைய நாடுகளை எடுத்தால் பல நாடுகளில் குறிப்பாக வடகொரியா, சீனா போன்றவை அமெரிக்க எதிர்ப்பு நாடுகளாக தங்களை இனங்காட்டிக்கொண்டுள்ளன. ஏன் இந்த அமெரிக்காவால் மேற்கண்ட நாடுகள்மேல் தாக்குதல் நடாத்த முடியாது. வாயளவில் எதிர்ப்பினை காட்டிக்கொண்டு மறைமுகமாக சமாதான முயற்சிகளில் ஈடுபடத்தான் இதனால் முடியும். ஆனால் ஈராக்கின்மேல் தாக்குதல்களை நடாத்தினால் இன்றைய நிலையில் கேட்க யாருமே இல்லை என் [illegible] தாக்குதல்களின் துணிவு.

ஐக்கியநாடுகளின் ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் பல வருடங்களாக ஈராக்கில் தங்கியிருந்து தங்கள் பரிசோதனைகளை மேற்கொண்டுவந்தனர். பல தடவைகள் இக் குழுவிற்கும் அரசிற்குமிடையே இழுபறிகள் ஏற்பட்டனவாயினும் அவை உடனடியாக தீர்க்கப்பட்டே இருந்தன.

ஆனால் இவ்வருட ஆரம்பத்தில் அக்குழுவின் ஓர் அங்கத்தவர் உளவாளி எனக் காரணம் கூறி ஈராக்கினால் வெளியேற்றப்பட்டார். இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும்




இடையே மீண்டும் சிக்கல்நிலை. பெப்பரவரிமாதம் 20ம் திகதி பெரும் பரபரப்பிற்கு மத்தியில் ஐ.நாவின் பொதுச் செயலர் கோபிஅனான் பாத்தாத்திற்கு விஜயம் செய்து உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டார். அதனைத் தொடர்ந்து மார்ச் மாதமளவில் இக் குழுவினர் மீண்டும் தமது வேலைகளை ஆரம்பித்தனர்.

தங்களது 7 வருட பரிசோதனையில் முதல்முறையாக ஜனாதிபதி மாளிகைகளில் ஆயுத பரிசோதனைகளில் ஈடுபட்டனர். இதற்கிடையே யூலை மாதம் மீண்டும் ஆயுதப் பரிசோதனைக் குழுவினருக்கும் ஈராக்கிய அரசிற்கும் இடையே முரண்பாடுகள், இதற்குக் காரணமாக அமைந்தவை 1980 முதல் 88 வரையிலான வளைகுடா யுத்தத்தில் ஈராக் பயன்படுத்திய ஆயுதங்கள் பற்றிய விபரக்கோர்வைகள். ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் ஈராக்கிய அரசிடம் இந்த 8 வருட கால யுத்த ஆயுதப் பட்டியலைக் கேட்டபோது ஈராக் அதனை வழங்க மறுத்தது. இதற்கிடையே சர்வதேச அணுசக்தி அமைப்பு ஈராக்கிடம் அணு ஆயுதம் சம்பந்தமான பொருட்கள் எவையும் இல்லை என உறுதிப்படுதியது. இதனையடுத்து ரஷ்யா ஈராக்கின் மீதான பொருளாதாரத் தடையை அகற்றுமாறு பாதுகாப்புச் சபையின் முன் கோரிக்கை விடுத்தது. நவம்பர்மாதம் 11ம் திகதி ஐ.நாவின் ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் தங்களது சேவையை இடைநிறுத்தி ஈராக்கைவிட்டு வெளியேறினர்.

இதனையடுத்து உடனடியாக ஈராக் ஆயுத பரிசோதனைக் குழுவினருக்கு மீண்டும் தமது ஒத்துழைப்பை வழங்காவிடில் ஐ.நாவின் உத்தரவின்பேரில் தாம் தாக்குதல்களை நடாத்துவோம் என அமெரிக்கா கூறியது. இதன்படி நவம்பர் மாதம் 14ம் திகதி தாக்குதல்களை நடாத்த உத்தேசித்திருந்த போதிலும் ஈராக் மீண்டும் ஒத்துழைப்பு வழங்க இணங்கியதையடுத்து தாக்குதல்கள் ரத்துச்செய்யப்பட்டன. சுமார் ஒருமாத காலம் எந்தவித பிரச்சினைகளும் இல்லாது வேலைகளை பரிசோதனைக் குழுவினர் தொடர்ந்தனர். டிசெம்பர்மாதம் 16ம் திகதி ஐ.நாவின் ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் திடீரென ஈராக்கைவிட்டு வெளியேறினர். இக்குழுவின் தலைவர் ரிச்சேட் பட்லர் அமெரிக்க அரசிடம் ஈராக் தங்களது பரிசோதனைகளுக்கு முற்றுமுழுதான ஆதரவினை வழங்கவில்லையென குற்றம்சாட்டி அறிக்கையொன்றினை சமர்ப்பித்தார். இது நடந்து ஒரு சில மணிநேரங்களுக்குள் அமெரிக்க, பிரித்தானிய விமானங்கள் பாக்தாத்தின் மேல் தாக்குதல்களை ஆரம்பித்தன.

இஸ்லாமிய புனித திருநாளான ரம்ழான் நோன்பிற்கு இரண்டு நாட்கள் இருக்கையில் அமெரிக்க - பிரித்தானிய விமானங்கள் ஈராக்கின் மேல் ஆரம்பித்த தாக்குதல்களானது, முஸ்லீம்களை பெரும்பான்மையாகக் கொண்ட உலக நாடுகளின் கவனத்தை பெரிதும் ஈர்த்தன. தங்கள் தாக்குதல்கள் எப்படி அமையப் போகின்றன, இதற்கான உத்தரவு முறையாகப் பெறப்பட்டதா? அல்லது தான் தோன்றித்தனமான தாக்குதல்களை இரு நாடுகளும் ஆரம்பித்தனவா என்பதை அறிய முடியாத நிலையில் வியாழன் இரவு பாக்தாத் நேரம் 1 மணி அளவில் பலநூறு விமானங்களும், ஏவுகணைகளும் அந் நாட்டின் மீது தாக்குதல்களை ஆரம்பித்தன.

(அடுத்த வாரமும்...)


**- உதயன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலம்பியப் பெண்களும் வாழ்க்கை நிலைமைகளும்

கொலம்பியா நாட்டின் தலைநகரான *Bogota* வில் பெண்களின் நிலைப்பாட்டையும் அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் நோக்குமிடத்து இரு வேறு பிரிவினராகவே அவர்களை நாம் பிரித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.





அதாவது வடக்கு பகுதியில் வாழ்பவர்கள் வசதி படைத்தவர்களாகவும், கீழ் உள்ள தென் பகுதியில் வாழ்பவர்கள் மிகுந்த ஏழைகளாகவுமே அங்கு காணப்படுகிறார்கள். குறிப்பாக இங்கு நாங்கள் கீழ் பகுதியில் வாழும் இவ் ஏழைப் பெண்களின் வாழ்க்கை நிலையையே சிறிது ஆழ்ந்து நோக்கினால் மிகுந்த வறுமையும் அவ் வறுமையைப் போக்குவதற்கான சூழ்நிலைகளை அமைத்துக் கொள்ள முடியாதவர்களாகவுமே இவர்கள் காணப்படுகிறார்கள்.

ஏனெனில் அங்கு போதிய தொழில் செய்யும் வாய்ப்புகள் இல்லை. அத்தோடு அவர்கள் பகுதியில் அடிக்கடி வன்முறைகள் இடம்பெறுகிறது. அத்தோடு பெண்கள் தனித்தியங்கக்கூடிய சாத்தியங்கள் அங்குள்ள சமுதாயத்தைப் பொறுத்தவரை பின்னோக்கியே இருக்கிறது.

அதுமட்டுமல்லாது அங்கு தொழில் புரியும் பல பெண்களும், சட்டத்திற்குப் புறம்பாக போதைவஸ்த்து தயாரிக்கும் சில தொழிற்சாலைகளிலேயே தொழிலாற்றுகிறார்கள். வேறு தொழில்களில் ஈடுபட முடியாமையும், அதே நேரம் தமது வறுமையைப் போக்க வேண்டிய பணத்தேடலில் ஈடு பட வேண்டிய அவசியமுமே இவர்களை இத் தொழிலுக்குள் ஈடுபட வைக்கிறது.

இதேபோல வடக்கே வாழும் மேல்தர வர்க்கத்தினரைப் பார்க்குமிடத்து, அங்குள்ள பெண்கள் மத்தியில் சற்று விழிப்புணர்வு மேலோங்கியிருக்கிறது. ஏனெனில் கடந்த மே மாதம் அங்கு இடம்பெற்ற ஜனாதிபதிக்கான தேர்தலில் *Noemi Samin* என்ற பெண்மணி 26% ஓட்டுக்களை தன்வசம் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும் குறிப்பிடக்கூடிய பெரிய துறைகளில் பெண்களின் பங்களிப்பு அங்கு குறைவாகவே இருக்கிறது.

### இலக்கியத்துறையில் விருதுபெற்ற

## இரு பெண் எழுத்தாளர்கள்

இம்முறை பிரான்சின் இலக்கியத்துறை என்பது, பெண்களைச் சார்ந்தே இருக்கிறதோ என நாம் மகிழ்வடையும் வகையில்



இரண்டு பெண் எழுத்தாளர்களுக்கு இவ்வருட பிரான்சிற்கான சிறந்த இலக்கியத்துறைக்கான பரிசுகள் கிடைத்துள்ளன. 53 வயதுடைய *Paule Constant* மற்றும் 45 வயதுடைய *Domonique Bona* என்ற இவ் இரு பெண் எழுத்தாளர்களுமே இந்தப் பரிசைப் பெற்றவர்களாவர்.


இதில் *PauleConstant* என்ற எழுத்தாளர் 18ம் நூற்றாண்டு காலத்தில் காணப்பட்ட இலக்கியத்தில் அதிகளவு ஈடுபாடுடையவர். அந்த 18ம் நூற்றாண்டு காலத்து இலக்கியத்தையே தன் கல்வியில் விசேடமாக இணைத்துக் கற்றுக்கொண்டவர். தற்பொழுது இவர் ஒரு இலக்கியத்துறைப் பேராசிரியர் ஆவார். இவருக்கு *Confidences pour Confidences* என்ற நூலை எழுதியதற்காகவே இம்முறை *Prix Goncourt* என்ற இலக்கியத்துறைக்கான விருது கிடைத்துள்ளது.

இவர் எழுதிய இந்நூலில் அமெரிக்காவைச் சேர்ந்த 4 பெண்மணிகளைச் சுற்றியே கதை படர்ந்துள்ளது. அதாவது உளவியல் ரீதியாக பெண்ணிலைவாதத்தில் இருந்து மீள முடியாதவர்களாகவும், அதே சமயம் வெளியுலக வாழ்வோடு இணையும்போது பெண்ணிலைவாதத்தை வலியுறுத்துபவர்களாகவும் இருக்கும் வேறுபட்ட இரு கொள்கைக்கிடையில் தம் வாழ்க்கையை நடாத்திச்செல்லும் பெண்களின் கதையைச் சித்தரிப்பதே இந்த *Confidences pour Confidences* என்ற நூலாகும்.

அடுத்து *Domonique Bona* என்ற மற்றைய எழுத்தாளரை நோக்குமிடத்து அவருக்கு இலக்கியத்துறைக்கான பரிசு, இத்தோடு மூன்றாவது முறையாகக் கிடைக்கப்பட்டுள்ளது.

முதன்முதல் 1987 இலும், அடுத்து 1992 இலும் மூன்றாவது முறையாக இவ்வருடம் *Le Manuscrit de Port Ebène* என்ற நூலுக்காக *Prix Renaudot* என்னும் விருதைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வாள் சண்டைப் போட்டியில் இரண்டுமுறை தங்கப் பதக்கம் பெற்ற லோரா பிளெஸ்ஷெல்




கடந்த ஒக்டோபர் மாதம் சுவிசில் இடம்பெற்ற உலகக் கோப்பைக்கான வாள் சண்டைப்போட்டியில் பிரான்சின் சார்பில் பங்குபற்றிய லோரா பிளெஸ்ஷெல் இரண்டாவது முறையாகவும் தங்கப் பதக்கத்தை தனதாக்கிக்கொண்டிருக்கிறார்.

முதலில் 1996-ம் ஆண்டு அத்லாந்திக்கில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கங்களை வென்றெடுத்தார். அதன் பின் இம்முறை சுவிசில் இடம்பெற்ற உலகக் கிண்ணத்திற்கான வாள் சண்டைப்போட்டியிலும் பங்குபற்றி அதிலும் இரண்டு தங்கப் பதக்கங்களை மேலும் தனதாக்கிக்கொண்டுள்ளார்.

27 வயதுடைய இவ் லோரா பிளெஸ்ஷெல் பிரான்சின் காலனி நாடுகளின் ஒன்றான *Gaudeloupe* நாட்டைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## ஊளைச் சதையைக் குறைப்பதற்கு சில வழிமுறைகள்...



எமது உடலில் அதிகளவு ஊளைச்சதை காணப்படும் இடங்களாக இடுப்பும், வயிற்றின் கீழ்ப்பகுதியுமாகவே இருக்கிறது. இதை இலகுவாக நாம் கீழே சொல்லும் சில தேகப் பயிற்சிகளின் மூலம் குறைத்துக் கொள்ள முடியும்.

1. தரையில் நிமிர்ந்து படுத்தவண்ணம் கைகள் இரண்டையும் உடம்போடு ஒட்டியபடி சமாந்தரமாக நிலத்தில் பதிக்கவேண்டும். பின் கையையோ, உடம்பையோ ஆட்டாது கால்கள் இரண்டையும் மேல் நோக்கித் தூக்க வேண்டும். பின் தூக்கிய கால்களை குறைந்தது 8 முறையாவது ஒவ்வொரு கால்களாக மாற்றி மாற்றி வயிற்றின் உட்புறம் நோக்கி முழங்கால்கள் மடியாது அசைத்தல் வேண்டும்.


2. தரையில் முதுகுப் பரப்பை அழுத்தியவண்ணம் கழுத்தையும், தலையையும் கைகள் இரண்டின் உதவியுடனும் தூக்கிக்கொள்ளுதல் வேண்டும். பின் ஒரு காலை தரையில் ஊன்றிய வண்ணம் மறுகாலை முழங்காலை மடிக்காவண்ணம் நேராகத் தூக்கிக்கொள்ளுதல் வேண்டும். தூக்கிய அக் காலிலுள்ள முழங்கால் பகுதியின்மேல் எம் தலையைத் தூக்கி வைத்திருக்கும் கையின் முழங்கைப் பகுதியால் தொட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யும்போது வலக்காலுக்கு இடது கையையும், இடது காலுக்கு வலது கையையும் கொண்டு செல்லுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் முற்ற மக்கள் அனைவருக்கும் நத்தார்-புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் குணாளன் லடேஸ்கரன், செல்வி ரவித்தா ரவீந்திரன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




# கவிதை முற்றம்

## நெஞ்சில் நிறைந்தவர்



யேசு பிறந்தார்
யேசு பிறந்தார்
இப்புவி மீதினிலே!
ஏழைகள்... எளியவர்...
வாழ்வில் சுடராய்...
என்றும் ஒளிர்ந்தாரே!

மனிதரைப் புழுவாய்
எண்ணிய கொடியரை
என்றும் எதிர்த்தாரே
மானிடம் தழைத்திட
நாளும் துயரம்
தானே சுமந்தாரே!

எதிரிகள் சிலுவையில்
அறைந்திட்ட போதிலும்
நெஞ்சம் நிமிர்ந்தாரே!
இலட்சிய மனிதர்க்கு
இறப்பில்லை என்றே – மக்கள்
நெஞ்சில் நிலைத்தாரே!

– *நிலா*

# குறள் முற்றம்

**'ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்'**

தன் மகன் அறிவில், பண்பில் சிறந்தவன் எனப் பிறரால் புகழப்படுவதைக் கேட்கின்ற தாய், அவனைப் பெற்றபோது இருந்த மகிழ்ச்சியை விடவும் பெரு மகிழ்ச்சி அடைவாள்.

# அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 10**

நான்கு எழுத்துக்களைக் கொண்ட சில இராகங்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. எழுத்துக்கள் இடம் மாறியும் சிதறியும் காணப்படுகின்றன. இராகங்களின் பெயர்களைக் கண்டு பிடிக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | ர | ம | ம் | மா | ல் | வா | சி |
| மோ | றி | கே | தி | கா | க் | ரூ | தி |
| சா | ம் | ள | ணி | தா | பா | ன | சி |
| கீ | க | யா | பி | த | லை | கே | ம் |
| பூ | ன | ஞ் | சி | கு | ரு | போ | ணி |

1.................................... 6....................................
2.................................... 7....................................
3.................................... 8....................................
4.................................... 9....................................
5.................................... 10....................................

பிள்ளைகளே!

சரியான விடையைக் கண்டுபிடித்து குறித்து வையுங்கள். விடை அடுத்தவாரம்!

**சொற்சிதறல் எண் ஒன்பதின் விடைகள்**

1. குயில்
2. காகம்
3. மயில்
4. கழுகு
5. நாராய்
6. வாத்து
7. சிட்டு
8. ஆந்தை
9. கொக்கு
10. மயினா

# குட்டிக் கதை படியுங்கள்

## செல்லப்பிள்ளை

தமிழ்மணி வீட்டுக்கு ஒரேபிள்ளை, அதனால் அம்மா அவனுக்கு அதிகம் செல்லம் கொடுத்து வளர்த்தாள். அவன் எது கேட்டாலும் மறுக்காமல் தருவாள். அதனால் அவன் நாளடைவில் கெட்டவனாக மாறினான். அவனுக்குப் பிடிவாதம் அதிகப்பட்டது.

அவன் விருப்பத்துக்கு மாறாக ஏதாவது சொன்னால்கூடக் கோபம் கொள்ளத் தொடங்குவான்.

கணவன், உறவினர்கள், நண்பர்கள் எல்லாரும் அம்மாவுக்கு அறிவுரை சொன்னார்கள்.

'நீதான் அவனைக் கெடுக்கிறாய். அதிகம் செல்லம் கொடுக்காதே' என்று பல முறை கூறினார்கள். ஆனால் பலனில்லை.



நாளுக்கு நாள் தமிழ்மணி மிகவும் கெட்டவனாகி வந்தான்.

ஒருநாள் மாலை நேரம், அம்மா தன் அறையில் இருந்தாள். திடீரென்று அழும் சத்தம் கேட்டது. எழுந்து முற்றத்துக்கு வந்தாள் அம்மா.

பையன் தன் முகத்தைத் தேய்த்துக்கொண்டு அழுதான். 'கொடு கொடு' என்று கத்தினான். அவன் எதிரே வேலையாள் நின்றுகொண்டிருந்தான்.

அங்கு வந்த அம்மா தமிழ்மணி அழுவதன் காரணத்தைக் கேட்கவில்லை; கோபத்தோடு வேலையாளை முறைத்தாள்.

'உனக்குத் திமிர் அதிகமாகிவிட்டது; மரியாதை குறைகிறது. அவன் கேட்பதைக் கொடுக்க வேண்டியதுதானே! மறுக்க உனக்கு என்ன துணிச்சல்?' என்று சத்தம் போட்டாள் அம்மா.

'இவன் நாளை வரை கத்தினாலும் அதைக் கொடுக்க முடியாது அம்மா!' என்றான் வேலையாள்.

அம்மாவுக்குக் கோபம் அதிகப்பட்டது. தன் கணவன் இருக்கும் இடத்துக்கு ஓடினாள். அவர் தம் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

'வேலையாள், தமிழ்மணி கேட்டதைக் கொடுக்கவில்லை. நான் கேட்டபோது மதிக்காமல் எதிர்த்துப் பேசுகிறான். அவனை உடனே வெளியே அனுப்புங்கள்' என்று கத்தினாள் அவள்.

தன் மனைவியைவிடத் தமிழ்மணிமேல் அதிக பாசமுடையவர் அவர். உடனே எழுந்து வந்து வேலையாளை அழைத்தார்.

'திமிர் பிடித்தவனே! உனக்கு என்ன அவ்வளவு துணிச்சல்? பிள்ளை கேட்பதைத் தர மறுத்தாயாமே! அம்மா கேட்டால் பணிவின்றிப் பதில் சொன்னாயாமே.'

'ஐயா! சினம் கொள்ளாதீர்கள்; பிள்ளை கேட்பதை யாராலும் கொடுக்க முடியாது. வேண்டுமானால் அம்மா கொடுக்கட்டும்.'

'என்ன கேட்டான்?'

'வாளித் தண்ணீரில் நிலாவைப் பார்த்துவிட்டு அதை எடுத்துக்கொடு என்கிறான்; என்னால் எப்படி முடியும்? யாரால்தான் முடியும்?'

அதைக் கேட்டதும் கணவனும் நண்பர்களும் பெருஞ்சத்தமிட்டுச் சிரித்தனர். அம்மாவாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அம்மாவுக்கு வெட்கம் உண்டாயிற்று. அவள் முதலில் தன்னைத் திருத்திக்கொண்டாள்; பிறகு சிறிது சிறிதாகத் தமிழ்மணியைத் திருத்தி நல்ல பிள்ளை ஆக்கினாள்.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இப்படிப்பட்ட அனுபவம் தேவைதானே!

*- Beranger -*
*(பிரான்ஸ்)*

# அறிந்துகொள்வோம்

## நாடு அதை நாடு

### எஸ்தோனியா

நாட்டின் பெயர்: எஸ்தோனியா
தலை நகர்: தாலின்
பரப்பளவு: **2,44,108 ச.கிலோ மீற்றர்**
பரப்பளவு: 45,100 சதுர கி.மீ
மக்கள் தொகை: 1.5 மில்லியன்
மொழி: எஸ்தோனியன்
சமயம்: கிறிஸ்தவம்
நாணயம்: குரூன்
எழுத்தறிவு: 100 வீதம்
மூலதன கையிருப்பு: 446 மில்லியன் டாலர்
சராசரி ஆயுள்: எழுபது வருடங்கள்
எல்லை: மேற்கிலும், வடக்கிலும் பால்டிக் கடல், தென்மேற்கே ரஷ்யா, தெற்கே லாட்வியா.
முக்கிய தொழில்: விவசாயம், மரத்தொழிற்சாலைகள்
அதிபர்: லென்னார்ட் மெரி
பிரதமர்: [illegible]




# கட்டுரை முற்றம்

## மனித இனத்தின் விருத்தி

மனிதன் இன்று விருத்தி அடைந்து வாழுகின்றான். ஒவ்வொரு மனிதனும் எப்படி மனித இனம் உருவாகி, இன்று வளர்ச்சி அடைந்து இருக்கிறார்கள் என்று சிந்திப்பார்கள். மனிதன் முன்பு மரத்தில் வசித்தான் என்று கூறப்படுகின்றது. அதாவது, மனித இனம் குரங்காக இருந்து வளர்ச்சி அடைந்தது என்று கூறப்படுகின்றது.




மரத்தில் வசித்த மனிதக்குரங்கு, நிலத்தில் நடக்கத் தொடங்கினான். நிலத்தில் நடக்கத் தொடங்கிய பின், மனிதக்குரங்கின் கால்கள் மற்றும் உடம்பு நிமிரத் தொடங்கின. அவன் தன் சமூகத்தைத் தேடிக்கொண்டான். அவன் இலை, குழை, தாவரங்களை உணவாக உண்டான். பின் மிருகங்களை வேட்டையாடத் தொடங்கினான். மாமிசத்தை பச்சையாக உண்டான்.

அவர்கள் பின் நெருப்பின் உபயோகத்தை கண்டறிந்தார்கள். இவர்கள் ஹோமோ இரெக்ரஸ் என்று அழைக்கப்படுவார்கள். இந்த இனம் 10 லட்சத்துக்கும் ஓர் லட்சத்துக்கும் இடையிலும் வாழ்ந்தார்கள் என கருதப்படுகின்றன.

இவர்கள் கிழக்காசியாவிலும், ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் உள்ள சில பிரதேசங்களில் வாழ்ந்தார்கள் என்று இன்றைய விஞ்ஞானக் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். 'றோமோ இரெக்ரஸ்' வேட்டையாடுவதற்கு கல் மற்றும் மரத்தாலான கருவிகளையும் பயன்படுத்தினார்கள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**செல்வன் தி. திருஜந்தன்**
*'தமிழாலயம்'*
*எடன்கோபன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளித்தட்டு

மா.கி.கிறிஸ்ரியன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

'அப்படித்தான் கிடக்கு'

'பின்னேரம் நம்ம விளையாட்டு'

'நாம நம்ம பாட்டில விளையாடுவோம் நடக்கிறது நடக்கட்டும்'. அலட்சியமாகவே அவர்கள் போக்கு கல்லூரியை நாடிப்போய்க் கொண்டிருந்தன.

மாலைப்பொழுது அவர்கள் எண்ணப்படி கிளித்தட்டு விளையாட்டு விளையாடி முடிந்தது. கிளி விளையாட்டின் பின்னகிடந்த நாய்களும் பதுங்கிவிட்டன.

பாலன் மட்டும் சைலாவின் வீட்டுப் படிக்கட்டில் குந்தியிருந்தான்.

அவள் வெட்கத்தோடு கதவு நிலையுடன் ஒட்டிநின்றாள். இதயத் துடிப்புகள் இறங்கிக்கொண்டன. திடுமென எங்கோ கேட்ட எறிகணை அதிர்வுகேட்டு நெஞ்சுகள் விம்மி மேலும் கீழும் எழுந்தன.

'ஏன்ரா தம்பி பாலன் நிலமே அதிரும் இந்தச் சத்தம் எங்கேயடா விழுந்து கேக்குது?'

பாலன் செல்லக்குட்டி ஆச்சியக்கண்ட அதிர்ச்சியில் பேசாமல் நின்றான்.

'அழிவான் அடிக்கத் தொடங்கியிற்றான் போலக் கிடக்கு' அடக்கிய நெஞ்சக் குமுறலை அடக்க முடியாது, பெருமூச்சை இருகைகளையும் உயத்திவிட்டுக் கொண்டாள்.

'ஆச்சி மண்டைதீவுக் கேம்பாகத்தான் இருக்கவேணும். பள்ளிக்கூடப் பக்கம் இல்லாட்டி கடற்கரைப் பக்கம்தான் விழுந்திருக்கும். நீ ஏன் இன்னும் உள்ளபோய்த் தொலையாமல் இருக்கிறாய்?'

பாலனின் கேள்வியில் விரகதாபம் மேலோங்கி நின்றது. 'டேய்! தொலைவானே என்ன எங்கயடா போகச் சொல்லுறாய்?'

'எங்காவது போய்ப் பதுங்கிறதுதானே. நீங்க என்ன கிருசகேட்டுக்கடா இதில நிற்கிறீங்க?'

இருவரும் சற்றுத்தயங்கிய படி விலத்திநின்றனர்.

'உவளுகள் வீடுகளில் இல்லையா? இஞ்ச பார்த்த பாஸ உங்கட தாய்மாரட்ட அள்ளிவைக்கிறன் இல்லையா என்று பாருங்க'

தனக்குள்ளாகப் பேசியபடி ஆடி ஆடி அசைந்து போய்க் கொண்டிருந்தார். அவளால் ஓடவும் முடியாது வாழவும் பிடிக்காதிருந்தன.

பாலனும் சைலாவும் சிரித்தபடி ஊரில என்ன நடந்தாலும் தமக்கென்ன என்று நெருங்கினார்கள். கிட்டப்போனவன் மெல்ல தலையைச் சாய்த்துப் பார்த்தான். ஒருவரும் இல்லை.

சைலா என்றவன் 'ஒருத்தரையும் காணயில்ல சைலா?'

'அதுக்கென்ன இப்ப?'

'ஒன்றுமில்ல கதைக்காம நிற்கிறாய்?' இழுத்த இழுவையில் இரண்டு சொண்டும், கண்களும் நடுவே சொருகிக்கொண்டன.

சைலா மௌனத்தோடு தன் விரல் நகங்களைக் கடித்துத் துப்பியபடி தன் நடுக்கத்தைத் தக்கவைத்தாள்.

'என்ன சைலா நாளைக்குக் கிளி விளையாட வருவாய்தானே?' பதிலுக்குப் பதுங்கினான் பாலன்.

'இம்... இம் பார்ப்போம் நாளைக்கு' சின்ன இழுப்பு இருந்தது.

'அப்புறம் நான் போகட்டா?'

திரும்பி நாலு புறமும் பார்த்துவிட்டு, 'சைலா நான் போகட்டா?'

இந்த நேரம் ஒரு குரல் உரமாக ஒலித்தது? 'டேய் பாலன்! இன்னம் வீட்டுக்குப் போகயில்லையாடா? உன்ர அம்மா ஊரெல்லாம் ஒப்பாரி வைச்சுக் கொண்டு திரியிறாள். டேய் மடையா! நீ இங்க நின்று யாரோட கதையளக்கிறாய்?

குரல்கேட்ட பாலன் திகைப்போடு திரும்பிப் பார்த்தான்!

பொன்னர் கேணி ஒழுங்கையால் திரும்பி வந்துகொண்டிருந்தார்.

தகப்பனைக் கண்டவள் நாக்குத் தெறிக்க ஓடி ஒளிஞ்சுகொண்டாள்.

பாலன்ர உடல் வியர்த்து ஆழமான அச்சத் தைரியம் அவன் முகத்தில் தோன்றின.


தைரியசாலி போல் 'உங்கட மகனட்ட புத்தகம் வாங்கிப்போக வந்தேன்'

'புத்தகம் வாங்கிற நேரமாடா?'

'அவனைக் கூப்பிட்டுப் பார்த்தேன் இன்னம் காணயில்ல.'

நெழிவும் சுழிவும் பார்க்கப் பாவமாக இருந்தது.

'புத்தகம் வாங்கிற நேரமாடா? பள்ளிக்கூடத்தடியில விழுந்த ஷெல்லில நாலு ஐந்து உடல்கள் சிதறிப்போச்சாம். சனமெல்லாம் பதுங்குகுழிதேடி உயிரைக் கையில புடிச்சுக்கொண்டு பயந்தொதுங்குதுகள். நாளைக்குப் புத்தகம் வாங்கலாம் இப்ப சுறுக்கா போச்சேரடா வீட்ட.' பொன்னர் மூச்சுவிடாத அதட்டல் பேச்சைப் பேசிவிட்டு வீட்டிற்குள் சென்றார்.



பாலனின் உடலும் மனசும் படார்-படார் என அடித்தன. இதயத்தின் துடிப்பு காதுக்குள் கேட்டது தனியாக நின்றதாக மனிசன் நினைச்சிட்டார். நல்லகாலம் எங்கட சேட்டைய மனிசன் கவனிக்க இல்ல. கவனிச்சிருந்தா சும்மா விட்டிருக்குமா?

சில நிமிடம் திகைப்புக்குள்ளாக நிலைத்தன அந்தக் காட்சி. நெற்றியில் உருண்ட வியர்வையை வலக்கையால் துடைச்சுவிட்டுப் போய்க்கொண்டிருந்தான்.

சோளகக்காற்று சோர்வின்றி வீசிக் கொண்டிருந்தன.

நேற்றுக் கீறிய கிளித்தட்டுக்கோடுகள் புழுதியில் புதைஞ்சு கிடந்தன. திரும்பவும் பாதத்தால் கோடுகள் அமைக்கப்பட்டன.

நேற்றிரவு நடந்த நினைப்பு திகைப்புப் படலம் எல்லோர் முகத்திலும் திரைப்படம்போல் காட்சிகொடுத்தன. கழுகுகளின் கண்மூடித்தனமான செல்லடியில் துண்டு துண்டாய்ப் பறந்த மனித உடல் [illegible] நினைப்பறைக்குள் கிடந்து பயம்காட்டின.

மண்டைதீவுக் கேம்பை இல்லாமல் செய்தால் என்ன? இந்த அழிவான்தானே ஊர்ச்சனத்திற்கு கரைச்சலைக் கொடுக்கிறான்? எங்கட வீரர்களும் கண்டுக்காமல் இருக்கிறாங்களா? தொலையப்போயினம் பார்! கிளித்தட்டு வீரர்கள் தங்களுக்குள் ஒழுங்கவெளியில் ஒரு வட்டமேசை மாநாட்டை நடத்திமுடித்தனர்.

'என்னடா இவன் பாலனை இன்னும் காணயில்லை?' என்றான் ஜெயந்தன்.

'அவன் வராமல் ஒரு விளையாட்டா?' என்றான் யோசப். யோசப் பேசிமுடிக்கயில்ல. ஒழுங்கை முடியும் திருப்பத்தால் திரும்பி வந்துகொண்டிருந்தான் பாலன். அவனது ஆசையும், ஆவேசமும், தவிப்பும், வரப்பிந்தின காரணமும் உடம்பின் வியர்வையில் தெரிந்தன.

இத்தகைய தவிப்புக்குள்ளும் விழிகள் வழிகாணாது தவித்தன. எச்சிலை முக்கி விழுங்கியபடி,

'சைலா வரவில்லையாடா ஜெயந்தா?'

'டேய் நாங்கள் இவ்வளவு பேர் மலைபோல நிற்கிறோம்.'

'அதுக்குள்ள இவனுக்குத்தேவை சைலாவாம்' என்று நக்கலாக இழுத்தான் தாசன்.

'அவள் வராட்டி என்ன நாங்கள் விளையாடத் தொடங்குவோம்' என்றான் மரியான்.

பாலனின் தலை பொம்மையாட்டம் போட்டது. மௌனித்திருந்தவனை மேலும் குழப்பினார்கள்.

'என்ரா பாலன் காசைச் சுண்டுறோம்.. காசைச் சுண்டுறோம்?

நகைச்சுவையோடு சொற்களை வீசி நின்றான் ஜெயந்தன். மேலும் தூக்கிவாரிப்போட்டது பாலனுக்கு.

சூசை, பெரியவன், சின்னவன், யோசப், அழகு, ராணி, பவளம், தாசன், ஜெயந்தன் எல்லோரும் இரைஞ்சுகொண்டு நின்றார்கள்.

பாலன் நெஞ்சு எதையோ சேகரித்துக்கொண்டிருந்தது.

'ஏன்ரா அறுவான்களே! உங்களுக்குப் பயமென்பது இல்லையா? கொள்ளையில போவான்ர குண்டும், ஷெல்லும் விழாது என்ற திமிர்தானே? ஒரு நாளைக்கு விளையாடாட்டி குடியா மூழ்கிப்போயிடும்?'

பொக்குவாய்த்திட்டு வெற்றிலை சப்பிக் குதப்பிய கடவாய் வழி வழியும் இரத்தத்தை இடது கையைப் பிரட்டி இழுத்து உடுத்தியிருந்த மஞ்சல் நிறநூல் சீலையில் சிவத்தப் பொட்டுட்ட செல்லக்குட்டி ஆச்சி வழமையான தென்னங்குத்தியில் குந்திக்கொண்டாள்.

சைலாவைக் காணாத கவலை உள்ளுக்குள் குமைஞ்சு கொண்டிருந்தது பாலனுக்கு, கிளித்தட்டு மறிக்கும் தந்திரம், வேகம், ஓடும் அழகு அன்றைய விளையாட்டைப் பல கண்கள் ரசித்தன.

சைலா மட்டும் தன்ர விளையாட்டைப் பார்க்காத ஏக்கம் தவிப்பாகப் படர்ந்திருந்தது பாலனுக்கு.

'டேய் கிறுக்கங்களே! பொழுது பட்டுட்டடா விளையாடினது போதும் வீடு வாசலுக்குப் போச்சேருங்கடா நேரகாலத்தோடு'

செல்லக்குட்டி ஆச்சியின் குரலோடு அதிர்வின் சத்தமும் வந்து விழுந்தது. அங்காங்கு சிதறி நின்ற உயிர்களை உலுப்பியது அதிர்வின் ஆட்டம்.

நாக்குத் தெறிக்க ஓடிவந்த பொன்னர் 'டேய் மண்டதீவுக் காம்பில இருந்து ஷெல்லடிக்கிறான்ரா.'

எல்லோரும் கால் தரையில் படாமல் ஓடினார்கள்.

ஒரு ஈ காக்காவும் கண்ணுக்குப் படவில்லை. பேய்கள் பறப்பது கண்ணுக்குத் தெரிந்த குட்டைநாய்களும் வானத்தை அண்ணாந்து பார்த்து குரைத்தபடி ஒதுங்கின.

இரண்டு சின்னக் குழந்தைகள் முகம் குப்புற விழுந்தழுவதைக் கண்டான் பாலன். பயபீதியோடு அதுகளைத் தூக்கி நிமிர்த்திவிட்டதும், குண்டியில் தட்டி இஞ்சாலப்பக்கம் ஓடுங்கடா என்றவன் நிமிர்ந்தான் பின்பக்கமாக அனுங்கும் குரல்கேட்டு வியப்போடு திரும்பினான்.

செல்லக்குட்டி ஆச்சி அசைஞ்சு எழும்பி நிற்க இசக்கமற்றுத் துடித்துக்கொண்டு சரிஞ்சு நிற்பதைக் கண்டான். தாவிப்பாய்ந்தவன் ஆச்சியின் நாரிப்பிடியோடு வலது கையைத் தோளில் போட்டுத்தூக்கி நிமிர்த்தி நாலு... ஐந்து அடிகள் முன்வைத்தான்.

'ஏன்ர ராசா என்ர வயித்தில புறந்ததுகள் ஏன் நாயென்று கூடக் கேக்குதுகளில்ல. அவள் புஸ்பத்தட வயித்திலபுறந்த பாலா என்னச் சுமந்த தங்கமே'

ஷெல் கூவியது.

அதிர்வில் வெளி கதறியது.

ஆச்சிய நழுவவிட்டு நகர்ந்தான் பாலன்.

வெண்மணல் பரப்பு செந்நிறமானது ஊரெல்லாம் ஒலித்த குரல் அடங்கியது. ஆச்சியின் உடல் துண்டு துண்டாய் கிளித்தட்டுகள் எங்கும் சிதறிக்கிடந்தன.

பூவரசு மரத்தடியில் பாலன் குற்றுயிராய்க்கிடந்து துடித்தான். இரவின் நிசப்தத்தில் நீண்டது அவலக்குரல்கள்.

அடுத்த அதிர்வுண்டுத் தீர்க்கும்முன் பாலனைத் தூக்கிக்கொண்டு ஓடி மறைத்தார்கள் பதுங்கு குழிக்குள். புழுதியும் புரண்டழுதது, கிளித்தட்டுக் கோடுகளும் கோவெனப் புலம்பின. பூவரசும் இந்தப் பூமியைப் பார்த்து இரங்கி எதிர்காலம்தேடிக் கண்ணீர் சொரிந்தழுதது.

நாட்கள் பல உருண்டன...

பாலனின் இரண்டு கால்களும் முழங்கால் மூட்டோடு வெட்டப்பட்டிருந்தன! இடுப்புக்குள் முட்டுக் கொடுத்த தடியுடன் தாவித் தாவி வருகிறான்...!

கிளித்தட்டு விளையாடும் இடத்தைப் பலநாட்களாக வெறித்துப்பார்த்து வெந்து

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெனிஷ் பிரதமரை பேட்டிகண்ட தமிழ் மாணவன்

**புலம்பெயர்ந்து வாழும் இளைய தலைமுறை, புகலிட நாடுகளின் பழக்கவழக்கங்களையும், கலைபண்பாடுகளையும் உள்வாங்கி, மாற்றங்கண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. புதிய பரிமாணங்களை உருவாக்கிவரும் இத் தலைமுறையினரை ஈழமுரசு அறிமுகம் செய்யவிழைகின்றது.**

மூன்றாண்டுகளுக்கு முன் டென்மார்க்கில் நடைபெற்ற கரும்புலிகள் ஞாபகார்த்த உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் அவனைக் கண்டேன். சிறப்பாக விளையாடி, எனது கவனத்தைக் கவர்ந்தவன், இறுதியாக சிறந்த விளையாட்டு வீரனாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தான். விளையாட்டில் மாத்திரமின்றி கல்லூரியிலும் பல விடயங்களில் சிவாஸ்கரன் தனது திறமைகளை வெளிப்படுத்துவதைக் கேள்விப்பட்டு, புகலிட ஊற்றுக்களுக்காக அவனைச் சந்தித்தேன்.

'உங்களைப் பற்றிக்கொஞ்சம் சொல்லுங்களேன்?'

'எனக்கு இப்ப 19 வயசு, அப்பா அம்மா சகோதரங்களோட டென்மார்க்கின்ர யூலன்ட் பகுதியில இருக்கிற வீபோ எண்ட இடத்தில 12 வருசமா இருக்கிறன். கணித அல்லது பௌதீகத்துறையில விரிவுரையாளரா வர வேணுமெண்டு ஆசை, இப்ப உயர்தரக்கல்லூரியில படிச்சுக் கொண்டிருக்கிறன்'.

டெனிஷ் மக்களிடையே ஆற்றிய காரியங்கள் பற்றிக் கேட்டபோது, 'பேப்பரில போடுற அளவுக்கு நான் ஒண்டும் பெரிசாச்செய்யேல்ல, இன்னும் நிறையச்செய்ய இருக்கு' என்று தயங்குபவன், இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் புகலிட ஊற்றுக்கள் பகுதிக்காக உடன்படுகின்றான்.

'நீங்கள் டெனிஷ் சஞ்சிகையொன்றில் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றியது பற்றிக் கூறுங்களேன்?'

'அதுவா, நான் இப்ப படிக்கிற கல்லூரிக்கு முதல் படிச்ச கல்லூரியில, ஒவ்வொரு மாசமும் North Express எண்டு ஒரு புத்தகம் வெளியிட்டனாங்கள். அதில ரெண்டு வருஷம் நான் பிரதம ஆசிரியரா இருந்தனான். அப்ப என்ர கல்லூரியில படிச்ச, இதில ஈடுபாடுள்ள 15 டெனிஷ்காரர் என்ர நிர்வாகத்துக்குக் கீழ நிருபர்களாயிருந்தவை. குறைஞ்சது மாசம் 500 பிரதிகள் எண்டாலும் வித்தது' பூரிப்புடன் கூறியவன் தொடர்ந்து, 'நிறைய பள்ளிக்கூட பிள்ளையளும் ரீச்சர்மாரும் இந்தப் புத்தகத்தால ஈர்க்கப்பட்டிருக்கினம். இந்தப் புத்தகத்தின்ர பார்வைக் கோணம் டெனிஷ் அறிவியல் உலகில பெரிய ஒரு கவனஈர்ப்பா இருந்ததாத்தான் சொல்லவேணும். டென்மார்க்கின்ர பிரதமர் போல் நியூருப் ராஸ்மூசனை இந்தப் புத்தகத்துக்காக நானே நேரடியா பேட்டிகண்டிருக்கிறன். அதுபோல வீபோ நகர மேயர் கார்ள் அங்கர் யோன்சனையும் பேட்டிகண்டு எழுதியிருக்கிறன்' என்கின்றான் பெருமையுடன்.

'அப்படியானால் இதற்காகவா உங்களுக்கு நகரசபை பரிசளித்தது?' என வினவியபோது, 'நான் மேல்படிப்புக்காக வேறகல்லூரிக்கு போகமுதல், நகரசபை தெரிஞ்செடுத்து கௌரவிச்ச ரெண்டு பேர்ல ஒரு டெனிஷ் காரனோட மற்றது நானாயிருந்தது சந்தோசமாய் இருந்தது. தமிழராலயும் செய்யேலும் எண்டத மற்றாக்களுக்கு உணர்த்திறது முக்கியமெண்டு என்ர அப்பா, அம்மாவும் டெனிஷ் ரீச்சர்மாரும் உற்சாகம் ஊட்டினவை' என்று முகத்தில் மகிழ்ச்சி பரவ கூறுகின்றான்.

'நீங்கள் மாணவர் மன்றத் தலைவராக இருப்பதாகச் சொன்னார்கள்! அதைப்பற்றிச் சொல்லுங்களேன்?'

'வீபோ நகரசபையில இருக்கிற 15 பள்ளிக்கூடங்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 4000 மாணவர்களுக்கிடையில மாணவர் மன்றத் தேர்தல் நடக்கேக்க, டெனிஸ் மாணவர்களே கூடுதலா வாக்களித்து என்னைத் தலைவரா தெரிஞ்செடுத்தவை. 10 பேர் உள்ள நிர்வாக சபையில நிறைய மாணவர்களின்ர ஆதரவோட ரெண்டு வருசம் தலைவரா இருந்தனான்' என்பவன் அந்தநேரம் இளைஞர்களின் நல்வாழ்வு தொடர்பாக பணியாற்றும் பல டெனிஷ் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடிந்ததையும், அரசு வருடா வருடம் 80 ஆயிரம் குறோணர்களை தமது ஆக்கப் பணிக்காக ஒதுக்கித்தந்ததையும் கூறியவன், மாணவர் முன்னேற்றத்துக்காக இப்பணத்தைப் பயன்படுத்தியதை, குறிப்பாக இளைஞர் பாடசாலை ஒன்றில் பொது விழா மேடையொன்றை இக் காலத்தில் நிறுவியதையும் கூறுகின்றான். 'டெனிஷ் இளம்மாணவரின்ர வாழ்க்கை மேம்பாட்டுக்காக அவையளோட சேர்ந்து வேலைசெய்தது முக்கியமான காலகட்டம் எண்டு நினைக்கிறன். அவையள் என்ர தலைமையை ஏற்றுக் கொண்டது அதவிட முக்கியம்.'



## புகலிட ஊற்றுக்கள்

'டெனிஷ் மாணவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக பணியாற்றியதாகக் கூறும் நீங்கள் எமது தமிழ் மாணவர்களுக்காக என்ன செய்திருக்கின்றீர்கள்?'

'அதில இருந்து கிடைச்ச அனுபவங்கள வச்சுக்கொண்டு இப்ப 'தமிழ் மாணவர் வழிகாட்டி' எண்ட ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறம். இதில 4 மாவட்டங்களில இருந்து 14இல இருந்து 22 வயசுக்குட்பட்ட ஆண்கள் அங்கத்தவராய் இருக்கினம். இதிலையும் என்னையே தலைவரா தெரிஞ்செடுத்திருக்கினம்'என்றவன் தொடர்ந்து, 'இரண்டாவது தலைமுறை இளைஞர்களின்ர பிரச்சினை எண்டு நிறையப் பேர் கதைக்கினம். நாங்கள் அதை அப்படிப்பாக்கயில்லை. இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த புலம் பெயர்ந்த இளைஞர்களுக்கு வரக்கூடிய பிரச்சினைகள் எண்ட கோணத்திலேயே நாங்கள் இதைப் பாக்கிறம். பிள்ளையளின்ர படிப்பில தாய் தகப்பன் உதவி செய்ய வேண்டியது கட்டாயம் எண்டாலும், இப்பிடி வெளிநாடுகளில எல்லாருக்கும் இது சாத்தியமாகிறதில்ல' என்கின்றான்.

தாங்கள் தங்கள் 'தமிழ் மாணவர் வழிகாட்டி' அமைப்பின் மூலம் பாடசாலைகளில் கொடுக்கப்படும் வீட்டுப்பாடங்களைச் செய்ய உதவுதல், மேல் வகுப்பு மாணவர்கள் கீழ்வகுப்பு மாணவர்களின் சந்தேகங்களை தீர்க்க உதவுதல், வேலைப்பயிற்சி இடங்களைத் தேடிக் கொடுத்தல், இளைஞர் எதிர்நோக்கும் நெருக்கடிகளைத் தீர்க்க உதவுதல், நல் வழிகாட்டல் போன்றவற்றைச் செய்வதுடன் புலம்பெயர் வாழ்விற்கும், தாயகத்திற்கும் பயனுள்ள வகையில் இளைய தலைமுறையை கட்டியமைக்க முயல்வதாகக் கூறுபவன் தமது பணிக்கு நகர சபைகள் கல்வி அதிகாரிகள் மிகவும் உதவுகின்றார்கள் என்றும் தொடர்ந்தும் தமது அமைப்பில் மாணவர்கள் இணைந்துவருகின்றார்கள் என்றும் கூறுகின்றான்.

'தமிழ் பத்திரிகை உலகில் நீங்கள் கால் வைக்கவில்லையா?'

**'வீபோ நகரசபையில இருக்கிற 15 பள்ளிக்கூடங்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 4000 மாணவர்களுக்கிடையில மாணவர் மன்றத் தேர்தல் நடக்கேக்க, டெனிஸ் மாணவர்களே கூடுதலா வாக்களித்து என்னைத் தலைவரா தெரிஞ்செடுத்தவை.**

'இப்ப டென்மார்க்கில இருந்து வெளிவாற 'பாலம்' சஞ்சிகையில நிறைய இளைஞர்கள் மொழிபெயர்ப்புப் பிரிவில வேலை செய்யினம். அதில விஞ்ஞானக் கட்டுரைகளை மொழிபெயர்ப்பு செய்ய முயற்சிக்கிறன்' என்று கூறுகின்றான்.

நேரம் கிடைக்கும் நேரங்களில் தொடர்ந்தும் முன்புபோல் உதை பந்தாட்டத்தில் ஈடுபடுவதாகக் கூறுபவன், 'இப்ப 'VFF' என்ர வீபோவின்ர பெரிய டெனிஷ் உதைபந்தாட்டக் கழகத்தில விளையாடிக்கொண்டிருக்கிறன்' என்கின்றான்.

தனது முயற்சிகளுக்கு எப்போதும் உறுதுணையாய் இருக்கும் தனது பெற்றோர் என்றும் தன் அன்புக்குரியவர்கள் என்று பாசத்துடன் சொல்கின்றான். 'தாங்கள் கஷ்டப்பட்டாலும் நாங்கள் முன்னேற வேணுமெண்டு தூண்டுற எங்கட பாசமுள்ள அம்மா, அப்பா மாதிரியான தாய்தகப்பன், இஞ்ச உள்ள மற்றநாட்டு மாணவருக்கு சரியான குறைவு. இது எங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு. படிக்கிறதுக்கு வீட்டில அமைதி இருக்கோணும். அதை வீட்டுக்காரர்தான் அமைச்சுத்தர வேணும். எனக்குக் கீழ நாலு சகோதரங்கள் இருந்தாலும் எனக்குத் தேவையான அமைதி எங்கட வீட்டில கிடைக்குது' எனக் கூறுபவன் தாய் தந்தை ஆசிரியரிடம் உயர்ந்த மரியாதையும், சகோதரர்களின் மீது பாசமும் கொள்வது அவசியம் என்பதை விட தன்னைப் பொறுத்தவரை அவையே வாழ்வில் எல்லாவற்றிற்குமான 'அடிப்படை என்கின்ற போது, அனைவரையும் மதிக்கும் தன்மையே அவனது வெற்றியின் இரகசியம் எனத் தெரிகின்றது.

'தமிழ் படிக்கிறது கட்டாயம் தேவையான விஷயம். அதால நான் சின்ன வயசில இருந்தே தமிழ் படிக்கிறதில ஆழமா முயற்சிசெய்து வாறன்' என்பவன் சுத்தமான தமிழிலும் பேசுகின்றான். கலைஞரின் 'சங்கத்தமிழ்' படிப்பதற்காக கைவசம் இருந்ததைக் காண முடிந்ததும் 'ஈழமுரசு படிப்பீர்களா' எனக் கேட்க 'படிக்கிறனான். குறிப்பா புகலிட ஊற்றுக்கள் பக்கத்தைத்தாற ஈழமுரசைப் பாராட்டோணும். இதுக்கு முதலும் ஒண்டிரண்டு புதிய முயற்சியள அறிமுகப்படுத்தியிருந்தவை. அதுகளைப் படிக்கேக்க ஏன் நாங்களும் முயற்சி செய்யக்கூடாது எண்ட யோசனை எனக்கு வந்தது. கட்டாயமாக மற்றைய எல்லா இளைஞர்களும் இப்படித்தான் நினைச்சிருப்பினம் எண்டு நினைக்கிறன். இந்தப் பக்கத்துச் செய்தியள் கட்டாயமா என்னைப் போல இளைஞரிட்டை போய்ச்சேரவேணும். தமிழ் தெரியாட்டிக்குக்கூட வீட்டுக்காரராவது வாசிச்சுக்காட்டி எல்லாராலையும் ஏதாவதொரு சாதனை செய்யமுடியும் எண்ட எண்ணத்த உண்டாக்கோணும். என்னைப் பொறுத்தமட்டில நான் செய்த காரியங்கள் சாதனையா என்றது தெரியேல்ல. இன்னும் தொட நிறையவே இருக்கு எண்டாலும் தொட முடிஞ்சதுகள மட்டும் உங்களோட பகிர்ந்திருக்கிறன். ஈழமுரசுக்கு என்ர வாழ்த்துக்கள்' என வாழ்த்தியவனை, அவன் நினைத்தபடியே சிகரங்களையெல்லாம் தொட ஈழமுரசும் அவனை வாழ்த்துகின்றது.

– மோகனன்

### சாதனையைச் சரித்திரமாக்க தமிழீழம்

*'தமிழீழம் மலரவேணும். எங்களுக்கொரு நாடு வேணும். எங்கட தேசத்தின்ர விடிவுதான் எங்கட சாதனைகள சரித்திரமாக்கும். அதுமட்டும் சாதனையள் வெறும் சாதனையள்தான். நாங்க சரித்திரத்தில இடம் பிடிக்க ஏலாது.'*

### திரு. திருமதி சிவயோகஜெயம் தங்கள் மகன் பற்றி...

**தமிழீழம் கிடைக்கவேணும் எண்டதில நாங்கள் உறுதியா இருக்கிறம். எங்கட பிள்ளையள் தமிழீழத்தைச் சீர் செய்யிற மாதிரியா, ஒவ்வொருத்தரும் தங்கட உழைப்புக்கள அதுக்காகக் குடுக்கிற மாதிரி ஏதாவது ஒரு துறையில படிக்க வேணும். அதுக்கு அவையள சரியான பாதைக்குக் கொண்டு போகவேண்டியது எங்கட கடமை. சில நேரம் எங்கட தேவையள, சந்தோசங்களத் தியாகம் செய்ய வேண்டியிருந்தாலும் அவையளின்ற வெற்றியள் எல்லாம் எங்கட பிரச்சினையள மறக்கச் செய்யுது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# கதை, சிறுகதை

கதைவேறு, சிறுகதை வேறு. கதையை முதன் முதலாகச் சொன்ன மனிதன், ஆதி மனிதர்களில் ஒருவனாகத்தான் இருப்பான். அவன் அல்லது அவள் பெற்ற அனுபவமாகவே அது இருக்கும். அல்லது அவன் அல்லது அவள், பெற்ற, இழந்த அனுபவமாகவே அது இருந்திருக்கும்.

நமக்குப் பாட்டிகள் கதை சொன்னார்கள். நம் பாட்டிகளுக்கு விசாலமான கற்பனை இருந்தது. ராஜாக்கள், ராணிகள், பேய்கள், பிசாசுகள், பூதங்கள், ஏழு கடல்கள் என்று பலப் பலவான கற்பனைகள் அவர்களுக்கு இருந்தன. அந்த அழகிய கற்பனைகளைத் தம் பின் சந்ததிக்கு மடைமாற்றம் செய்த

**- பிரபஞ்சன் -**

மகாத் தியாகிகள் அவர்கள். பாட்டிகள் இல்லாத பேரன் அல்லது பேத்திமார்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள்.

எனக்கும் பாட்டிகள் உண்டு. என் கற்பனைகளுக்குச் செழுமையான ‘பங்களிப்பைப் பரம்பரைக் கலையாக எனக்கு வாய்த்த பாட்டிகளே செய்தார்கள். என் நாவலுக்குக் கருவாக, என் மூதாதைக் கதை ஒன்றை நான் அடைந்தது அப்படித்தான். தஞ்சை மாவட்டத்தின் அரசாற்றங்கரைக் கிராமம் ஒன்று எங்கள் பூர்வீகமாக இருந்தது. அது பஞ்சகாலம். அக் காலத்தில மராட்டியருக்கும், நாயக்கருக்கும் நடைபெற்ற இடையறாத போர்கள். வாழ்க்கை நொடிந்துபோய்க் கிராமத்தைவிட்டு எங்கள் குடும்பம் குடி பெயர்ந்திருக்கிறது. பக்கத்து வீட்டுக்குத் தெரியாமல், இரவோடு இரவாக நாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டுப் புறப்பட நேர்ந்த அந்த அவலத்தைக் கண்ணில் நீர்வழியச் சொன்னவள் என் பாட்டிதான். பக்கத்து வீட்டில் சம்சயம் ஏட்படாமல் இருக்க கூடைக்குள் கோழியை அடைத்துவிட்டுப் புறப்பட்டார்களாம். கோழி கத்திக்கொண்டே இருக்கும் அல்லவா?

நம் கதைப்பாரம்பரியம் அற்புதமானது. நம் கதைகளில் சிங்கம், நரிகள், ஒட்டகைச்சிவிங்கி, காண்டாமிருகம், பாம்புகள் எல்லாம், பேசும் நாலு பேரில், சாஸ்திரம் பதினெட்டு, புராணங்கள் அறுபத்து நாலு கலைஞானம் கொண்டவைகள் முதல்வர்.

மரங்கள், செடிகள், மிருகங்கள் எல்லாம் உயிர்ப்பிராணிகளாக, நம்முடன் பிறந்தவைகளாகக் குழந்தைகளை உணர வைத்தன. அந்தப் புராதனச் சுற்றுப்புறச் சூழலை, அதைப் பேணிக்காக்க வேண்டிய அவசியத்தை குழந்தைப் பருவத்திலேயே நான் பயிற்றுவிக்கப்பட்டேன். இந்தத் தேசத்துக் குழந்தைகள் எல்லோரும் இப்படித் தான் தங்கள் ஞானத்தை அபிவிருத்திசெய்துகொண்டார்கள்.

இந்த மேன்மையான பாரம்பரியத்தை, ஆங்கில விதேசக் கல்வியும், கலாச்சாரமும் அழித்து ஒழித்துவிட்டன. ஆங்கிலத்தால் நாம் அடைந்த மிகப் பெரும் பேறே, இந்தப் பண்பாட்டுக் காலாவதிகள் தான் என்றாலும், ஆங்கிலமே நமக்குச் சிறுகதைகளை தந்திருக்கிறது. இலக்கிய வடிவத்திலேயே அழகிய, கலை வடிவம் சிறுகதை. ஜன்னல் வழி




யாக உலகத்தைப் பார்க்கிறது சிறுகதை. ஜன்னல், எந்த விஸ்தாரணத்தைக் காட்டுகிறதோ அதுவரை தான் சிறுகதை. தெருவில் வந்து நின்று, வானமும் பூமியுமாக விஸ்தாரணத்தைத் தரிசிக்கிற பிரமாண்டமே, நாவல் என்பதாகப் புதுமைப்பித்தன் சொன்னார்.

ஒரு சின்னப் பொறி அதை ஊதி ஊதி, ஒரு சிறுகதை செய்து விடலாம். ஒரு சின்ன நிகழ்வு, ஒரு மனிதனின் மன அசைவு இதுபோதும் ஒரு சிறுகதைக்கு.

என்றால் கதையும் சிறுகதையும் வேறுபடுகிற இடம் பெரும்பாலும், அவை தரும் அனுபவங்களின் சாரத்தைப் பொறுத்ததே ஆகும்.

ஒரு கதையைப் படித்தபிறகு படித்தவர், ஒரு அங்குலமாவது வளர்ந்து இருக்க வேண்டும். தன் ஆளுமையில் தன் சக மனிதன் பற்றி, தன் இருப்பு பற்றி மனிதகுல வாழ்க்கை பற்றி, ஒரு குன்றிமணி அளவுக்காவது, ஒரு கதை அதைப் படித்தவனை வளர்த்திருக்க வேண்டும். அப்படி இருந்தால் அது சிறுகதை.

சிறுகதை, ஒரு வாழ்க்கையின் புது துண்டைச் சொல்கிறது. அது சங்கிலியின் ஒரு கண்ணியின் இழையைச் சொல்கிற கதை. சங்கிலியையே உலகத்துக்கு முன் கொண்டு வந்து நிறுத்துவதில் வெற்றிபெற்று இருக்கிறது.

சிறுகதை, ஒரு பனிமுத்து, உலகத்தையே, தன் சின்னஞ்சிறு வயிற்றுக்குள் அந்தப்பனி நீர் அடக்கி வைப்பது போல சிறுகதை தன் சின்ன உருவத்துள் உலகத்தையே அடக்கிவைத்து விடுகிறது.

> **ஒரு கதையைப் படித்தபிறகு படித்தவர், ஒரு அங்குலமாவது வளர்ந்து இருக்க வேண்டும். தன் ஆளுமையில் தன் சக மனிதன் பற்றி, தன் இருப்பு பற்றி மனிதகுல வாழ்க்கை பற்றி, ஒரு குன்றிமணி அளவுக்காவது, ஒரு கதை அதைப் படித்தவனை வளர்த்திருக்க வேண்டும்.**

மண்ணைத் தோண்டி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஒரு சிறிய பானைஓட்டை வைத்துக்கொண்டு அந்தக் காலங் கடந்த வாழ்க்கையை, ஒரு ஆராய்ச்சியாளன் சொல்லி விடுவது போலத் தான் சிறுகதையும் ஒற்றைப் பாத்திரங்களை வளர்த்துக்கொண்டு உலகத்தை அளவிடுகிறது.

புதுமைப் பித்தன் மொழி பெயர்த்த ஒருகதை.

சின்ன மீன், இதை பெரிய மீன் விழுங்கும்போது, சின்ன மீன் பெரிய மீனைப் பார்த்து, 'இது நியாயமா!' என்றது, அப்போது பெரிய மீன், 'அப்ப நீ என்னை விழுங்கு' என்றது, அப்போது 'சின்ன மீன், இது நியாயமில்லை நீ என்னை விழுங்கி விடு' என்றது, இதுதான் ஒரு கருத்து, ஒரு தத்துவம் இங்கு விளக்கமாயிற்று.

சிறுகதை, கருத்தைமட்டு மல்ல, தத்துவம் மட்டும் அல்ல, ஒரு வாழ்க்கையையும் விளக்கி விடுகிறது.

தமிழர்கள் அவசியம் படிக்க வேண்டிய சில அரிய சிறுகதை ஆசிரியர்கள், புதுமைப்பித்தன், க.ப.ரா. ந.பிச்சமூர்த்தி, கு. ராஜ நாராயணன், வண்ணதாசன், வண்ணநிலவன், ஜெயந்தன், அம்பை போன்றோரினது.

சிறுகதை சங்க இலக்கியத்தில் பரிபாடல் மாதிரி.

## யேசு இன்றும் பிறக்கின்றார்

உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன
இனி பாவம் செய்யாதே
மன்னிக்கும் பண்பே, அன்பின் உதயம்
மனம் திரும்புதலே சமாதானத்தின் ஆரம்பம் — என
பாவிகளை மீட்டு புனிதராக்க
புனிதராம் யேசு இன்றும் பிறக்கின்றார்.

ஐந்து அப்பங்களையும், இரு மீன்களையும்
ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்தவர்
அல்லலுறும் மக்களை மறவாதீர்
அன்றாடம் சிறுக சேமித்து உதவுவீர் என
வெரிதாஸ் கஸ்பார் அடிகள் மூலம் பேசி
கருணை ஒளியாக இன்றும் பிறக்கின்றார்.

உங்களுக்கு சமாதானம் உண்டாகுக
சமாதானத்தையே பகிர்ந்து கொள்ளுங்கள்—என்றவர்.
தமிழருக்கு சமஉரிமை கிடைத்து
தரணியில் சம தர்மம் மலர
சமாதானத்தின் பிரபு., நீதியின் தேவன்
பாலகனாக பாரில் இன்றும் பிறக்கின்றார்.

*ஏ.றி. இம்மானுவேல்*
*ஜேர்மனி*

(18ம் பக்கத் தொடர்ச்சி)

## கிளித்தட்டு

துடித்தாள் சைலா.

நாளும் பொழுதும் அழுது வீங்கிப்போன முகத்தோடு பாலனின் கோலத்தைப் பார்த்து விம்மலை அடக்க முடியாது புழுவாத்துடித்தாள். மூலைகுத்திப் பாயும் கால்கள்! கூர்ந்துபார்த்தவள் இமையோரம் முட்டிநின்ற கண்ணீர் துளி... துளியாக விழுந்து கிளிக்கோட்டை அழித்தன.

'என்ன சைலா இந்த அனர்த்தங்கள் நம்ம ஊரில சகசமாகப்போயிற்று. இனியென்ன கிளித்தட்டு விளையாட முடியாது... வாழ்க்கையும்..?' வேதனையின் விழிம்பில் நின்றவன் இதழ்கள் புன்னகை சிந்தின அவனது வேதனையைப் பங்குபோடுவதற்காகவே தன் மூடிய சிவந்த இதழ்களைத் திறந்தாள்.

'பாலன் உன்னட்ட ஒரு கேள்வி கேக்கிறேன் பதில் சொல்வாயா?' விழிகள் அகல விரிக்க முடியாது மூடியபடி கேட்டாள் சைலா.

'என்னத்தக் கேக்கப்போறாள்? என்ன மறந்துவிடு. நீ நொண்டியாப் போயிற்றா உன்னோடு நான் வாழ முடியுமா? என்றுதானே அவள் கேட்கப் போறாள் என்று தன் மனசுக்குள் நினைத்துக்கொண்டான் பாலன்.

'தைரியமாக தாரளமாகக் கேள் சைலா. நான் உனக்கு நல்ல முடிவு சொல்லுறேன்.' காதலின் மோகத்தைக் கண்களிலும் காட்டவில்லை. அவள் கேட்கத் தொடங்கினாள்.

'ஒரு பக்கம் ஏழு குழி இருபக்கத்திலும் பதினாலு குழிகள் மரத்தாலானது மகத்தான வீடு மங்கையர் மகிழ்ந்தாடும் வீடு மற்றவரும் கலந்தாடுவர் அது என்ன?'

சட்டென்று பதில் விழுந்தது 'பல்லாங்குழி.'

'இப்ப என்ன கிளித்தட்டுத்தானே விளையாட முடியாது?

வாயேன் பதுங்கு குழிக்குள்ளிருந்து பல்லாங் குழி விளையாடுவோம்.'

இருவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள். ஊரெங்கும் எதிரொலித்தன.

யக்கோவின் கோயில் மணியும் கிடாங்... கிடாங்கென ஒலித்தன. இவர்கள் காதல் வாழவேண்டும் என வேண்டிக் கொண்டேன்.

(முற்றும்)


**அனைவருக்கும் எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்**

மொன்ந்றோய் (Montreuil) வாழ் மக்களின் நலன் கருதி
Mº: Croix de Chevaux (Direction: Marie de Montreuil - Pont de Sevres - Ligne 9) இல்
தமிழ்க்கடை
அதன் ஆரம்பநாட்களை முன்னிட்டு
**மலிவு விற்பனை**
**18.12.98 முதல் 25.12.98 வரை**

| | | | |
|---|---|---|---|
| புழுங்கல் அரிசி | 1 கிலோ | ~~11F90~~ | 10F90 |
| பச்சை அரிசி | 1 கிலோ | ~~11F90~~ | 10F90 |
| சம்பா அரிசி | 1 கிலோ | ~~12F90~~ | 11F90 |
| பசுமதி (Tilda) | 5 கிலோ | ~~76F90~~ | 72F90 |
| மிளகாய்த் தூள் | 454 கிராம் (பை) | ~~13F90~~ | 12F90 |
| மிளகாய்த் தூள் | 500 கிராம் (போத்தல்) | ~~16F90~~ | 15F90 |

**நர்மதா**
17, Avenue de la Resistance, 93100 Montreuil
Centre Comercial Monoprix-க்குப் பின்னால் Tresor Public- அருகே


| | | | |
|---|---|---|---|
| மைசூர் பருப்பு | 1 கிலோ | ~~6F90~~ | 5F90 |
| மரக்கறி வகை | 1 கிலோ | ~~19F90~~ | 17F90 |
| தொலைபேசி அட்டை | | ~~100F~~ | 90F |

இன்னும் பல பல...
உங்கள் அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கிறோம்
Tel: 01 48 51 09 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரித்தானியாவில்** ஆரம்பமாகிவிட்டது

# GNANAM Telecom Centers




| | | |
|---|---|---|
| *சிறீலங்கா | - 1min | - 0.35p |
| *இந்தியா | - 1min | - 0.30p |
| கனடா | - 1min | - 0.05p |
| அமெரிக்கா | - 1min | - 0.05p |
| ஜேர்மனி | - 1min | - 6p |
| பிரான்ஸ் | - 1min | - 0.06p |

| | | |
|---|---|---|
| லண்டன் Mobile | - 1min | - 0.15p |
| லண்டன் National | - 1min | - 0.03p |
| அவுஸ்திரேலியா | - 1min | - 0.08p |
| சிங்கப்பூர் | - 1min | - 0.20p |
| சுவிற்சர்லாந்து | - 1min | - 0.08p |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

# GNANAM Telecom Centers

180 High Street North,
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Pub

# சங்கர் அன் கோ
# மாபெரும் மலிவு விற்பனை


டிசம்பர் முதலாம் திகதி முதல் ஜனவரி 14 ஆம் திகதி வரை

**GRAND SALE**



**Tamil, Hindi, Punjabi & Sinhala**

* Films Songs
* Devotional songs
* Classical Vocal & Intruments
* Christian Songs





**CDs from .................. .99P**
**Audio cassetts from .50P**

தமிழ், ஹிந்தி, பஞ்சாபி, சிங்களம் ஆகிய மொழிகளில்

சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள்,
சாஸ்திரிய சங்கீதம்,
– வாய்ப்பாடு
– வாத்தியங்கள்
கிறிஸ்தவப் பாடல்கள்

**SHANKAR & CO**

231, NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX
HAZ SMN
Tel: 0181 - 42 68 960
Fax: 0181 - 86 15 248

**ALL SRILANKAN PRODUCTS AT WHOLE SALE PRICES**

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கோட்டையில் 107 நாட்கள் 12

**யாழ். கோட்டை இரண்டாம் ஈழப்போரின்போது (1990) விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளானது. 3 மாத முற்றுகையின் பின்னர் கோட்டை விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டது. இம் முற்றுகைக் காலத்தில் கோட்டையினுள் அகப்பட்டுக்கொண்ட படையினரில் தமிழர்களும் சிலர் அடங்குவர். அவர்களில் பொலிசாராகக் கடமைபுரிந்த ரி.என்.நடா அவர்கள் முற்றுகைக்குள் இருந்தவேளை ஏற்பட்ட தனது அனுபவங்களை ஈழமுரசிற்கு வழங்குகின்றார். அதுவே இங்கு தொடராக வருகின்றது.**

(சென்றவாரத் தொடர்ச்சி)

உலங்கு வானூர்தியைக் கொண்டுவந்து தரையிறக்கியவர் அமெரிக்காவில் பயிற்சி பெற்ற விமானி என்பதால் அவரை புகழுக்கு மேல் புகழ்ந்து தள்ளினார்கள். இனி உணவுப் பிரச்சினை தீர்ந்து விட்ட மாதிரித்தான் என்றார்கள். இந்த உலங்கு வானூர்தியை தரையிறக்கிக் காட்டியதன் மூலம் புலிகளின் முற்றுகையை உடைத்தாயிற்று என்றே சிப்பாய்களும் தளபதி தரத்திலானவர்களும் பேசிக்கொண்டார்கள்.

அன்று வந்த உணவுப் பொதியினால் எல்லோரும் விரும்பிய அளவிற்கு சாப்பிட முடிந்தது. சிப்பாய்களும், ஏ.எஸ்.பி, கோட்டைப் பொறுப்பாளர் எல்லோரும் அன்றுதான் கூடியிருந்து ஒன்றாக மது அருந்தி சிரித்து சந்தோஷமாக கதைத்தார்கள்.

மண்டைதீவிற்குப் படைகள் கொண்டுவந்து குவிக்கப்பட்டுடுள்ளது. அவர்கள் கோட்டையினுள் வந்ததும் இங்கிருப்பவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவார்கள், இங்கிருப்பவர்களுக்கு விசேட பணச்சலுகையும் வழங்கப்படும். விரும்பியவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறலாம். ஆனால் யாரும் அதுவரை புலிகளிடம் சரணடையக்கூடாது என இராணுவ தலைமை அதிகாரி கேட்டுள்ளதாக கதைத்துக் கொண்டார்கள்.



அன்று போதையேறிய சிப்பாய் ஒருவர் 'என்னடி ராக்கம்மா' என்ற தமிழ்ப் பாடலைப் பாட எல்லோரும் கைதட்டி ரசித்தார்கள். பாடலை முழுவதுமாக பாடி முடிக்க, சிங்களத்தில் 'பைலா' பாடல்கள் பாடி கைதட்டி ஆடினார்கள். கோட்டைக்குள் வந்ததற்கு இன்று தான் இவ்வாறான வசந்தமான காலத்தை கண்டதுபோல் இருந்தது. ஆனால் கோட்டையில் வசந்தகாலம் வந்தால் மறுநாள் சூறாவளி இருக்கும் என்பதும் நிச்சயம்.

போதை ஏறினால்தான் சிப்பாய்கள் புலிகளுடன் கதைக்க வேண்டும் என்று நிற்பார்கள். தொலைத்தொடர்பு கருவிகளை இயக்கி புலிகளுடனான தொடர்பை பெற்றுக்கொண்டார்கள். வழமைபோல கேலியும் கிண்டலுமாகத் தொடங்கியவர்கள் இறுதியில் புலிகளிடம் 'நடுச்சாமத்தில் அடிக்கின்ற ஷெல்லை அடிக்க வேண்டாம்' என்று மன்றாடி கேட்டுக்கொண்டார்கள். புலிகள் அடிக்கின்ற அந்த ஷெல் வெடிக்கும் அதிர்வு, நித்திரையில் இருப்பவர்களில் இருந்து விழித்திருப்பவர்கள் வரைக்கும் தூக்கியெறியும். அதனால்தான் அந்த ஷெல்லை அடிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அன்றும் வழமை போல் போர் விமானங்களும், உலங்கு வானூர்திகளும் வானில் பறந்து தாக்குதலை நடாத்திக்கொண்டிருந்தன. மண்டைதீவில் இருந்து படையினர் கோட்டையை நோக்கி நகரத் தொடங்கிவிட்டார்கள் என்ற செய்தி எல்லா இடமும் பரவி இருந்தது. முன்னர் பலாலியில் இருந்து இராணுவம் வந்த கதைபோலத்தான் இதுவும் என்று இருந்துவிட முடியாது. காரணம் புலிகளின் தாக்குதல்களும் படையினரின் தாக்குதல்களும் இராணுவம் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தியது. மோதல் மிக உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது. கோட்டையின் எல்லாப் பகுதிகளிலும் படையினர் ஏறி நின்று புலிகளின் அரண்களை நோக்கி தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்தனர்.

மண்டைதீவிலுள்ள படை அதிகாரிகளுடன், கோட்டை அதிகாரி தொலைத்தொடர்பு கருவிமூலம் மாறி மாறி விவாதித்துக்கொண்டிருந்தார். கோட்டையை படையினர் நெருங்கி வந்துவிட்டார்கள். உங்கள் கவச வாகனங்களை தயார் நிலைக்குக்கொண்டு வாருங்கள் என கட்டளை வந்தது. சிப்பாய்கள் சந்தோஷத்துடன் ஓடிவந்து தயாராக நின்ற இரண்டு கவசவாகனங்களில் ஏறிக்கொண்டார்கள். முதல் கவசவாகனம் கோட்டை வாசலை நோக்கி நகர முயன்றது. ஆனால் வாகனம் அசையவே இல்லை. கவசவாகனத்தை ஓட்டுபவர் இறங்கிவந்து அதிலிருந்த சிப்பாய்கள் சிலரை இறக்கி பின்னுக்கு நிற்கும் கவசவாகனத்தில் ஏறும்படி கட்டளையிட்டுவிட்டு வாகனத்தை நகர்த்தத்தொடங்கினார். வாகனம் கோட்டை வாசலை நெருங்கியது. மூன்று மாதங்களின் பின், மூடியிருந்த கோட்டை வாசலின் கதவு திறக்கப்பட்டது. கவச வாகனத்தில் தயார் நிலையில் நின்ற சிப்பாய்களின் ஆயுதங்கள் முழங்கத் தொடங்க, வாகனம் மெதுவாக நகர்ந்து கோட்டை வாசலைத் தாண்டிச் செல்லத் தொடங்கியது. (தொடரும்)



## 'பசீலன் பற்றி விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியது.

பசீலன் என்றால் எதிரி தனது பின் வழியை அதாவது தப்பிச் செல்லும் பாதையையே தேடுவான்! அவ்வளவுக்கு எதிரிக்கு ஒரு சவாலான ஆயுதமாகவும் எத்தனையோ வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஆயுதங்களுக்கு ஒப்பான தரம் வாய்ந்ததாகவும் அமையப்பெற்றதுதான் எமது பசீலன் பீரங்கிகள்.

எமது பசீலன் அணியில் சேருவது என்பது சாதாரண விடயமல்ல. அதற்கான பயிற்சியை எடுப்பது, முடிப்பது என்பதை நினைக்கவே பலருக்கு கொஞ்சம் தயக்கமாக இருக்கும். ஆனால் எமது பசீலன் அணியில் இருந்த போராளிகள் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் தங்களை வருத்தி இப்படையணியின் வளர்ச்சிக்கு உதவினார்கள். இந்தப் பசீலன் அணி பல களங்களின் வரலாற்றுப் பதிவுகளுக்கு உறுதுணையாக நின்றது.

## 'யாழ்கோட்டையை எவ்விதம் கைப்பற்றினோம்' எனும் விடுதலைப் புலிகள் நூலில் இருந்து.....

சதுர வடிவில் தண்டவாளங்கள், மண் மூடைகள், ரயர்கள் கொண்டு ஒரு பலமான காவலரணை பண்ணைச் சந்தியில் அமைத்திருந்தோம். இக் காவலரணையும் தொலைத் தொடர்பு நிலையத்தையும் இணைக்கும் வகையில் எலி வளை போன்ற ஒரு தொடர் அகழியை அமைத்திருந்தோம்.

இப் பண்ணைச் சந்தி அரணானது திறந்த வெளியில் எதிரிக்கு சவால் விடுவதைப் போல நிமிர்ந்து நின்றது. இது கோட்டையிலிருந்து சுமார் 60 யார் தொலைவில் இருந்தது.

இக் காவலரணை உடைத்து அதைக் கைப்பற்றுவதன் மூலம் தொலைத்தொடர்பு நிலையத்தையும் புலிகளின் கையில் இருந்து மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் இராணுவம் செயற்பட்டது.

தனித்திருந்த அக்காவல் அரண் விமானத்தால் தாக்கப்பட்டது. ஆர்.பி.ஜி. மூலம் ரொக்கற் தாக்குதல் நடாத்தப்பட்டது. கோட்டை மதிலின் மீதிருந்த பீரங்கிகள் மூலம் தாக்கப்பட்டது. காற்று வீசுவதைப் போல துப்பாக்கிக்குண்டுகள் தாக்கின.

புயலுக்குள் அக்கப்பட்ட கப்பலைப்போன்று, அவ்வரண் பிய்த்தெறியப்பட்டது. தண்டவாளங்கள் உடைந்தன, ரயர்கள் எரிந்து மண் மூடைகள் சிதறின. ஆனாலும் அதற்குள் இருந்து புலிகளின் துப்பாக்கிகள் வெடித்துக்கொண்டிருந்தன. எலிவளை போன்ற தொடர் குழிக்கூடாக காயம் அடைந்த போராளிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். பதிலுக்கு புதிய புலி வீரர்கள் அவ்விடத்துக்குச் சென்று எதிரியுடன் கடுமையான யுத்தத்தை நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் அந்தக் காவலரணும் உடைந்துபோய்விட்டது. பின்னர் அதற்கு அருகில் இருந்த இன்னொரு காவலரணிற்குள் சென்று புலி வீரர்கள் போரிட்டுக்கொண்டிருந்தார்கள்.

### போர்விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

தொலைத் தொடர்புக் கட்டடத்திலிருந்து பண்ணைச் சந்திக் காவலரணுக்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று போர் விமானங்கள் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியில் மாறி மாறி குண்டுகளை வீசத்தொடங்கின.

அவ்விமானங்கள் குண்டுகளை வீசிக்கொண்டிருக்க பண்ணைச் சந்தி அரணை நோக்கி முன்னே வந்த இராணுவத்தினரும் எமது துப்பாக்கிகளுக்கு இரையாகிக்கொண்டுவந்தனர். பண்ணைச் சந்தியிலுள்ள எமது நிலைக்கு 5-6 யார் முன்னாலுள்ள காப்பிடப்பகுதியில் வந்து நிலை எடுத்திருந்தும் அரணைக் கைப்பற்ற முடியாது தடுக்கப்பட்டனர்.

புலிகள் காற்றைக் காப்பரணாக்கி உயிரை ரவைகளாக்கி எதிரியுடன் போரிட்டுக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் எதிரி விமானமொன்று ஆகாயத்தில் நாம் விரித்திருந்த ரவைக் குடையைப் பிய்த்தபடி கீழேவந்து சரிநேராக எமது நிலைகளைத் தாக்கத்துவங்கியது.

இரண்டு, மூன்று தடவைகள் அவ்விதமாகப் பதிந்து தாக்குவதும் பின்னர் மேலெழும்பும் சத்தமும் கேட்டது. இறுதியாக உறுமியபடி பின்புறத்திலிருந்து எமது நிலைகளை நோக்கி வந்த விமானம் வழமைக்கு மாறாக பண்ணைக்கடல் பக்கமாக வித்தியாசமான ஒலியை எழுப்பியபடி சென்றது. பின்னர் எந்த விமானத்தின் ஒலியும் எமக்குக் கேட்கவில்லை.

'ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு' என்பதைப்போல, தொலைத் தொடர்பு நிலையத்துக்கு அப்பால் ஒரு முனையில் உருமறைப்புச் செய்தபடி விமான எதிர்ப்புத் துப்பாக்கியுடனிருந்த ஒரு தோழனுக்கு இரை கிடைத்துவிட்டது.

அவ் விமானம், தமிழீழ மண்ணில் தாழப்பறந்ததற்கான தண்டனையைப் பெற்று பண்ணைக் கடலுக்குள் குப்புற விழுந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் ஆட்சி நிலைகள் மாற்றம் அடையுமா?

அண்மையில் டெல்லி இராசஸ்தான், மத்தியப் பிரதேசம், மிசோரம் ஆகிய நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் பாரதிய ஜனதாக் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. மூன்று மாநிலங்களில், காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

டெல்லி, இராசஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில் பாரதிய ஜனதாக் கட்சியும் காங்கிரசும்தான் உள்ளன. இரண்டு கட்சிகளுக்கும் இடையே நேரடிப்போட்டி நடந்தது. வாக்காளர்களுக்கு மூன்றாவது வாய்ப்பு இல்லை.

ஏனென்றால் மூன்றாவது அணியைச் சேர்ந்த கட்சிகள் இந்த மாநிலங்களில் அறவே இல்லை. எனவே, ஆங்கிலப் பழமொழியான 'Between the Devil and the Deep Sea' அதாவது 'பிசாசிடம் சிக்குவதா அல்லது ஆழ் கடலில் குதிப்பதா' என்ற இரண்டில் ஒன்றைத்தான் வாக்காளர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. பா.ஜ.க. மீது இருந்த வெறுப்பு வேறு வழியில்லாமல் காங்கிரசுக்கு ஆதரவாகக் கிடைத்தது. பா.ஜ.க தோல்விக்குரிய காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

## மத்திய பிரதேசம்:

1993-ம் ஆண்டில் நடைபெற்ற சட்டசபை தேல்தலில் 39 சதவீதம் வாக்குகளை பா.ஜ.க. பெற்று இருந்தது. 1998ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 46 சதவீதம் வாக்குகளை பாஜக. பெற்று இருந்தது. 1998ம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 39 சதவீதம் வாக்குகளை மட்டுமே பாஜக. பெற்றுள்ளது. ஆக 7 சதவீத வாக்குகளை பா.ஜ.க. இழந்துள்ளது.

## இராசஸ்தான்:

இராசஸ்தான் மாநிலத்தில் 1988ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 42 சதவீதம் வாக்குகளை பா.ஜ.க. பெற்றிருந்தது. தற்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 32 சதவீதம் வாக்குகளைப் பெற்றுள்ளது. ஆக 10 சதவீதம் வாக்குகளை பா.ஜ.க. இழந்துள்ளது.

## டெல்லி:

1998ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 51 சதவீதம் வாக்குகளைப் பெற்ற பாஜக. தற்போதைய சட்டமன்றத் தேர்தலில் 33 சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது. சுமார் 18 சதவீத வாக்குகளை பா.ஜ.க. தற்போது இழந்துள்ளது. இவ்வாறு பா.ஜ.க. வுக்கு ஏற்பட்ட சரிவுக்கு என்ன காரணம் என்பதைப் பார்ப்போம்.

'இந்தியா ஒரே நாடு. இந்திய மக்கள் ஒரே தேசிய இனம். அவர்களின் புகழ்மிக்க பாரம்பரியம் இந்துமதத்தோடு இணைந்ததாகும் என்பதுதான் இந்துத்துவ சக்திகளின் கோட்பாடாகும்.'

இதன் மூலம் ஒரே தேசம், ஒரே மதம், ஒரே கலாச்சாரம் என்பதை நிலைநாட்ட அவர்கள் இடைவிடாது முயற்சி செய்தார்கள். இந்திய நாட்டில் இந்துக்களுக்கு முக்கியமான இடம் உண்டு. மற்ற சிறுபான்மை மதத்தவர்கள் இதை ஏற்றுக்கொண்டு இந்துக்களை அனுசரித்துப்போக வேண்டியவர்களாவார்கள் என்பதை வெளிப்படையாகவே அவர்கள் கூறினார்கள். இந்தக்கோட்பாட்டை ஏற்காத அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியுடனோ ஐக்கிய முன்னணியிடனோ சேர்ந்து நிற்க விரும்பாத பல்வேறு கட்சிகளின் ஆதரவுடன்தான் பாரதீய ஜனதா மத்தியில் ஆட்சியை அமைக்க முடிந்தது என்ற உண்மையை அவர்கள் புறக்கணித்துவிட்டு இந்துத்துவ ஆட்சி ஏற்பட்டதுபோல செயல்படத் தொடங்கினார்கள். இதன் காரணமாகவே வேண்டாத நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. எடுத்துக்காட்டாக

**1. பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயிலைக் கட்டுவதற்கான தீவிர ஏற்பாடுகளில் விசுவ இந்து பரிசத் வெளிப்படையாகவே முனைந்தது. கோயிலுக்குத் தேவையான தூண்கள் போன்றவை தயார் செய்யப்பட்டு வருவதை ஒப்புக்கொள்ள அவர்கள் கொஞ்சமும் தயங்கவில்லை.**

**2. குஜராத் மாநிலத்தில் பாஜக. ஆட்சியில் கிறித்துவ தேவாலயங்கள், பள்ளிகள் மீது பஜ்ரங்தள் விசுவ இந்து பரிசத் குண்டர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினார்கள்.**

**3. டெல்லியில் கூட்டப்பட்ட கல்வி அமைச்சர்களின் மாநாட்டில் சரசுவதி வந்தன பாடல் பல மாநில கல்வி அமைச்சர்களின் எதிர்ப்பையும் மீறி பாடப்பட்டது. அவ்வாறு எதிர்த்தவர்கள் 'இந்தியர்கள் அல்ல' என ஆர்.எஸ்.எஸ். இணை பொதுச் செயலாளர் பகிரங்கமாகக் கண்டனம் செய்தார்.**

**4. மத்திய பிரதேசத்தில் கிறித்துவ கன்னிகள் கற்பழிக்கப்பட்டனர். இம் மாநிலத்தில் நடந்ததோ காங்கிரஸ் ஆட்சி. ஆனாலும் விசுவ இந்து பரிசத்தின் மத்திய செயலாளரான டி.எஸ். சர்மா என்பவர் இந் நிகழ்ச்சி 'தேசவிரோத சக்திகளுக்கு எதிராக தேச்பக்த இந்து இளைஞர்கள் கொண்ட கோபாவேசத்தின் விளைவாக நடந்தது' என பகிரங்கமாகக் கூறினார்.**

**5. வரலாற்று ஆய்வு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவற்றில் ஆர்.எஸ்.எஸ். விசுவ இந்து பரிசத் ஆகியவற்றின் கோட்பாடுகளில் ஊறித் திளைத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இந்துத்துவ அடிப்படையில் வரலாற்றை திரித்து எழுதுவதற்கான முயற்சிகள் அப்பட்டமாக மேற்கொள்ளப்பட்டன.**

**பல இன மொழி பேசும் வாழும் நாடு இந்தியா எனக் கூறுவோர் தேசத் துரோகிகள் என ஆர்.எஸ். எஸ். இன் பத்திரிகை ஆசிரியரான அருண்சோரி கடும் தாக்குதல் தொடுத்தார்.**

**6. காசி, மதுரா ஆகிய இடங்களில் இந்துக் கோயில்களுக்கு அருகே உள்ள மசூதிகளை அகற்றுவோம் என இந்துத்துவ சக்திகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்தன.**

மேற்கண்டவையெல்லாம் இந்துத்துவ சக்திகள் மேற்கொண்ட சில நடவடிக்கைகளாகும். இத்தகைய தீவிரவாதத்தைக் கண்ட சிறுபான்மை இன மக்கள் மட்டுமல்ல மிகப் பெரும்பாலான மக்களும் அதிர்ச்சியடைந்தனர். கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாகவே இந்துத்துவ சக்திகள் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகின்றன. கோட்பாடு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தங்கள் கருத்துக்களை எதிர்ப்பவர்கள் மீது வன்முறையைப் பயன்படுத்த இச்சக்திகள் ஒருபோதும் தயங்கவில்லை. ஆர். எஸ்.எஸ் பரிவாரம் வேலைகளைத் திட்டமிட்டுப் பகிர்ந்து கொண்டு செயல்படுகிறது. இந்துத்துவ கோட்பாடு முனைப்புடன் விசுவ இந்து பரிசத் செயல்படுகிறது. மேல்சாதி இந்துங்களிடம் இது செல்வாக்குடன் விளங்குகிறது. அரசியல் எதிரிகளைத் தாக்கும் வன்முறைக் கரங்களாக பஜ்ரங்தள், இந்து முன்னணி ஆகியவை இயங்குகின்றன. பிற்பட்ட சக்திகளைச் சேர்ந்த மக்களை இந்த அமைப்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்துத்துவ சக்தியின் அரசியல் முகமாக பாரதீய ஜனதாக் கட்சி செயல்படுகிறது. மேல்தட்டு, மத்தியவர்க்கம், வணிகர்கள் ஆகியோரிடம் இது செல்வாக்குப் பெற்றுள்ளது. இவை அனைத்தையும் கண்காணித்து ஆணையிடும் அதிகாரத்தினை ஆர்.எஸ்.எஸ் வைத்துக்கொண்டு உள்ளது.

இந்தியாவில் வேறு எந்த அகில இந்திய கட்சிகளுக்கும்



இல்லாத வகையில் மக்கள் அறிந்த ஒரு தலைவராக வாஜ்பாய் விளங்குகிறார். இந்துத்துவ அமைப்புகளைச் சேர்ந்த தொண்டர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். பாரதீய ஜனதா வாக்காளர்களும் எளிதில் மாறாதவர்கள். அப்படியிருந்தும் மூன்று மாநில சட்டமன்றத் தேர்தல்களில் அக் கட்சி படுதோல்வி அடைந்தது வெங்காய விலை உயர்வினால் தான் என்று கூறுவது அபத்தமான வாதமாகும். கடந்த எட்டு மாத கால ஆட்சியில் இந்துத்துவ சக்திகள் சுயரூபம் வெளியானதின் விளைவாக இத்தோல்வி ஏற்பட்டது என்ற உண்மையை அவர்கள் உணரவேண்டும்.

பா.ஜ.க. மட்டுமல்ல இந்துத்துவ உணர்வைப் பயன்படுத்துவதில் காங்கிரசும் முன்நின்றது என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

அகாலிகளை வெல்லுவதற்காக பிந்தரன்வாலேயைப் பயன்படுத்திய காங்கிரசுக் கட்சி பிறகு அவரை ஒழிப்பதற்கு இராணுவ நடவடிக்கை மேற்கொண்டு சீக்கியரின் புனித தலமான பொற் கோவிலுக்கு சேதம் ஏற்படுத்தவும் தயங்கவில்லை. இதன் மூலம் வட மாநிலங்களில் இந்துக்களின் ஆதரவைப் பெற்றது.

ராஜீவ் பிரதமராக இருந்த போதுதான் அயோத்தியில் பாபர் மசூதிக்கு அருகே செங்கல் பூசை நடத்த அனுமதி அளிக்கப்பட்டது.

நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது பாபர் மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்கவில்லை. இந்துவாக்கு வங்கியைப் பயன்படுத்த காங்கிரசு செய்த தவறுகள் பா.ஜ.க.விற்குப் பயன்பட்டன.

இப்போது பா.ஜ.க. செய்யும் தவறுகளைப் பயன்படுத்தி முஸ்லீம், கிறிஸ்துவர், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகளை காங்கிரசு பெற்றுள்ளது.

## காங்கிரஸ் வெற்றி காரணம் என்ன?

காங்கிரஸ் வெற்றிக்கு சோனியா காரணமாகக் காட்டப்படுவது எந்த அளவுக்குச் சரி என்பதைப் பார்ப்போம்.

1968-ல் காங்கிரஸ் முதன் முறையாக பிளவுபட்ட பிறகு 1971ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இந்திரா காந்தி பெற்ற வெற்றியின் மூலம் காங்கிரஸ் அவர் வசமாயிற்று. ஆனால் 1977-ம் ஆண்டில் இந்திராவும் காங்கிரசும் தோற்றபோது கட்சிக் கூடாரம் கலகலத்தது. ஒய்.பி.சவான், பிரும்மானந்தரெட்டி,சி. சுப்ரமணியம் போன்ற முக்கிய தலைவர்கள் இந்திராவை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கினார்கள். அதைப்போல 1992-ம் ஆண்டில் பிரதமராகவும் காங்கிரஸ் தலைவராகவும் நரசிம்மராவை ஏகமனதாக தேர்ந்தெடுத்த காங்கிரஸ்காரர்கள் 1997ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி தோற்றபோது அவரைத் தூக்கி எறியத் தயங்கவில்லை. காங்கிரசின் கலாச்சாரம் என்பது இதுதான். வாக்காளர்களைக் கவரும் தன்மை எந்தத் தலைவருக்கு இருக்கிறதோ அந்தத்தலைமையையே ஏற்றுக் கொள்ளும் கட்சியாக காங்கிரஸ் மாறி வெகுகாலமாகிவிட்டது.

மிக நீண்ட காலத்திற்குப் பிறகு உட் கட்சித் தேர்தல் மூலம் சீதாராம் கேசரியை, தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்த காங்கிரஸ்காரர்கள் 1998 ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றியைப் பெற முடியவில்லை என்றவுடன் அவரைத் தூக்கி எறிந்துவிட்டு சோனியா காந்தியைத் தலைவராக ஏற்றுக்கொண்டார்கள். இந்தப் பின்னணியுடன் பார்த்தால் இந்தச் சட்டமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியின் மூலம் சோனியா காந்தி தனது தலைமையைத் தக்கவைத்துக்கொண்டு இருக்கிறார். காங்கிரஸ் கட்சியில் மிகப் பெரும்பாலான தலைவர்கள் தங்களின் சொந்த மாநிலத்திலேயே செல்வாக்கு இல்லாதவர்கள். மக்களைக் கவரும் தன்மை இவர்களுக்கு அறவே இல்லை. எனவே நேரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை முன்னிலைப்படுத்தி வாக்குகளைப்

**பழ. நெடுமாறன்**

பெற்று அதிகாரத்தில் அமரத் துடிக்கிறார்கள். தங்களை அதிகாரத்தில் அமர்த்தி வைப்பதற்கு சோனியாவால் முடியாது போனால் நரசிம்மராவ், சீதாராம் கேசரி ஆகியோரைத் தூக்கி எறிந்தது போல இவரையும் தூக்கி எறிய காங்கிரஸ்காரர்கள் ஒருபோதும் தயங்கமாட்டார்கள். அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு கூடிய காங்கிரஸ் செயற்குழு சோனியாவிடம் முழுமையாக சரணடைந்துள்ளது. வெற்றி பெற்ற மாநிலங்களின் சட்டமன்ற காங்கிரஸ் கட்சிகள் கூடி தங்கள் தலைவரை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுப்பதற்குப் பதில் அவர்களை நியமிக்கும் அதிகாரத்தை சோனியாவுக்கு செயற் குழு வழங்கியுள்ளது.

மேலும் சில தலைவர்கள் உடனடியாக மத்திய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு சோனியா பிரதமர் ஆகவேண்டும் என் வற்புறுத்துகிறார்கள். சோனியா தலைமை காங்கிரஸ் தொண்டர்களிடம் புத்துணர்வை அளித்து உள்ளது. ஆகவே ஆட்சியைக் கைப்பற்றி சில மாதங்களில் திடீர் தேர்தல் நடத்தினால் காங்கிரஸ் 300 இடங்களுக்கு மேல் பிடிக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். மேலும் பாரதிய ஜனதாக் கட்சிக்கு எதிராக மக்களிடம் எழுந்துள்ள எதிர்ப்பு உணர்வு நீண்ட காலம் நீடிக்காது. அது மறையக்கூடும். எனவே இத்தருணத்தை நழுவவிட்டால் வேறு தருணம் வாய்ப்பது அரிது' என அவர்கள் சோனியாவுக்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

இவர்களின் ஆலோசனையை ஏற்க சோனியா தயங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. பிரதமர் பதவியைக் கைப்பற்ற சோனியா அவசரப்படுகிறார் என்ற எண்ணம் மக்களுக்கு வந்துவிடக் கூடாது. சரண்சிங், சந்திர சேகர், தேவகவுடா, குஜ்ரால் ஆகியோரது அரசுகளை காங்கிரஸ் கட்சிதான் ஆசைகாட்டி மோசம் செய்து கவிழ்த்தது என்பதை இன்னமும் மக்கள் மறக்கவில்லை. இப்போது பாரதிய ஜனதா அரசையும் கவிழ்த்தால் மக்களிடம் ஏற்கனவே உள்ள தவறான கருத்து மேலும் வலுப்படும். பாரதிய ஜனதா கட்சியில் உள்ள கூட்டணிக்கட்சிகள் முரண்பட்டு விலகி அதன் காரணமாக அந்த அரசு கவிழ்ந்தால் தாங்கள் அரசை அமைக்க விரும்பவில்லை என ஜனாதிபதியிடம் கூறி இடைத்தேர்தலை சந்திக்க சோனியா இரகசியமாக திட்டமிட்டுள்ளார். பாரதீய ஜனதா கூட்டணியில் உள்ள ஜெயலலிதா போன்றவர்கள் இக் கட்டத்தில் தேர்தலைச் சந்திக்க விரும்பமாட்டார்கள். மாற்று ஆட்சி அமைக்க சோனியா முன் வந்தால் இவர்கள் சோனியாவை ஆதரிக்கத் துணிவார்கள்.

இப்போதுள்ள 12 வது மக்களவையில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு 180 இடங்களும், காங்கிரசுக்கு 140 இடங்களும் உள்ளன. மொத்தமுள்ள 543 இடங்களில் இந்த இரு கட்சிகளைச் சேர்ந்த 320 இடங்கள் போக மீதமுள்ள சுமார் 220 இடங்களை 43 கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பங்கிட்டுக்கொண்டுள்ளனர். அவர்களில் சிலர் பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஆதரவாகவும், சிலர் காங்கிரசுக்கு ஆதரவாகவும் உள்ளனர். முப்பிரிவாக உள்ள இந்த 543 பேர்களில் ஒருவர்கூட மற்றொரு தேர்தலைச் சந்திக்க தயாராக இல்லை. அப்படியே மீண்டும் ஒரு தேர்தல் வந்தாலும் பாரதிய ஜனதாக் கட்சியின் தற்போதைய எண்ணிக்கை குறையலாம். ஆனால் காங்கிரஸ் கட்சியின் எண்ணிக்கை 200 ஐத் தாண்டவே தாண்டவும் முடியாது என காங்கிரஸ் தலைவர்களில் சிலர் கருதுகிறார்கள். காங்கிரசோ அல்லது பாரதீய ஜனதாக் கட்சியோ 272 இடங்களுக்கு மேல் பிடித்தால்தான் மூன்றாவது அணியைச் சேர்ந்த கட்சிகள் அடியோடு மறைந்து போகும். அப்படி ஒரு நிலைமை இனி எக்காலத்திலும் வரவே வராது. ஏனென்றால் உத்திரப்

(தொடர்ச்சி 27-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசியம் உலகமெங்கும் வளர்ந்து வருகின்றது

*புகலிட நாடுகளில் நடைபெற்ற தமிழீழ மாவீரர்களின் எழுச்சி நிகழ்வுகளில் கலந்துகொள்ள தமிழகத்திலிருந்து வருகை தந்த சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான திரு. தியாகு அவர்களை ஈழமுரசு செவ்வி கண்டது.*

*தமிழின் மீதும், ஈழ விடுதலை மீதும் தீராத தாகம் கொண்ட இவர் தூக்கு தண்டனை பெற்று 16 ஆண்டுகள் சிறை வாழ்க்கை வாழ்ந்தவர். விடுதலை பெற்று வந்தபின்னர் திலீபன் மன்றம் அமைத்து அதனைச் செயற்படுத்தியவர். தமிழ்த் தேசம் என்னும் இதழின் ஆசிரியராக செயற்பட்டு வரும் இவர், தமிழ்—தமிழர் இயக்கத்தின் பொதுச்செயலாளராகவும் பணி புரிகின்றார். தனது சிறை வாழ்க்கை அனுபவங்களை 'சுவருக்குள் சித்திரங்கள்' என்னும் நூலாக வடிவமைத்துள்ளார். தொடர்ந்தும் தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல்கொடுத்துவருபவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.*

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**கேள்வி:** உங்களால் உருவாக்கப்பட்டு வளர்ந்துவருகின்ற 'தாய்த் தமிழ் கல்வி' பற்றி சற்று கூறுங்கள்?

**பதில்:** ஆறாண்டுகளுக்கு முன்னர் சென்னை அம்பத்தூர் பகுதியில் நாங்கள், சில தமிழ் ஆர்வலர்கள் ஒன்றுகூடி தமிழுக்கு ஆக்கப் பணி செய்ய வேண்டும் என்று முடிவு செய்தோம். தமிழ் நாட்டில் தமிழ் குழந்தைகளுக்குத் தரமான தமிழ்மொழிப்பள்ளி இல்லையே என்று யோசித்தோம். எமது குழந்தைகளுக்கு தமிழ் மொழியில் படிக்க வைப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் அவர்களைப் படிக்கவே வைப்பதில்லை என சிந்தித்தோம். அந்த நிலையில்தான் தமிழுக்காக நாங்கள் மாநாடு, பேரணி, ஆர்ப்பாட்டங்கள் நடாத்தியிருக்கிறோம். பல தீர்மானங்கள் இயற்றி இருக்கிறோம். ஆனால் இதெல்லாம் போதாது நாமே தமிழ்ப்பள்ளி நிறுவனத்தை நிறுவ வேண்டும் என முடிவு செய்தோம். அப்படி ஒரு ஐந்து பேர்கொண்ட பணிக்குழுவை உருவாக்கி இத் தாய்த்தமிழ்ப் பள்ளியை உருவாக்கினோம். ஆரம்பிக்கப்பட்ட இப் பள்ளியில் சேருவதற்கு யாரும் முன்வரவில்லை. திறப்புவிழா அன்று பள்ளியில் சேர்வதற்கு ஒரே ஒரு குழந்தைதான் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதுவும் எனது குழந்தைதான். ஆனால் இன்று ஏராளமான மாணவர்களுடன் இவ்வாறான பன்னிரெண்டு பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**கேள்வி:** தாய்த்தமிழ் பள்ளியில் கல்வியை மரபு வழியாகத்தான் சொல்லிக்கொடுக்கின்றீர்களா?

**பதில்:** இல்லை, விளையாட்டு வழி கல்விமுறை மூலம்தான் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கிறோம். எடுத்த எடுப்பில் எழுதுவதற்கு, படிப்பதற்கு என்று இல்லாமல் சுற்றியிருக்கும் பொருட்களை, நிகழ்வுகளை இயல்பாக கற்றுக் கொள்ள செய்கிறோம். பிறகு தான் அதற்கு மொழி வடிவம் ஒலி வடிவம், வரிவடிவம் கொடுக்கிற முயற்சிக்கு போகின்றோம். கற்றுக்கொள்ள வைப்பதும் எந்த வித திணிப்பும் இல்லாமல், புத்தகச்சுமை இல்லாமல், கட்டாயப்படுத்துதல் இல்லாமல், பல்வேறு வகையான விளையாட்டுகள் மூலமாக, பாடல்கள் மூலமாக சுற்றியிருக்கிற இயற்கை சமூகசூழலை புரிந்துகொள்ள வைத்த பின்னரே எழுதப்படிக்க வைக்கிற கல்வியை தொடங்குகின்றோம். எமது பள்ளியில் ஒரு அடிப்படை விதி 25 குழந்தைகளுக்குமேல் ஒரு வகுப்பில் இருக்கக்கூடாது. மேலதிகமாக ஒரு குழந்தை இருந்தாலே இன்னொரு வகுப்பு ஆரம்பிக்கின்றோம். தமிழ் நாட்டில் அரச பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும்கூட ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் இவ்வாறான விகிதாசாரம் கிடையாது.

**கேள்வி:** இத்தாய் தமிழ் கல்வி மூலம் எவ்வாறான வெற்றிகள் அடைந்துள்ளீர்கள்?

**பதில்:** தொடங்கினோம் என்பதைவிட; தொடங்கி தொடர்கிறோம் என்பதே முதல் வெற்றி. காரணம் தமிழ்நாட்டில் இவ்வாறான கல்வியைத் தொடங்கிய பலர் அதனை கைவிட்டிருக்கிறார்கள். பொள்ளாச்சி மகாலிங்கம் என்பவரும் இவ்வாறான பள்ளியைத் தொடங்கியிருந்தார். அவரிடம் எல்லா விதமான வசதியும் இருந்தது. தமிழ்ப் பற்றும் இருந்தது. ஆனால் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை. காரணம் 'நான் கடையைத் திறந்து வைத்துள்ளேன் வி… யவர்கள் வந்து வாங்குங்கள்' என்பதே அவரது அணுகுமுறையாக இருந்தது. நாம் இன்னொரு பக்கம் இயக்கமாகவும் நடாத்துகின்றோம். தமிழ்மொழி கல்விக்காக தெருத்தெருவாக நடந்துசென்று கருத்துப் பரப்புரை செய்கிறோம். பொது மக்களிடம் நிதி திரட்டுவது என்பதே ஒரு கருத்து விதைக்கிற பணிதான். இது படிக்கிற பிள்ளைகளின் பெற்றோர் மட்டும் பங்கு செலுத்துகிற நிறுவனமாக இயக்கமாக இல்லாமல் தமிழ் ஆர்வலர்கள் அத்தனை பேரையும் இணைத்துச் செயல்படுத்துகின்றோம். இப்படியாக ஒரு நிறுவனமாகவும் இயக்கமாகவும் இருப்பதால்தான் எமக்கு வெற்றி கிடைத்துள்ளது.







இரண்டாவது வெற்றி என்பது இப்படியொரு முயற்சியின் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்த தமிழ் ஆர்வலர்களுக்கு ஒரு நம்பிக்கையை உருவாக்கியது. எமது பள்ளி ஆண்டு விழாவிற்கு வருகைதந்த இசைஞானி இளையராஜா கூறியிருந்தார் 'சிம்பொனி அமைப்பதெல்லாம் சாதனை கிடையாது. தமிழ் நாட்டில் இப்படி ஒரு பள்ளியை தொடங்கி நடாத்துகின்றார்களே அதுதான் சாதனை' என்று கூறினார்.

இப்படி பல அறிஞர்கள் வேறு நாடுகளில் இருந்தும் வந்து பார்வையிட்டுவிட்டு இந்த குழந்தைகளின் வளர்ச்சியைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார்கள். ஒரு குழந்தைக்கு பள்ளி என்பதை ஒரு சிறைக்கூடமாக இல்லாமல் குழந்தைகள் விரும்பி மகிழ்ச்சியோடு வரும் பள்ளியாக இருக்க வேண்டும். பல்வேறு அரச, ஆங்கில பாடசாலைகளுடன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளும் பெற்று வந்திருக்கிறார்கள். இது பல ஏடுகளிலும் செய்தியாக வந்துள்ளது. ஆனால் இது போதாது. எங்களுக்கு இருக்கும் வாய்ப்புகள், வசதிகள் குறைவாக இருந்தும் எம்மால் இவ்வளவையும் சாதிக்க முடிந்தது என்பதைத் தான் பணிவோடு பெருமையாகச் சொல்ல முடியும்.

**கேள்வி:** பல இதழ்களில் தொடர்ந்து எழுதி வருகின்றீர்கள். நீங்களும் சில நூல்கள் எழுதியுள்ளீர்கள். எழுத்துப் பணியில் ஒரு உயர்ந்த இடத்தை நீங்கள் அடைந்திருப்பதாக கருதுகின்றீர்களா?

**பதில்:** உயர்ந்த நிலை என்றெல்லாம் சொல்ல முடியாது. நான் சிறையில் இருந்தபோது, மார்க்ஸினுடைய 'மூலதனத்தை' மொழி பெயர்த்தேன். மார்க்ஸினுடைய மூலதனத்தை மொழி பெயர்க்க வேண்டுமானால் அதனை மூலமொழியில் புலமை பெற்றவராக இருக்கவேண்டும். இலக்கு மொழியில் புலமை பெற்றவராக இருக்கவேண்டும். அந்த நூல் எந்தபொருள் குறித்ததோ அந்த பொருளியலில் புலமை பெற்றவராக இருக்க வேண்டும் என்று 'எங்கெல்ஸ்' ஒரு வரையறை கூறியிருக்கிறார். தமிழ்நாட்டில் இந்த மூன்றிலும் தேர்ச்சி பெற்றவர்கள் எத்தனையோ பேர் இருந்தார்கள். இருக்கிறார்கள். நான்காவதாக ஒரு தகுதி தேவைப்பட்டது அது சிறையில் ஆயுள் தண்டனை கைதியாக இருக்கவேண்டும் என்ற தகுதி. அந்த ஒரு தகுதி இருந்த காரணத்தினால் மற்றவர்கள் செய்ய முடியாததை நான் செய்திருப்பதாக கருதுகின்றேன். எனக்கு தூக்குத் தண்டனை விதித்து சிறைக்கு அனுப்பிய நீதிபதிக்கு நன்றி சொல்லும் விதத்திலேதான் இந்த பணியை முடிப்பதாக நினைக்கிறேன்.

**நான்காவதாக ஒரு தகுதி தேவைப்பட்டது அது சிறையில் ஆயுள் தண்டனை கைதியாக இருக்கவேண்டும் என்ற தகுதி. எனக்கு தூக்குத் தண்டனை விதித்து சிறைக்கு அனுப்பிய நீதிபதிக்கு நன்றி சொல்லும் விதத்திலேதான் இந்த பணியை முடிப்பதாக நினைக்கிறேன்.**

வேறு நானாக எழுதிய நூல்களில் ஒன்று 'நெல்சன் மண்டேலா சிறையிலும் வாடாத ஒரு கறுப்பு மலர்'. இது ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையாக மட்டுமல்லாமல் ஒரு விடுதலை போராட்டத்தினுடைய வரலாறு பற்றிய நூல் இது. விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றியிருக்கிற ஒவ்வொருவருக்கும் தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத்தினுடைய படிப்பினைகளைச் சொல்லித் தருவதாகத்தான் அந் நூலினை எழுதியுள்ளேன்.

**கேள்வி:** தமிழக அரசுகளுக்கு தமிழ்த் தேசியம் தொடர்பான பார்வை உள்ளதா?

**பதில்:** தமிழ் தேசிய இனச் சிக்கல் என்பது பற்றி ஒரே பார்வை இவர்களுக்குக் கிடையாது. தமிழீழ போராட்டத்தை ஆதரிக்கக்கூடிய தலைவர்களும் உண்டு. ஆனால் அவர்கள் எல்லாம் தமிழீழப் போராட்டத்தைப் பார்த்து ரசித்து ஆதரிக்கிறார்கள். அல்லது அவர்களுக்கு சௌகரியப்பட்ட நேரங்களில் அந்த ஆதரவை வெளிப்படுத்துகின்றார்கள் என்பதற்கு மேல், தமிழீழ போராட்டத்தில் இருந்து எதையுமே இவர்கள் புதிதாக கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் இன்னொரு பக்கத்தில் நம்பிக்கை அளிக்கக் கூடிய விடயம் இருக்கின்றது. தெளிவான தமிழ் தேசியக் கருத்தியலோடு புதிய இயக்கங்கள், புதிய அமைப்புக்கள் உருவாகி வளர்ந்து வருகின்றன. தமிழ் தமிழர் இயக்கம் என்பது தமிழ் தேசியத்தையும் புரட்சிகர சமூக நீதியையும், ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் உள்ளிட்ட உலகத் தமிழர் நலனுக்கான ஆதரவையும் மூன்று அடிப்படை கோட்பாடுகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டு உறுதியாக இயங்கிக்கொண்டிருக்கின்றது.

**அவர்கள் எல்லாம் தமிழீழப் போராட்டத்தைப் பார்த்து ரசித்து ஆதரிக்கிறார்கள். அல்லது அவர்களுக்கு சௌகரியப்பட்ட நேரங்களில் அந்த ஆதரவை வெளிப்படுத்துகின்றார்கள் என்பதற்கு மேல், தமிழீழ போராட்டத்தில் இருந்து எதையுமே இவர்கள் புதிதாக கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.**


**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஜேர்மன்கிளை நடாத்திய 1998ம் ஆண்டிற்குரிய மாபெரும் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு**

**1ம் பரிசிற்குரிய இலக்கம் 0960 - அ. லோகேஸ்வரன் பிறீமன்**

**2ம் பரிசிற்குரிய இலக்கம்: 2937 - சி.ரு. யோகேஸ்வரன் பாட் பிறிட்ஸ்கால்**

**3ம் பரிசிற்குரிய இலக்கம்: 3635 - ம.சிவா டீசன்**

**மற்றும் 25 ஆறுதல் பரிசுகளுக்குரிய இலக்கங்கள்:**

**2947, 2917, 3559, 0768, 3653, 1604, 0471, 2631, 3529, 2620, 3384, 2669, 3629, 3674, 2104, 0404, 3804, 0832, 2807, 0771, 1372, 2557, 1726, 3470, 3324**

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம் – ஜேர்மனி.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சுப் புரட்சி 1789 - 1799

(சென்றவாரத் தொடர்ச்சி)

## மூன்று சிந்தனையாளர்கள்

வெடிக்கப்போகும் புரட்சிக்கு விதை இட்டவர்கள் என்று மூன்று சிந்தனையாளர்களைக் குறிப்பிட வேண்டும். இவர்கள், தங்கள் எழுத்துக்களாலும், தங்கள் நடவடிக்கைகளாலும், பிரெஞ்சு சமுதாய முறை அநீதியானது, இது விரைவில் மாற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தனர்.

மொண்டஸ் கியு (Montesquieu 1689-1755) தன் நூல்களில் சட்டம், நீதி, ஆட்சி இவற்றை அமுல் படுத்தும் மூன்று துறைகளும் ஒரே நபர் கையில் இல்லாது, பிரிக்கப்படவேண்டும் என்று எழுதினார்.

வால்டயர் (Voltaire 1694—1778) அரசரிடம் அனைத்து அதிகாரங்களுங் குவிந்திருப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று எழுதினார். மேலும், வெறித்தனம் ஒழியவும், சகிப்புத் தன்மை வளரவும் பாடுபட்டார்.

ருசோ (Rousseau 1712—1788) சமத்துவத்துக்குப் பாடுபட்டார். சமுதாயம், தனி மனிதனின் இயற்கையான சுதந்திரங்களைப் பாதுகாக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

(பின்னாளில், வால்டயர், ருசோ போன்ற மேதைகளின் உடல்களை, பாரிசுக்கு, விமரிசையாக எடுத்து வந்து Pantheon என்ற மிக அழகிய மாளிகையில் - பிரெஞ்சு நாட்டுச் சிறப்பான மனிதர்களின் கல்லறையாக்கி — பாதுகாத்து வைத்துள்ளனர்.

இப் பெருமக்களின் உடல்களுக்கு முன் நாம் நின்று வணங்கும்போது, நம் உடல் புல்லரிக்கிறது.

இவர்களது தனி வாழ்வில், சில கறைகளைக் காணலாம்.

இவர்கள் எழுத்துக்களிலும், கருத்துக்களிலும், ஒரு சில பலவீனங்களை உணரலாம்.

ஆனால், முன்னேற்றக் கருத்துக் கொண்டவர்கள் இன்றும், இவர்களது படைப்புக்களை ஆர்வத்துடன் படிப்பதைப் பார்க்கலாம்.

## 3. புரட்சி வெடிக்கப்போகிறது

### பொருளாதார நெருக்கடி

1730 க்கும்—1780 க்கும் இடையே, பிரான்சின் பொருளாதாரம் சிறிது, சிறிதாக, சீராக முன்னேறுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம், பண வீக்கம், பொருளாதார நெருக்கடி என்பதெல்லாம் இக்கால கட்டத்தில் ஏற்படவில்லை.

மக்களுக்கு—நாம் முன்பே பார்த்த பிரச்சினைகளைத் தவிர—புதிய பிரச்சினை ஒன்றும் இல்லை.

ஆனால் 1780—க்குப் பின் நிலைமை மோசமாக மாறுகிறது விவசாயத்துறையில்.

1784 அறுவடை, பயங்கர வெள்ளத்தால் பெரிதும் நாசமடைகிறது.

1785 இல், மழையின்மை விளைச்சலைப் பாதிக்கிறது.

1787 இல், தொடர்ந்து மழை பெய்து, பயிர்களை நாசஞ்செய்கிறது.

1788 இலோ, மழை பெய்த பின்னால், பயங்கர குளிர்வந்து, விளைச்சலைப் பாதிக்கிறது.

சந்தைக்கு வரும் கோதுமையின் அளவு குறைகிறது. விலை உயருகிறது. ஏழை மக்கள் உணவுக்குத் திண்டாடுகிறார்கள்.

இது போதாது என்று, கள்ளச் சந்தைக்காரர்கள், கோதுமை விலையை மேலும் அதிகரித்து, அதிக இலாபம் பெற அதனைப் பதுக்குகிறார்கள். அரசுக்கு இது தெரிகிறது. ஆனால், நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை. பசிகொண்ட மக்கள் கூட்டம் இக்கடைகளைத் தாக்குகிறது. மக்களுக்கு உதவ வேண்டிய அரசு, மக்கள் மீது அடக்கு முறையை ஏவுகிறது: தடி அடி, துப்பாக்கிச்சூடு, கைது, சிறைத்தண்டனை போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

நாட்டில் கொந்தளிப்புச் சூழ்நிலை நிலவுகிறது. ஆரம்பத்தில் விவசாய நெருக்கடியாய் இருந்தது, வெகு விரைவில் தொழில் நெருக்கடியாக மாறுகிறது. நல்ல அறுவடை கண்டு, தன் கோதுமையை விற்று, அதனால் வரும் வருவாயில், விவசாயி, துணி—மணி போன்ற தொழிற்சாலையில் உற்பத்தி ஆகும் பொருளை வாங்குவான்.

மோசமான அறுவடை— கையில் காசில்லை என்ற நிலையில்—எப்படி தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் சாமான்களை வாங்குவான்? விளைவு உற்பத்தியான சாமான்கள் விற்பனையாகவில்லை. விற்பனையாகாத நிலை வந்தால் அடுத்து என்ன நடக்கும்? முதலாளிகள், தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குவர். இதுதான் ஃபிரான்சிலும் நடந்தது.



பேராசிரியர் செவாலியே

சுகிர்தராஜ்

கிராமத்தில் பசிகொண்ட கூட்டம், பதுக்கல் வியாபாரிகளைத் தாக்கியது. நகரத்தில், மக்கள் ரொட்டிக் கடைகளையும், வரிவசூலிக்கும் நிலையங்களையும் நொறுக்குகிறார்கள்.

நெருக்கடி காலங்களிலும், வரியின் கடுமை குறைந்த பாடில்லை. படிக்காத பாமரர்கள், தங்கள் துன்பங்களை இறைவனிடம் ஒப்புவித்து மன்றாடும் வேளையில், படித்த புர்சுவாக்கள், கிளப்புகளிலும், படிப்பகங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் இந்நெருக்கடிகளைத் தவிர்ப்பது எப்படி, என்ன மாறுதல்கள் கொண்டு வந்தால், அரசு மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று சிந்திக்கிறார்கள், விவாதிக்கிறார்கள்.

இப்படி ஃபிரான்சில் சிந்தனையாளர்கள், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு விடை தேடிக்கொண்டிருக்கும் போது, அந்நிய நாடொன்றின் அரசியல் நிகழ்ச்சிகள் அவர்கள் கவனத்தைக் கவருகின்றன.

### அமெரிக்க உதாரணம்


வட அமெரிக்காவில், இரு நூற்றாண்டுகளாகக் குடியேறிய ஆங்கிலேய மக்கள், சிறிது, சிறிதாக ஆங்கில அரசிடமிருந்து விலகி, முடிவாக ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்குகின்றனர். அவர்களது சுதந்திரப்போர், 1776 முதல் 1783 வரை நடக்கிறது.

ஆங்கிலேயர்களை எதிர்த்து அமெரிக்க மக்கள் போரிட்டதால், அம்மக்கள் மீது ஃபிரான்சில் இயற்கையான ஒரு அனுதாபம் ஏற்படுகிறது. பிரெஞ்சு அரசர், அமெரிக்க மக்களோடு சேர்ந்து போரிட, ஒரு சிறு பிரெஞ்சுப் படையை அனுப்பி வைக்கிறார்.

போரில் என்ன நடந்தது?

(வளரும்)

# தென்னாசியாவின் அணுகுண்டு



## பரீட்சைகளும் - போட்டிகளும்

**இந்த இதழிலே பாகிஸ்தானுடன் தான் கொண்டிருந்த அணு உறவுகள் தொடர்பாக சர்வதேசத்தின் முன் சீனா ஏற்றுக் கொண்டதா? என்பதையும், அமெரிக்கா இந்த விடயத்தில் என்ன கையாளல் செய்தது என்பது பற்றியும் கொஞ்சம் பார்க்கலாம்.**


பாகிஸ்தானுடன் சீனா கொண்டிருந்த 'அணு உறவுகள்' சர்வதேசத்தின் கண்களைக் குத்தத் தொடங்கியதும் அவ் உறவுகள் பற்றிய விளக்கங்களை சர்வதேசத்திற்கு கொடுக்க வேண்டிய நிலைமை சீனாவிற்கு ஏற்பட்டது. ஆயினும் வழமையாக இராஜதந்திர ரீதியில் நாடுகள் எவ்வாறான பதிலை அளிக்குமோ அவ்வாறான பதில் ஒன்றைத்தான் சீனாவும் அளித்தது.

பாகிஸ்தானுடனான அணுத்துறைத் தொடர்புகள் யாவும் சமாதானமான நோக்கத்துக்கானவையெனச் சீனா தெரிவித்ததுடன், தான் ஒருபோதும் அணு ஆயுதத்துறை சார்பான விடயங்களை ஊக்குவித்தது கிடையாது எனவும் அது தெரிவித்திருந்தது. ஆயினும் பாகிஸ்தான் — சீன 'அணு உறவுகள்' அத்துடன் முடிவடைந்துவிடவில்லை. 1995-ம் ஆண்டு இறுதிப் பகுதியில் பாகிஸ்தானுக்கு சுமார் 5000 விசேடமாக வடிவமைக்கப்பட்ட வட்டக் காந்தங்களை சீனா வழங்கியதென்ற குற்றச்சாட்டு பெரியளவில் எழுந்தது. சீனாவின் அணு சக்திதொழிற்துறைக் கூட்டுத்தாபனமே (CNEIC) இவ் விற்பனையை நடாத்தியது எனவும் அக் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டது.

ஆனால் சீனா இந்த அறிக்கையை நிராகரித்ததுடன், ஆதாரமற்ற ரீதியில் இக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறான விற்பனை ஒருபோதும் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்திருந்தது. பின்னர் அமெரிக்க அதிகாரிகளுக்கும், சீனாவிற்கும் நடைபெற்ற சந்திப்பொன்றின்போது இவ்வாறான விற்பனை நடைபெற்றிருக்க வேண்டும் எனவும் ஆனால் இவ்விற்பனை சீன மத்திய அரசிற்குத் தெரியாமல் நடைபெற்றிருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலைமைகள் ஒருபுறமிருக்க, மறுபுறத்தே பாகிஸ்தானுடன் அமெரிக்காவிற்கு அணுத்துறை தொடர்பாக முறுகல்நிலைகள் வளரத் தொடங்கின. இதன் விளைவாக 1996ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி பாகிஸ்தானுக்கு அதுவரை வழங்கப்பட்ட சீன ஆதரவு அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அதே ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் பாகிஸ்தானின் அணுத்துறைக்கு சீனா உதவி செய்வதான விடயங்கள் மீண்டும் பிரஸ்தாபிக்கப்பட்டது. பாகிஸ்தானுடைய அணு ஆயுதத் துறையை முன்னெடுக்கும் நோக்கிலான உயர் தொழில்நுட்ப உதிரிப் பாகங்கள் சிலவற்றை சீனா வழங்கியது எனவும், இவ் உதிரிப் பாகங்கள் அணுக் குண்டுகளைத் தயாரிக்க பெரிதும் உதவி செய்யும் எனவும் கதைகள் வளரத் தொடங்கின. இக் கதைகள் காரணமாக தனக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியை சீனா மீறிவிட்டதென அமெரிக்கா கருதியது. அமெரிக்க அரசிற்கு தூபம் போடுவது போல அமெரிக்கப் பத்திரிகைகளும் இவ் விடயம் பற்றி காரசாரமாக எழுதித்தள்ளின. 'வாஷிங்டன் ரைம்ஸ்' என்ற பத்திரிகையில் 1996ம் ஆண்டு ஒக்டோபர் 9ம் திகதி வெளியிடப்பட்ட கட்டுரையொன்றில் பாகிஸ்தானுக்குச் சீனா மேற்படி உதிரிப்பாகங்களை விற்றது தொடர்பாக விபரங்கள் கொடுக்கப்பட்டன. அதாவது கம்யூனிச நாடான சீனா இவ்விடயத்தில் பொய் கூறுகின்றது என்பதே அமெரிக்க வெகுஜன தொடர்புச் சாதனங்களின் ஒட்டுமொத்தமான கருத்தாக இருந்தது. இவ்வளவு சர்ச்சைகளுக்கும் ஆளாகக் காரணமாக இருந்த பாகிஸ்தானின் அணுத்துறை இந்தக் கட்டத்தில் எவ்வளவு தூரம் வளர்ந்துள்ளது என்பது எல்லோர் மனதிலும் எழுந்த ஒரு கேள்வியாகத்தான் இருந்தது.

1987ம் ஆண்டு தரமான ஒரு அணுக் குண்டினை பாகிஸ்தான் தயாரித்துவிட்டதென்று வெளியான கருத்து பின்னர் பாகிஸ்தான் நாட்டு இராணுவ ஜெனரலான அஸ்லாம்பெக் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டது. 1990 ம் ஆண்டு காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுடன் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து 'ஷாகை' மலைப்பகுதியில் உள்ள இராணுவத் தளங்களிற்கு பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் சிலவற்றை நகர்த்தியது என்ற செய்திகள் எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது போன்ற நிலைமையைத் தோற்றுவித்தது. இந்த இராணுவத் தளங்களில்தான் F—16 ரக யுத்த விமானத்தளங்களும் அமைந்திருந்ததால் இச் செய்தி உண்மைதானோ என்பதை அறிய பலரும் ஆர்வம்காட்டினர். ஆனால் வேவுக்கு அனுப்பப்பட்ட செய்மதிகள் சர்ச்சைக்குரியதான இந்த விடயத்தை உறுதிப்படுத்தத் தவறிவிட்டன. செய்மதிகள் உறுதிப்படுத்த தவறிய விடயத்தை சுமார் 4 வருடங்கள் கழித்து பாகிஸ்தானியப் பிரதமமந்திரி நவாப்ஷெரிப் உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தினார். பாகிஸ்தானிடம் அணுக் குண்டுகள் இருக்கின்றது என்பதையும் நவாப் ஷெரிப் அப்போது வெளிப்படையாகவே தெரிவித்தார்.




பேராசிரியர் இலகுப்பிள்ளை

**'ஷாகை' மலைப்பகுதியில் உள்ள இராணுவத் தளங்களிற்கு பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் சிலவற்றை நகர்த்தியது என்ற செய்திகள் எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது போன்ற நிலைமையைத் தோற்றுவித்தது.**

ஆனால் மேற்குலகப் புலனாய்வு நிறுவனங்கள் சும்மா இருக்கவில்லை. பாகிஸ்தானிடம் அணுக்குண்டுகள் இருக்கின்றன சரி ஆனால் அவற்றின் தொகை எவ்வளவு? என்ற ஆய்வுகளில் அவை இறங்கியதுடன் அவை எங்கெங்கு இருக்கின்றது என்றும் அவை மோப்பம் பிடிக்க ஆரம்பித்தன. அவர்கள் மோப்பம் பிடித்துத் தெரிவித்தது என்ன? அதை அடுத்தவாரம் பார்ப்போமே!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'நரிக்கு நாட்டாமை கிடைச்சா, கிடைக்கு ரெண்டு வெள்ளாடு கேக்குமெண்டு' கிட்டடியிலதான் ஒரு கதை சொன்னதா ஞாபகம். வேலைத் தலங்களிலை பொறுப்பாளர் பதவி வகிக்கிற எங்கட சனங்கள் அங்கை வேலைக்கு போகிற தமிழ் பெடியளைப் படுத்திறபாட்டை இந்தப் பகுதியிலை விளக்கமா எழுதியிருந்தனான். உங்களுக்கும் ஞாபகத்திலை இருக் நேரத்துக்கும் இடத்துக்கும் ஏத்த மாதிரி தங்களை அடிக்கடி மாத்திக்கொள்ளுவினம். அப்பிடித்தான் இவருமாக்கும் எண்டு அதுக்கு மேலை நானும் ஒண்டும் கேக்கேலை.

இதைவிட சில பேர் எந்தக் குளிரெண்டாலும் சேட்டின்ரை நாலு தெறியை கழட்டி காத்துப்பட விட்டுக்கொண்டு திரிவினம். கேட்டால் 'தாங்கள் வந்து கனகாலம் தங்களைக் குளிரொண்டும் செய்யாது' எண்டுவினம். அப்ப இங்கை பிறந்து வளந்தவையள் குளிருக்கு போத்துக்கட்டிக் கொண்டு திரியாமல், உடுப்பே போடாமல் எல்லோ திரியவேணும். குளிருக்கை திறந்துவிட்டுட்டு திரிஞ்சுபோட்டு பிறகு படுக்கையிலை கிடந்து இருமேக்கைதான் இவையளுக்கு குளிரின்ரை அருமைபெருமையளே புரியுது.

யையும், தமிழ்ச் சனங்கள் கூட வேலை செய்யுதுகள் எண்டாப் போலை அங்கை வேலைக்கு அனுப்பியிருக்கிறார். அதுவும் பொறுப்பாளர் தமிழர் எண்டதாலை மொழிப் பிரச்சனையும் வராதெண்டதுதான் இவையளின்ரை எதிர்பார்ப்பு, ஆனா அங்கை போய் வேலை செய்யத்தொடங்கி கொஞ்ச நாளிலைதானாம் தெரிஞ்சுது, இவையளுக்குக் கீழை வேலை செய்யிறதைவிட வெளிநாட்டுக்காரனுக்கு கீழை வேலை செய்யிறது எவ்வளவோ மேல் எண்டு. ஊதியத்தோடை வேலை நேரம் மூண்டு மணித்தியாலம் எண்டாலும், எட்டு மணித்தியாலமா அங்கை நிக்க வேணுமாம். வேலையை ஒழுங்காச் செய்தாலும் தனிப்பட்ட கோப தாபங்களை மனசிலை வைச்சு, செய்த வேலையை குழப்பிப்போட்டு திரும்ப முதலிலை இருந்து செய்யச்சொல்லி விடுவா அவவிட்டை வேலைக்கு போறவையை மனிசி படுத்திறபாடுதான் பெரும்பாடு. வேலையெண்டு போனா நாராய் உரிச்செடுத்துத்தான் விடும். வேறை பிழைப்புகுக்கு வழி கிடைக்காத சனங்கள்தான் என்ன செய்யிறதெண்டுபோட்டு கங்காணியாற்றை காணிக்கு வேலை செய்யப்போறது.

போனா அந்த நேரத்துக்கு போக வேணும். பிந்திகிந்திப் போனா மனிசி வேலையும் செய்யவிடாது. வேலை செய்யிறவையும் குறிப்பிட்ட நேரத்துக்கும் முடிக்க விடாது. குனிஞ்செழும்பின நேரம் அது இதெண்டு ஒரு அரை மணித்தியாலம் மேலதிகமா வேலை வாங்கிப்போட்டுத்தான் விடும். அதோடை செய்யிற வேலையிலையும் நுணுக்கம் பாத்து முட்டையிலை மயிர் பிடுங்கின கணக்கா ஆயிரெத்தெட்டு குத்தம் குறை சொல்லாமல் விடாது. உதுக

# விடுதலை.. விடுதலை... விடு-தலை !?

குமெண்டு நினைக்கிறன். ஆனா இப்பிடியான பொறுப்பாளர் பதவியிலை ஆம்பிளையள் மட்டுமில்லை, எங்கட பொம்பிளையளும் இருக்கத்தான் செய்யினம். அவையளும் முதலாளிக்கு 'விசுவாசமா' இருந்து தொழிலாளிமாரை சுரண்டிக் குடுக்கிறதிலை ஆரையார் மிஞ்சிறதெண்ட நிலையிலைதான் இருக்கினம் கண்டியளோ.

பாரிசிலை அதுவும் ஒரு பிரபல்யமான விடுதி. அங்கைதான் ஒரு வேலைப் பகுதிக்கு பொறுப்பாளரா அந்த தமிழ்ப் பெண் இருக்கிறா. அவவும் இங்கை வந்து கன காலம். இங்கை வந்து கனகாலமெண்டா சில பேர் தங்கட தாய்நாட்டையே மறந்து இந்த நாட்டுக்காரர் மாதிரி நடந்து கொள்ளுவினம். அதுக்கு கையிலை ஒரு 'ஊதுபத்தி' பிடிச்சுக் கொண்டாத்தான் நாகரிகம் எண்டு நினைக்கிற அளவுக்கும் சில பேர் இருக்கினம்?. இருந்தாலும் 'முக்காலும் காகம் முழுகிக் குளிச்சாலும் கொக்காக முடியுமோ' எண்டொரு கவலையும் இருக்கத்தான் செய்யுது. என்னசெய்ய; முகஅடையாளம் எல்லோ இன்ன இன்ன நாட்டுக்காரர் எண்டு அடையாளப் படுத்திப்போடுது.

அண்டைக்கும் இப்பிடித்தான் ஒருத்தனை கண்டாப்போலை தெரிஞ்ச முகம் மாதிரி இருந்துது, பின்ன நாட்டிலை எந்த இடமெண்டு கேட்டுப்போட்டன். அவர் உடனை 'நான் நஷனாலிற்றி' எண்டார். நான் ஊரைப்பற்றி கேட்க அவர் 'நஷனாலிற்றி'யெண்டு ஏன் சொன்னார் எண்டு எனக்கொண்டுமாய் விளங்கேலை. இப்பிடித்தான் சிலபேர் கண்டதே காட்சி கொண்டதே கோலம் எண்டு வாழுறவை. அந்த

அதைவிட இங்கை வந்து கனகாலம் எண்டா மொழி தெரிஞ்சவை தங்களை எதோ பட்டப்படிப்பு படிச்ச மாதிரித்தான் நினைச்சுக் கொள்ளுவினம். அவவும் அப்பிடித்தான். அங்கை வேலைக்கு போறவை பெரும்பாலும் புதுசா இங்கைவந்து சேர்ந்

> ஆனா அங்கைபோய் வேலை செய்யத் தொடங்கி கொஞ்ச நாளிலைதானாம் தெரிஞ்சுது, இவையளுக்குக் கீழை வேலை செய்யிறதை விட வெளிநாட்டுக்காரனுக்கு கீழை வேலை செய்யிறது எவ்வளவோ மேல் எண்டு.

தவை, அல்லது, இந்த நாட்டுமொழியை பெரிசா கதைக்கத் தெரியாதவையாத்தான் இருக்கினம்: அப்பிடிப் போறவையள் அவவின்ரை பார்வைக்கு 'அறிவில்லாதவை' மாதிரித்தான் தெரிகினம்போலை? அதாலைதான் அங்கை வேலைக்குப் போறவையை 'மாக்கள்' மாதிரி நடத்திக்கொள்ளுகிறாவாம்?

ஒருத்தருடைய உழைப்போட இந்த நாட்டிலை காலம்தள்ள முடியுமே எண்டு போட்டுத்தான் ஒருத்தர் தன்ர மனிசிக்காரி வாம். பதவி அவவிட்டை இருக்கிறதாலை வேலைக்கு ஆப்பு வைச்சாலும் எண்ட பயத்திலை இவையளும் ஓணான் மாதிரி எல்லாத்துக்கும் தலையை ஆட்டி பழக்கிப் போச்சினம்.

புருசன்மார் வேலைவெட்டிக்கு போய் விடுவினம். இதுகள் பிள்ளையளை வெளிக்கிடுத்தி பள்ளிக்கூடத்திலை கொண்டே விட்டதுபாதி விடாதது பாதியா ஆத்துப்பதைச்சு ஒடினா.. இண்டைக்கு வேலையில்லை நாளைக்கு வாருங்கோ எண்டு சொல்லுவாவாம். வேலை தற்காலிகமானதெண்டா பொறுப்பாளர்மார் முதல்நாளே, அடுத்த நாள் வேலை இருக்கோ இல்லையோ எண்டு சொல்லிவிடுவினம். இல்லாட்டி வீட்டுக்கு தொலைபேசி எடுத்தெண்டாலும் சொல்லுறதுதான் இங்கை நடைமுறையிலை இருக்கிற விசயமா நான் கேள்விப்பட்டனான். ஆனா தமிழ்ச் சனங்களெண்டதாலை வா எண்டா வரவேணும்; போ எண்டா போகவேணும் எண்டதுதான் அவவின்ரை எதிர்பார்ப்புப்போலை?

முன்னம் வன்னியிலை ஒரு மனிசி இருந்தது. கங்காணியார்ரை பெண்சாதி எண்டதாலை கங்காணியார் போன பின்னாடியும் அவவை கங்காணியார் எண்டுதான் கூப்பிடுறவை. மனிசிக்கு ஏக்கர் கணக்கா நிலம் வன்னியிலை இருந்தது. அதிலை காலபோகத்துக்கு ஏத்த மாதிரி பாத்து மனிசி விதைப்புக்கள் செய்யும். பெரும்பாலும் நான் பாத்த காலத்திலை மிளகாய் செடியள்தான் இருக்கும். அதுக்குக் கீழை, கீரை மாதிரி குறுங்கால பயிர்கள் ஏதாவதை போட்டு மனிசி ஒரு கல்லிலை ரெண்டு மாங்காய் அடிச்சுப்போடும். இதில்லை கதை...

ளாலை தான் சனங்கள் அந்த மனிசியிட்டை வேலைக்கு போக விரும்பிறதில்லை. காசு கொடுத்து வேலை வாங்கிறவை இப்பிடி நடந்துகொள்ளத்தான் செய்வினமெண்டு வேலைக்குப் போறதுகளும் தங்கடை மனதை ஆற்றிக் கொள்ளுறதுமுண்டு. இண்டைக்கு மனிசியும் போய்ச் சேந்துவிட்டுது. அவையளின்ரை பிள்ளையளும் திக்கொண்டு திசையொண்டா போய்ச் சேந்திட்டுதுகள். இப்ப அந்தக்காணி எப்பிடிக் கிடக்குதோ ஆர் கண்டது.

முதலாளிமார் தொழிலாளிமாரை சுரண்டுகிறதெண்டது அண்டையிலை இருந்து இண்டை வரைக்கும் தொடருறதுதான். ஆனா தொழிலாளிமாரை தொழிலாளிமாரே சுரண்டுறதெண்டது நாங்கள் மட்டும்தான் பாருங்கோ. இதுக்காக நாங்கள் இன்னொரு தொழிலாளருக்கு எதிரா தொழிலாளர் புரட்சிதான் செய்யவேணும். இந்த இதழிலைதான் இன்னொரு பக்கத்திலை 'பிரெஞ்சுப் புரட்சி' எண்டொரு தொடர் வருகுது. அடக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்ததுதான் பிரெஞ்சு 'புரட்சியா மாறினது. அந்த நாளைத்தான் இந்த நாடு தங்கட விடுதலை நாளா கொண்டாடி வருகுது. அந்நியாராலை அடக்கப்பட்டு இண்டைக்கு விடுதலையை நெருங்கிக் கொண்டிருக்கிற மக்களா இருந்துகொண்டு, இப்பிடியான செயல்கள் மூலம் மற்றவையளை நாங்கள் அடக்கியாள நினைக்கிறது உண்மையிலையே வெட்கப்படவேண்டிய ஒரு வேதனையான விடயம்தான்.

**அருமைத்தம்பி**

அனைவருக்கும் எமது
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
10வது ஆண்டில் காலடிபதிக்கும்
இமாலயா
உங்கள் இல்லங்களையும்; உங்கள்
தொழிலகங்களையும் நோக்கிய எமது....
கடுகதி பார்சல் சேவை
பிரியாணி * கொத்துறொட்டி * இடியப்பப்பிரியாணி * தண்டூரி வகைகள் *
நாண் * சீஸ்நாண் * சப்பாத்தி * சமூசா * றோள்ஸ் * சோறு - கறி
இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல்
தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51
றெஸ்ரோறன் இமாலயா
9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)
Pub

அனைவருக்கும் எமது
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
சாந்தினி
உணவகம்
14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
Tel: 01 42 09 37 99
காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு
காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து,
கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய
உணவு வகைகள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

## இந்தியாவின்...

பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களில் மட்டும் 220 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இந்த இடங்களில் 6 இடங்களில் மட்டுமே காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் முலயாம்சிங்கின் சமாஜ்வாடி கட்சி, பீகாரில் லல்லுபிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதாக் கட்சி, மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாட்டில் தி.மு.க ஆகிய கட்சிகளை முறியடித்து காங்கிரஸ் வெற்றிபெற வேண்டும். இது கனவிலும் நினைத்துப் பார்க்கமுடியாத காரியம். அல்லது மேற்கண்ட கட்சிகளுடன் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்து போட்டியிட வேண்டும். ஆனால் இந்த நான்கு மாநிலங்களிலும் வலுவாக இருக்கக்கூடிய மேற்கண்ட கட்சிகள் பெரும்பாலான இடங்களைத் தாங்களே வைத்துக்கொள்ளும். காங்கிரசுக்கு அதிக இடங்களைத்தர இவர்கள் ஒருபோதும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். நாடாளுமன்றத்தில் கட்சிகளுக்குள்ள இடத்தைப் பொறுத்துத்தான் இந்திய அரசியலில் அக்கட்சிகளுக்கு மரியாதை என்ற உண்மையை இந்தக் கட்சிகள் தெளிவாக உணர்ந்து இருக்கின்றன.

மேற்கண்ட மாநிலங்களில் பாதி இடங்களான 110 இடங்களையாவது எதிர்காலத்தில் காங்கிரஸ் கைப்பற்றினாலொழிய மத்திய ஆட்சியைப் பிடிப்பது என்பது நடக்கிற காரியம் அல்ல. இதற்கான ஆற்றலும் அனுபவமும் சோனியாவுக்கு உண்டா என்றால், நிச்சயமாக இல்லை.

இந்திரா படுகொலை செய்யப்பட்ட காரணத்தினால் எழுந்த அனுதாப அலையின் விளைவாக பிரதமரான ராஜீவ் காந்தி அப்பதவிக்கு கொஞ்சமும் தான் தகுதியற்றவர் என்பதை தன் செயல்முறையினால் நிரூபித்தார். ஐந்தே ஆண்டுகளில் முழுமையான செல்வாக்கு இழந்து அதற்குப் பின் நடைபெற்ற தேர்தல்களில் தோல்வி அடைந்தார்.

ராஜீவை விட சோனியா திறமையானவரோ தகுதி படைத்தவரோ அல்ல. ராஜீவைச் சுற்றியிருந்த அதே அரசியல் தரகர்களே (Power Brokers) இப்போது சோனியாவையும் சுற்றியிருக்கிறார்கள்.

டில்லி, இராசஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில் வேறு எந்த மாநிலக் கட்சிகளும் வலுவாக இல்லை. பாரதிய ஜனதாக் கட்சிக்கும் காங்கிரசுக்கும் இடையே நேரடிப்போட்டி இருந்தது. எனவே, பாரதிய ஜனதாக் கட்சியின் எதிர்ப்பு ஓட்டுக்கள் காங்கிரசுக்கு இயற்கையாகவே விழுந்தன. ஆனால் மிசோரம் மாநிலத்தில் வலுவான மாநிலக் கட்சிகள் இருந்ததால் அகில இந்திய கட்சிகளான காங்கிரஸ், பாரதிய ஜனதாவும் தோல்வி அடைந்தன. மிசோரம் தேசிய முன்னணியும் மிசோரம் மக்கள் மாநாடும் கூட்டுச் சேர்ந்து மொத்தமுள்ள 40 இடங்களில் 23 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளன. காங்கிரஸ் முதலமைச்சர் உட்பட பெரும்பாலான வேட்பாளர்கள் தோல்வி அடைந்தார்கள். காங்கிரஸ் 6 இடங்களில் மட்டுமே பிடிக்க முடிந்தது. பாரதிய ஜனதாக் கட்சியினால் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. அம் மாநிலத்தில் கிறிஸ்தவர்கள் மிகப் பெரும்பான்மையாக இருக்கிற காரணத்தால் சோனியா 4—5 முறைகள் அந்தச் சிறிய மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். ஆனாலும் அவருடைய அலை அந்த மலைப் பகுதியில் வீசவில்லை. மிசோரம் மாநிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மிசோக்களையும் ஒன்றிணைத்து அகண்ட மிசோரம் அமைப்பது, இந்திய அரசியல் சட்டத்தில் 8 வது அட்டவணையில் மிசோ மொழியையும் சேர்ப்பது போன்ற கோரிக்கைகளை முக்கியமாக முன்வைத்து இக் கூட்டணியினர் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். மிசோரம் தந்துள்ள இந்தப் பாடம் எல்லா மாநிலக்கட்சிகளுக்கும் பொருந்துவது ஆகும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதையும் தங்கள் மொழி, கலாச்சாரம், ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் முன்வைத்து உருவான மாநிலக் கட்சிகளான தி.மு.க. தெலுங்கு தேசம், அசாம் கணதந்திர பரிஷத். சமாஜ்வாடி கட்சி, ராஷ்டிரிய ஜனதா தளம் அகாலிதளம் போன்ற பல மாநிலக் கட்சிகள் தங்களுடைய இலட்சியங்களையும் நோக்கங்களையும் ஏற்றுக்கொள்ளாத அகில இந்திய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து மத்திய ஆட்சியை அமைப்பதில் ஆர்வம் காட்டினார்களே தவிர, மாநில கட்சிகளைக்கொண்டு கூட்டாட்சி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி மத்திய ஆட்சியை பிடிப்பதற்கோ கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்கும் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கவோ திட்டமிட்டு செயல்படவில்லை.

ஐக்கிய முன்னணி ஆட்சியை மாநிலக் கட்சிகளின் உதவி இல்லாமல் அமைந்திருக்க முடியாது. ஆனாலும் பிரதமர் பதவிக்கு தங்களில் ஒருவரை மாநில கட்சிகள் தேர்ந்து எடுக்கவில்லை. அகில இந்திய கட்சிகளைச் சேர்ந்தவர்களைத்தான் தேர்ந்தெடுத்தன. அகில இந்தியக் கட்சிகளான காங்கிரஸ், பாரதீய ஜனதா போன்ற கட்சிகள் கூட்டாட்சித் தத்துவத்திற்கே எதிரானவையாகும். மாநில கட்சிகள் அகில இந்திய கட்சிகளுடன் சேரும் கூட்டு எலி—தவளை உறவு போன்றதாகும். மாநில கட்சிகள் விழிப்புடன் செயல்படாவிட்டால் அந்தந்த மாநிலங்களிலேயே அவர்கள் செல்வாக்கு இழப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. உத்திரப்பிரதேசத்திலும் பீகாரிலும் முலயாம் சிங் யாதவும், லல்லுபிரசாத் யாதவும் மொழிவழித் தேசிய அடிப்படையில் அரசியல் நடத்தாமல் சாதி அடிப்படையில் அரசியல் நடத்தினாலும்; வெறுமனே இந்துத்துவ அரசியல் எதிர்ப்பு நடத்தினாலும் அவர்கள் வலிமை குறைவார்கள். அகில இந்திய கட்சிகள் அவர்களை விழுங்கி ஏப்பம் விட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை. தமிழ்நாட்டில் தி.மு.க பஞ்சாபில் அகாலி தளம், ஆந்திராவில் தெலுங்கு தேசம் ஆகிய கட்சிகளுக்கும் இது பொருந்தும்.

சின்னஞ்சிறிய மிசோரம் மாநில மக்கள் விழிப்போடு இருந்து அகில இந்தியக் கட்சிகளை அடியோடு முறியடித்துள்ளனர். இந்த உதாரணத்தைப் பின்பற்ற மாநிலக்கட்சிகள் தவறுமானால் டெல்லியில் இந்துத்துவ ஆட்சி கவிழ்ந்து ரோம் ஆட்சி ஏற்படுவது உறுதியாகும்.

காலத்தைப் பதிவுசெய்து மாலையோன் எழுதுவது

# உன்னால் முடியும்

நல்லதொரு வாக்கியம் - **உன்னால் முடியும்.** சொல்கின்ற போதே தன்னம்பிக்கை வேர் விடுகின்றது. முயற்சி துளிர்விடுகின்றது. முடியும் என்று சொன்னவர்கள் செயலில் நிமிர்ந்தார்கள்; செய்து முடித்தார்கள். முடியாது என்று தயங்கியவர்கள் செயலில் சோர்ந்தார்கள். தோற்றுத்தளர்ந்தார்கள்.

மனிதனால் ஆகாத காரியம் என ஒன்றுண்டா? மக்கள் சக்தியே மாபெரும் சக்தி.

பலநூறு வருடங்களுக்குமுன்னர் வாழ்ந்த சித்தர்கள்கூட

**'மனிதனுக்கு மேலொரு தெய்வமுமில்லை. மானுடம் போலோரு மெய்மையுமில்லை'** என்றார்கள். சித்தர்கள் தம்பாட்டிலேயே சிந்தித்தவர்கள். சிந்தித்து தெளிந்த முடிவு கொண்டவர்கள்.

கம்பர்கூட

**'மானுடம் வென்றதம்மா'**

என்றுதான் பாடினார்.

மானுடம் வெல்லும். அதுவே மகத்தான உண்மை.

மா்னுடத்தின் வெற்றி மனிதர்களின் கூட்டு முயற்சியிலேயே தங்கியுள்ளது. ஈழத்தின் மகாகவி இவ்வாறு கூறுகின்றார்.

**'பிழையினைக் கடவுள் செய்தால்**
**சரி ஆக்கல் மனிதன் வேலை'**

அப்படி எல்லாம் ஏன் படித்துப்படித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது? காரணம் உண்டு.

நாம் பொதுவிலேயே தன்னம்பிக்கை குறைந்தவர்களாக வாழ்கின்றோம். சிறுவர்கள், இளைஞர்கள் ஏதும் செய்யமுயலும்போது 'பெரியவர்கள்' தடைக்கற்களை வைத்துவிடுவார்கள்.'சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்று ஒரு 'பெரியார்' சொன்னார். சொன்னவர் போய்ச்சேர்ந்தார். வேளாண்மை வீட்டையே அல்ல; நாட்டையே நிறைப்பதை, வானிலும் வரும்வரை பார்க்க அவர் 'கொடுத்து' வைக்கவில்லை.

நாம் இப்படித்தான், முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்று மனித முயற்சியை வாழ்த்தி வரவேற்போம். அடுத்த அடியிலேயே நிமிர்ந்து எழமுடியாத அடி கொடுப்போம்.

'முதற் கோணல் முற்றும் கோணல்' என்றும், 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா' என்றும் மனித முயற்சியை மடக்கி முறித்துவிடுவோம். இனி எழும்ப இயலாதபடிக்கு அடிகொடுத்துவிடுவோம்.

ஆனால் இப்பொழுதென்றால் நிலைமை வேறு விதமாக இருக்கின்றது.

**'எறிகின்ற கடல் இன்று**
**மனிதர்கள் அஞ்சார்**
**எது வந்ததெனின் என்ன**
**அதை வென்று சொல்வார்'**

அன்று ஈழத்து மகாகவி பாடினார். அதுதான் உண்மை. நிலைமை அப்படித்தான் மாறியிருக்கின்றது.

அலையெழுந்து வந்தாலும், கடும்சூறை சுழன்று அடித்தாலும், நம்மை எறிந்து விளையாடுகின்ற கடல் இது என்று மனிதர்கள் அஞ்சமாட்டார்கள். எது வந்தாலும் அதனை எதிர்த்து வெல்வார்கள்; வென்று செல்வார்கள்.

மனித முயற்சி, மனித உழைப்பு என்று கூறுகின்றபோதுதான் நாம் இன்னொன்றினையும் குறிப்பிடுதல் வேண்டும்.

எமது சமூகத்தில் பொதுவிலேயே கடும் உழைப்பு உண்டு. கடும் முயற்சிஉண்டு. எதற்கும் அஞ்சாத தீரம்உண்டு.

**'ஏறி உயர்ந்த மலையில்லையாயினும் என்ன இருந்தன தோள்களுளன்றே கூறி உழைத்தபின் ஆறி'**

இருந்தநாடு நமது நாடு

இந்த இடத்தில் இன்னொரு விசயம்பற்றி பேசவேண்டியவர்கள் ஆகின்றோம்.

**நான் செய்வேன்!**
**என்னாலை ஏலும்!!**

இவ்வாறு சொல்லநாம் பஞ்சிப்படுகின்றோம். என்னால் ஏலுமோ என்று பயந்து போகின்றோம், சோர்ந்துபோகின்றோம்.

இவையொன்றும் ஆணவமான வார்த்தைகளல்ல. அகங்காரம்கொண்டு அதிகாரத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல தன்னம்பிக்கை மிகுந்த வார்த்தைகள்.

**நான் செய்வேன்**
**என்னாலை ஏலும்.**

இந்த வார்த்தைகளைக் கேட்கிறபோது மனம் குளிர்கின்றது. எப்போது எம் மனம் சுடுகின்றது, சுருங்கிப்போகின்றதென்றால்

**நான்தான் செய்வேன்**
**என்னாலை மாத்திரம்தான் ஏலும்**

இந்த வார்த்தைகளைக் கேட்கிறபோது மனம் சுருங்கிப்போகின்றது, கசந்து போகின்றது.

இவை ஆணவமான வார்த்தைகள். இங்கு நான் என்னும் அகங்காரம் தெரிகின்றது. தன்னால் மாத்திரம்தான் இயலுமென்ற அகம்பாவம் தெரிகின்றது. இது மற்றைய மனிதர்களை மதிக்காத நிலையைத் தோற்றுவித்துவிடும்.

உலகிலேயே மகத்தான விசயம் மனிதரை மனிதராக மதிப்பது. ஆரோக்கியமான விசயமும் அதுவே.

**நான் செய்வேன்**
**நான்தான் மாத்திரம் செய்வேன்..**

இந்த இரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள முக்கிய"மான வேறுபாடு முதலாவதில் தன்னம்பிக்கை தொனிக்கிறது. இரண்டாவதில் ஆணவம் தொனிக்கிறது. தனி மனிதப் பெரும்திரளான சமூகத்தில் ஒருதுளி. தனி மனிதர் தம் திறமையால், தம் தன்னம்பிக்கையால், தம் வளத்தால், மனித சமூகத்திற்கு வழிகாட்டுவர். எனினும் அவர்களும் எம் மக்கள் கூட்டத்தில் ஒரு துளி.

இவற்றின் பின்னணியில் இருந்துதான் உன்னால் முடியும் என்ற தொடரின் உணர்வை நாம் பெறமுடியும்.

**உன்னால் முடியும்**

கேட்கிறபோதே இனிமையாக இருக்கிறதல்லவா?

நாம் ஒன்றினை முன்னெடுக்கிறபோதே 'உன்னால் முடியும்' என்று ஒருவர் சொல்பவராக இருந்தால் , எவ்வளவு தன்னம்பிக்கை வரும். எவ்வளவு முயற்சி பெருகும். சொன்னவரை ஒருக்கால் மனதில் நிறுத்தி மகிழ்ச்சிகொள்ளத் தோன்றுமல்லவா?

ஏன் அவ்வாறு யோசிக்கின்றோம்.? காரணம் சுலபமானது. கண்டுபிடிப்பது ஒன்றும் கடினமல்ல. எங்களுடைய தன்னம்பிக்கையை அவர் வளர்த்திருக்கின்றார். எங்கள் முயற்சியை அவர் தட்டிக்கொடுத்திருக்கிறார்.

வாழ்தல், வாழ்தலுக்காகப் போரிடல் இவையே மனிதனின் மகோன்னதமான விசயங்கள். அதனாலேயே

**மரணத்துள் வாழ்வோம்.**

என்றார் கவிஞர். இது ஒரு தன்னம்பிக்கைதான். வாழ்வோம். அதுதான் முக்கியம். மனிதரால் ஆகாதாது என்ன உண்டு? ஏலுமென்ற சொல்தான் எங்களுடைய மந்திரம்.

**ஏலும். முடியும். செய்வோம்.**

இந்த உலகம் நமக்கானது, இந்தவாழ்வு நம்முடையது.

**பார் இந்த உலகம் பரந்து கிடக்கிறது.**

மனிதன் அழியலாம்.
மானுடம் அழியாதது.
மனிதன் தோற்கலாம்,
மானுடம் தோற்காதது.

எனவே உன்னால் முடியும், என்னால் முடியும், நம்மால் முடியும். அதுவே நமது வார்த்தை

**'வேருக்குள் உறுதிகொண்ட**
**வேம்புகள் மனிதர்'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட நிகழ்வுகள்

## நோர்வேயின் எட்டு நகரங்களில் மாவீரர்நாள் நிகழ்வுகள்

நோர்வேயின் முக்கிய எட்டு நகரங்களில் மாவீரர்நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. பேர்கன், துரண்ணியம், புளோறோ, நார்வீச், துரம்சோ, வடநோர்வே ஆகிய இடங்களில் 28.11.98 அன்றும், ஸ்ரவங்கனில் 29.11.98 அன்றும் ஒஸ்லோவில் 05.12.98 அன்றும் மாவீரர்நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.



### ஒஸ்லோ நிகழ்வுகள்

மாவீரர்நாள் நிகழ்வுகள் சுடர் வணக்கத்துடன் ஆரம்பமாகின. நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து மக்களும் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் கல்லறையில் மாவீரர் ஈகைச் சுடர்களை ஏற்றியதைத் தொடர்ந்து, சிவாஞ்சலி நர்த்தனாலய மாணவிகள் வழங்கிய எழிலார்ந்த எங்கள் மண் நடனக்கோலம் இடம்பெற்றது. தொடர்ந்து நோர்வே கலைபண்பாட்டுக் கழகத்தினரால் தயாரிக்கப்பட்ட 'தேசம் நோக்கி' இசைத் தட்டு வெளியீடு இடம்பெற்றது. தமிழர் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் இதனை வெளியிட்டு வைக்க, தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த நந்தன் இதழாசிரியர் திரு. சுபவீரபாண்டியன் முதல் பிரதியினைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து இவ் இசைத்தட்டுத் தயாரிப்பில் கலந்துகொண்ட அனைத்துக் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். அதனையடுத்து சிறுவர்கள் கலந்துகொண்ட 'கலையாத கோலங்கள்' சிறுவர் மேடைநிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வினைத் தொடர்ந்து தமிழகத்தில் இருந்து வருகைதந்திருந்த திரு. சுபவீரபாண்டியன் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது.

தமிழர் கலைபண்பாட்டு இசைக் கலைஞர்களின் சுதந்திரப் பரணி இசை நிகழ்ச்சி இடம்பெற்றதைத் தொடர்ந்து 'பேய்கள் அரசாண்டால்' நாடகமும் இறுதியாக இடம்பெற்றது.

## தேசிய மாவீரர்நாள்-1998

இத்தாலி பியோமோந்தே, லொம்பார்தியா மாகாணங்கள் வாழ் தமிழ்மக்களால் 29.11.1998 ஞாயிற்றுக்கிழமை 3.30 மணியளவில் பொன்சோனே கத்தோ



லிக்க தேவாலய மண்டபத்தில் மாவீரர்நாள் கொண்டாடப்பட்டது. சகல தமிழ் மக்களும் இவ்விழாவுக்கு வருகைதந்து தமது ஒத்துழைப்பையும் ஆதரவினையும் வழங்கினர். இவ்விழாவில் மாவீரர் குடும்பத்தினரால் மாவீரர் ஈகைச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து தேசிய கீதம் அமைதி வணக்கம், மலர் வணக்கம் என்பன இடம்பெற்றன. சிறப்பு நிகழ்ச்சியாக தமிழீழத் தேசிய தலைவரின் 'மாவீரர் நாள் உரை 1998' ஒலி பரப்பப்பட்டது. பேராசிரியர் கலாநிதி எமிலியோ ஆஸ்தி அவர்களால் சிறப்புரை வழங்கப்பட்டது.

மேலும் மாவீரர் நினைவாக அதிஷ்டலாபச்சீட்டுக்குலுக்கல் இடம்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசினைப் பெற்றவர்கள் அப்பரிசினை மீண்டும் தமிழீழ மருத்துவ நிதிக்கே கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பேச்சுகள், கவிதைகள், தனிநடனம், குழு நடனம் என்பன இடம்பெற்றன. பொன்சோனே விக்னேஸ்வரர் தமிழ்ப்பாடசாலை மாணவர்களால் 'தீர்வுப்பொதி' எனும் சமூக நாடகம் வழங்கப்பட்டது. இறுதியாக பியோமொந்தே கலை பண்பாட்டுக்கழகத்தினரால் புரட்சிக்கானங்கள் வழங்கப்பட்டு, 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற இலட்சியப் பாடலுடன் விழா நிறைவு பெற்றது.

# நிதிப் பங்களிப்பில் உணர்வைக் காட்டிய சுவிஸ் மாவீரர்நாள்!


## 5 இலட்சத்திற்கும் அதிகமான சுவிஸ்பிராங்குகள் சேகரிப்பு

05.12.98 அன்று மாவீர் வீர வணக்க நாளை நினைவு கொள்ளுமுகமாக சுவிஸ் நாட்டின் தலைநகர் பேர்னில் உள்ள எஸ்போ (Expo) அரங்கில் 6000 க்கும் அதிகமான மக்கள் அலை கடலாகத் திரண்டனர். குறிப்பிட்டிருந்த சரியாக பி.ப. 2 மணிக்கு செந்தமிழர் வீரத்தைச் சொல்லும் தேசியகொடி பூநகரச் சமரில் விதையான மாவீரன் கலையரசனின் தந்தை கந்தையா வேலாயுதபிள்ளையினால் ஏற்றப்பட்டு, நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வழக்கம் போல் இம்முறையும் திருப்பதி அவர்களால் மாவீரர் துயிலும் இல்லம் சிறப்பாகவே அமைக்கப்பட்டு அரங்கின் முற்பகுதியில் பிரமாண்டமாக காட்சியளித்த இடத்தில், மணலாற்றிச் சமரில் வீரச்சாவடைந்த மாவீரன் கல்கத் கிரிசாந்தின் தந்தை புதியவன் மார்க்கண்டு மாவீரர் சுடரை ஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்து மக்கள் அனைவரும் மெழுகுவர்த்தியினை ஏற்றி உயர்த்தியபடியும், மற்றும் தீச்சுடர் பந்தங்களை ஏற்றிய படியும் தமது மாவீரர்களை வணங்கி நின்றனர். அப்போது துயிலும் இல்லப்பாடலுடன் கலைபண்பாட்டுக் கழகத்தினர் மாவீரர் பாடல்களை இசைக்க மக்கள் வரிக்கிரமமாகச் சென்று மாவீரர் துயிலும் இல்லத்தில் தமது காவியநாயகர்களை வணங்



கிச் சென்றனர். கிட்டத்தட்ட 2 மணித்தியாலங்கள் நடைபெற்ற மாவீரர் வணக்கத்தைத் தொடர்ந்து திலீபன் மன்றத் தலைவரும், தமிழ் ஈழவிடுதலை ஆதரவாளருமான திரு. தியாகு அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் நடந்தேறியிராத வகையில் மாவீரர்களை வையகமெங்கும் வணங்கும் நிகழ்வினை நான் கண்ணார கண்டுகொள்வதாகவும், இம் மாவீரர் வணக்கம் மூலமாக ஒரு புதிய தமிழ் சர்வதேச போராட்டம் ஏற்பட்டிருப்பதாகவும், இத் தமிழ் சர்வதேச போராட்டத்தை முன்னெடுப்பதற்காக எம் இனத்திற்கு கிடைக்கப் பெற்ற உன்னதமான தலைவர்



பிரபாகரன் என்றும், உலகநாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக உலகத் தமிழினம் தமது முழுமையான பங்களிப்பை செய்யக்கேட்டுக்கொண்டு உலக அரங்கில் தமிழனுக்கான முதல் நாடாக தமிழீழம் மலர வாழ்த்தி தனது உரையை முடித்தார்.

மற்றொரு தமிழீழ விடுதலை ஆதரவாளரும் பேராசிரியருமான பெரியார்தாசன், 6 1/2 கோடி அரேபியர்களுக்கு 23 நாடுகள் இருக்கும்போது 9 கோடி தமிழர்களுக்கு ஒருநாடும் இல்லையே என்ற வேதனையுடன் ஆரம்பித்து தனது கருத்துக்களை முன்வைத்தார். ஈழத்தமிழர்கள் நீங்கள் தேசிய தலைவர் என்கிறீர்கள், ஆனால் எங்களுக்கு பெரியாருக்குப் பின் தமிழினத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் என்பதை மண்டபம் அதிரக்கூறி, விடுதலைக்கு விதையான மாவீரர்களை இவ்வளவு அமைதியான உணர்வுடன் வணங்கிச் சென்ற காட்சியை தன்னால் மறக்கமுடியாதெனவும், யாழ்ப்பாணத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களை அழிப்புச் செய்யும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இன்று உலகமெங்கும் மாவீரர் துயிலும் இல்லம் அமைத்து பதிலடி கொடுக்கிறீர்கள் எனவும், தற்போது உருப்பெற்றுள்ள வான்புலிகள் முதலில் பூமழை பொழிந்து சிங்களத்தை விளக்கவைத்துள்ளனர். தொடர்ந்து என்னத்தை பொழிவது என்பதை சிங்கள ஆட்சியாளர்கள்தான் முடிவு செய்ய வேண்டுமெனவும், வரலாறு படைக்கும் தமிழன் 21ம் நூற்றாண்டில் நுழையும்போது தமிழீழத்தில் நுழைவான் என வீராவேசமான தனது உரையை முடித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளர் ஒருவரின் பேச்சும் இடம்பெற்றிருந்தது. தமிழர் படையணி ஒன்றின் உருவாக்கமும் அதற்காக புலம் பெயர்ந்துவாழும் தமிழீழ மக்களின் முக்கிய பங்களிப்பும் என்னும் கருவில் அமைந்த அவரின் பேச்சைத் தொடர்ந்து அரங்கத்தில் நிதிசேகரிப்பு இடம்பெற்றது, காகித உறையில் கயவனை வீழ்த்தும் நோட்டுக்கள் குவிந்தன, எண்ணிக்கையில் ஐந்து இலட்சத்து நாற்பதினாயிரத்தை எட்டும்வரை!

நடன ஆசிரியர்களான சந்திரவதனி, அனுசியா சர்வானந்தன், உஷா நந்தகோபால், ஞானசுந்தரி வாசன், அனுஷா சற்குணநாதன், பவானி ஆகியோரின் மாணவிகளால் விடுதலையை நோக்கிய கலைகளின் வெளிப்பாடாக எழுச்சி நடனங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன.

மண்டபவாயிலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர் உருவப் படங்களும், பல வெளியீடுகளும் காணப்பட்டன. சுவிஸ் உருவாக்கப்பட்ட 'ஈழம் மலர்கின்ற நேரம்' இசைத்தட்டு, தாயகத்தின் 'வீரத்தின் விளை நிலம்' இசைத்தட்டு, ஈழநாதம் வானொலி அமைப்புக் குழுவின் வெளியீடான மாவீரர் சிலரின் போராட்ட வாழ்வை எடுத்துரைக்கும் 'சுதந்திரவீரர்' மலர், சுவிஸ் வெளியீட்டுப் பிரிவின் 'மண்ணில் மலர்ந்தவை பாகம் - 4' வீடியோப் பிரதி, மலேசியாவில் உதித்த 'தோள் கொடுப்போம்' இசைத் தட்டு, 'ஜேர்மன் பிரெஞ்சு மொழி பெயர்ப்புச் சஞ்சிகை', 'தேசத்தின் புயல்கள்' வீடியோ சீடி ஆகிய வெளியீடுகள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

மாவீரர் நினைவாக சுவிசில் நாடு தழுவிய ரீதியில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. பெரியார் தாசனும், திரு. தியாகுவும் சான்றிதழ்களையும் கேடயங்களையும் கொடுத்துக் கௌரவித்தனர். சிறப்புச் சொற்பொழிவாற்ற தமிழீழ விடுதலை உணர்வுடன் தமிழகத்தில் இருந்து வருகைதந்திருந்த இவர்கள் இருவரும், பெரு நிதித்திட்ட மேற்பார்வையாளரால் கௌரவிக்கப்பட்டனர். 'ஈழம் மலர்கின்ற நேரம்' இசைத்தட்டு உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய சங்கீத பூசணம் திரு.பொன் சுந்தரலிங்கம் அவர்களை திரு.தியாகு அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தற்போதைய சிங்கள ஆட்சி அடக்குமுறையில் தமிழினம் எதிர்கொள்ளும் அவலங்களை, குறிப்பாக பாலியல் கொடுமைகளை தாக்கமான முறையில் வெளிக்காட்டியது 'பேய்கள் அரசாண்டால்' என்னும் நாடகம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவிக்கான சீட்டிழுப்புடன் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்னும் புலிக்கொடி பட்டொளி வீசப்போகும் காலத்தைப் பிரதிபலிக்கும் பாடலின்பின் அமைதியாகக் கொடி இறக்கப்பட்டு, 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்னும் தாரக மந்திரத்துடன் விழா நிறைவடைந்தது.

*- சங்கையூர் குமார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ்நாட்டில் மாமனிதர்களின் திருப்பலியும் 'ஏங்கும் இதயங்கள்' இசைத்தட்டு வெளியீடும்

தமிழீழத்தில் மரணித்த மாமனிதர்களின் திருப்பலி சுவிஸ் பேர்ண் மாநகரில் 15.11.98 அன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநர் அருட்பணி விக்டர் அவிதப்பர் அவர்களும் இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநர் அருட்பணி தேவராஜ் அவர்களும் திருப்பலியை ஒப்புக்கொடுக்க 300-க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு மாமனிதர்களை நினைவுகூர்ந்து தீபங்கள் ஏற்றி வழிபட்டனர்.

மேற்படி திருப்பலியைத் தொடர்ந்து 'ஏங்கும் இதயங்கள்' இசைத்தட்டு வெளியீடு கோவில் பின்புற மண்டபத்தில் நடைபெற்றது. எமது மக்களின் ஏக்கங்களைச் சுமந்த இவ் இசைத்தட்டானது இலங்கை இந்தியக் கலைஞர்களால் இசைவடிவம் கொடுக்கப்பட்டது. அருட்பணி விக்டர் அவிதப்பர் அவர்களும் அருட்பணி தேவராஜ் அவர்களும் இணைந்து வெளியிட முதலாவது சீடி யினை திரு பிரான்சிஸ்-ஜோசெவ் அவர்களும், இரண்டாவது சீடி யை திரு. கண்ணா குலசிங்கம் அவர்களும், மூன்றாவது சீடியை திருமதி சந்திரவதனி விஜயசுந்தரம் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

அன்றைய தினம் பிரதம, சிறப்பு விருந்தினர்கள் உரை பேர்ண் திருக்கோணேஸ்வர நடனாலய மாணவிகள், பேர்ண் தமிழ் வித்தியாலய மாணவிகள், பேர்ண் பூசைப் பணியாளர்களின் நாட்டியங்களும் நடைபெற்றன. சீடி பற்றிய ஆய்வுகளும் இடம் பெற்றன. மேற்படி நன்முயற்சி தமிழ் மறை மாவட்ட (தாயக) ஆயர்களினதும் ஐரோப்பிய பணியக இயக்குநர் ஆசிகளும் வாசிக்கப்பட்டன.

நிகழ்ச்சிகளை ஜெயந்திமாலா குணசீலன் தொகுத்து வழங்க, இசைத்தட்டினை ஆக்கியோன் திரு.பி.வின்சன் அவர்களின் நன்றி




உரையில் மேற்படி முயற்சிக்கு ஆதரவளித்து இறுதிப்பாடலும் பாடிப் பதிவு செய்ய உதவிய பேர்ண் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினர்க்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூறி இசைத்தட்டு வெளியீடு இனிதேநிறைவு பெற்றது.

இந்த இசைத்தட்டு வெளியீடு நமது தாய்த்திருநாட்டில் நடைபெறும் கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்யும் முகமாக அமைந்தமையால், அன்றைய தினம் மண்டபத்தில் 7715 சுவிஸ் பிராங்குகள் விற்பனை வருமானமாகப் பெறப்பட்டது.

மேலதிக இசைத்தட்டுகள் விற்பனை செய்யப்படவுள்ளதால் நன்முயற்சிக்கு இறையாசி வேண்டுவதுடன், நல்லுள்ளங்களின் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

# வெளிவந்துவிட்டது! உள்ளத்தில் மட்டும்; திருப்பம்

கவிஞர் மா. கி. கிறிஸ்ரியன் அவர்களின் ஆக்கங்களான 'திருப்பம்', 'உள்ளத்தில்மட்டும்,' புத்தகங்களின் வெளியீட்டுவிழா 23.11.98 ஞாயிறுமாலை பிரான்ஸ் லாக்கூர்னோவில் அமைந்துள்ள கணேசா மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவுக்கு பாரிஸ் தமிழர் கல்விநிலைய போசக காப்பாளர், ஆசிரியர் திரு.சி.காராளபிள்ளை அவர்கள் தலைமை தாங்கினர். அவர்தன் தலைமை உரையில், கவிஞர் கிறிஸ்ரின் பல கதைகள் சிறுகதைகள் எழுதியிருந்தாலும் தன்னைப் பொறுத்தவரை அவரை ஒரு கவிஞராகவேதான் எண்ணுவதாக கூறினார். இன்றைய காலகட்டத்தில் தேவையான கருத்துக்களை தன் கவிதைகளில் வெளிப்படுத்தி புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்ந்துகொண்டு ஈழத்தில் நடக்கும் அட்டூழியங்களை, அனியாயங்களை தனது கவிதைகளில் சாடிவருபவர் என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து கவிதைகளைப் பற்றிக் கூறும்போது பிரெஞ்சு மண் பல கவிஞர்களை உருவாக்கியது. இப்படிப்பட்ட பிரெஞ்சு மண்ணின் போராட்டம் பற்றி இதுவரை எமது பத்திரிகைகள் செய்திகளை வெளியிடவில்லையாயினும் தற்போது ஈழமுரசு பிரெஞ்சுப்புரட்சி பற்றிய தொடரை வெளியிடத் தொடங்கியுள்ளது. இது பாராட்டப்படவேண்டிய விடயம் எனக் கூறியிருந்தார்.

'திருப்பம்' முதல் பிரதியை முகத்தார் யேசுரட்ணம் வெளியிட்டு வைக்க, சக்தி நிறுவன உரிமையாளர் திரு. சத்தியகுமார் பெற்றுக்கொண்டார். 'உள்ளத்தில் மட்டும்' முதல் பிரதியை திரு. அப்புக்குட்டி இராஜகோபால் வெளியிட்டு வைக்க மூத்த கலைஞரான ஏ.ரகுநாதன் பெற்றுக் கொண்டார்.

இன்னும்பலரின் வாழ்த்துக்களுடனும், கௌரவிப்புடனும், கலை நிகழ்ச்சிகளின் பின் கவிஞரின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

# சர்வதேச மனித உரிமைகள் தினம் ஜேர்மனியில் பரப்புரைகள்

சர்வதேச மனித உரிமை நாளான கடந்த 10ம் திகதி வியாழனன்று ஜேர்மனியின் நாற்பதிற்கும் மேற்பட்ட பிரதான நகரங்களில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் சிறீலங்காவுக்கு எதிரான பரப்புரைகளில் ஈடுபட்டனர். ஒவ்வொரு நகரத்திலிருந்தும் ஏராளமான தமிழ் மக்கள் அரசுக்கூட்டணிக் கட்சியான குருணன் கட்சியின் கிளை அலுவலகங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். இதில் பெண்களும் பிள்ளைகளும் பெருமளவில் கலந்துகொண்டனர். ஜேர்மனியில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஒருமைப்பாட்டுக் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

சிறீலங்காவில் தமிழர்களுக்கு எதிராக மனிதக்கொடுமைகள் ஏராளமாக நடைபெறுவதால் ஜேர்மனியிலிருந்து தமிழர்களை திருப்பி அனுப்பக்கூடாதென புலம் பெயர்வாழ் தமிழர்கள் கேட்டுக்கொண்டனர்.

குருணன் கட்சித் தலைவர்களில் ஒருவரான திருபிஸ்ஸர் தற்போது வெளிநாட்டு அமைச்சராக இருக்கின்றார். அதனால் ஜேர்மனியிலுள்ள தமிழர்களின் நிலைப்பாட்டை அவருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

பல குருணன் கட்சிக்கிளைகள் அந்தப் பகுதித் தமிழர்களின் வேண்டுதலை உடனடியாகவே வெளிநாட்டமைச்சருக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைத்தன. பிறேமன் குருணன் கட்சிகளை வெளிநாட்டமைச்சருக்கு அனுப்பியுள்ள தொலைநகலில் சிறீலங்காவில் நடைபெறும் மனிதக்கொடுமைகளைப் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர்கள் சிறீலங்காவில் காரணமின்றி நூற்றுக்கணக்கில் கைது செய்யப்படுவதாகவும், கைது செய்யப்படுபவர்கள் காணாமல் போவதாகவும், சித்திரவதையின்போது கொலை செய்யப்படுபவர்கள் இராணுவ முகாம்களுக்கு அருகிலேயே புதைக்கப்படுவதாகவும், தமிழ்ப்பகுதிகள் மீது சிறீலங்காவின் விமானங்கள் குண்டுகளை வீசுவதாகவும் பிறேமன் குருணன் கட்சிக்கிளை அனுப்பியுள்ள தொலைநகல் குறிப்பிட்டுள்ளது. மனித உரிமைகளை மீறும் சிறீலங்காவுக்கு ஜேர்மனியிலிருந்து தமிழர்களை திருப்பி அனுப்பக்கூடாதெனவும் அது கேட்டுள்ளது.

- வீ.ஆர் வரதராஜா

## அருள்மிகு நவதுர்க்கை சங்காபிஷேகம்

ஜேர்மனி அருள்மிகு நவதுர்க்கை அம்மன் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் 29.01.99 வெள்ளியன்று நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

தொலைபேசி: 02028904398

# தமிழ் மாணவர் ஒன்றியத்தின் பொது அறிவுப் போட்டியும் கண்காட்சியும்

நேற்று, 12.12.98 அன்று பிரித்தானியாவில் முதன்முறையாக தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியும் 7 பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பொது அறிவுப் போட்டியும் நடைபெற்றது.

அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து, 'பாடும் பறவைகள் வாருங்கள்' எனும் தியாக தீபம் திலீபனின் பாடலுக்கான பரத நாட்டிய அபிநயத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழத்தின் பண்டைய வரலாறு, காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழீழம், நவீன தமிழீழ வரலாறு, பாவற்காயிலிருந்து நீரிழிவிற்கு மருத்துவம், வேம்பிலிருந்து மலேரியாவிற்கு சிகிச்சை, வயல்களில் தாராக்கள், மீன்களுடன் நெல் வளர்க்கும் செய்முறைகள், யாழ். நன்னீரேரித் திட்டம், சூரியக் கதிரிலிருந்து வீதி விளக்குகளுக்கு ஒளிகொடுத்தல், பொருளாதாரத் துறைசார் ஆய்வுகள், நவீன கிராமம் ஒன்றின் மாதிரி வடிவம். உயிர் வாயுவிலிருந்து வாகனங்களை செலுத்தும் வழிமுறைகள் போன்றவை கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

மண்டபத்தின் ஒரு பக்கத்தில் கண்காட்சி நடைபெற்றுக்கொண்டிருக்க மறு பாகத்தில் பிரித்தானிய பல்கலைக்கழக தமிழ் மாணவர் குழுக்களுக்கு இடையிலான பொது அறிவுப் போட்டிகள் ஆரம்பமாகின. *QMW, Westminster, UCL, Kingston, East London, southampton, Birmingham* ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களே இப்பொது அறிவுப் போட்டிகளில் கலந்துகொண்டனர். பன்னிரு துறைகளில் கேள்விகள் தொடுக்கப்பட்டன. இப்பொது அறிவுப் போட்டியில் போட்டியாளர்களுடன், பார்வையாளர்களும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு கேள்விகளுக்கு பதிலளிக்க முற்படுவதையும் காணக்கூடியதாக இருந்தது. இறுதியில் *QMW* பல்கலைக்கழக மாணவர்களே வெற்றியைத் தழுவிக்கொண்டனர். வெற்றியீட்டிய குழுவிற்கு 500 பவுண்கள் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ஏனைய குழுக்களைச் சேர்ந்தோருக்கும் பங்கு பற்றியதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பொது அறிவுப் போட்டியைத் தொடர்ந்து 'தமிழீழ மாணவர்களும் கல்வியும்' எனும் தலைப்பின் கீழ் விவரணச் சித்திரம் ஒன்று திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக கிழக்குப் பிராந்திய பொறுப்பாளர் திரு. முருகானந்தன் அவர்களால் குலுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் பிரித்தானிய பிரதிநிதி திரு.சாந்தன் அவர்களால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புலம் பெயர்ந்த தமிழ் மாணவர் சமூகத்தின் பங்கு தொடர்பான உரையுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவுபெற்றன.

# கேணல்கிட்டு நினைவு ஓவியப் போட்டி 1999

தமிழீழ விடுதலைப்புலிகள் ஜேர்மனிப் பணியகக் கலைபண்பாட்டுக்கழகம் ஆண்டுதோறும் நடாத்திவரும் கேணல்.கிட்டு நினைவு ஓவியப்போட்டிகளின், 1999ம் ஆண்டுக்கான போட்டியை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**ஓவியப்போட்டிக்கான விதிகள்**

போட்டியிற் பங்கேற்போர், ஓவியங்களை தரப்பட்டுள்ள தலைப்புகளுக்கமைய சுதந்திரமான, சுயமான கற்பனையில் வரைந்து, ஓவியத்தின் பின் பக்கத்தில் கையொப்பமிட்டு, பெயரையும் முகவரியையும் எழுதி, விண்ணப்பத்துடன் இணைத்து, கீழே குறிப்பிட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 01.01.1999 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் பின்னொருநாளில் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர்.

போட்டியாளர் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கேட்கப்படுவர்.

**போட்டியாளர்களின் வயதுப்பிரிவுகளும் வயதெல்லையும்:**

*கீழ்ப்பிரிவு* - 01.01.1989 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்.
*நடுப்பிரிவு* - 01.01.1983 இலிருந்து 31.12.1988 வரை பிறந்தவர்கள்.
*மேற்பிரிவு* - 01.01.1979 இலிருந்து 31.12.1982 வரை பிறந்தவர்கள்.
*அதிமேற்பிரிவு* -31.12.1987 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.

**கீழ்ப்பிரிவினரும் நடுப்பிரிவினரும் பயன்படுத்தக்கூடிய வர்ணம்:**

வர்ணக்கட்டி (Farbkriede) மெழுகுவர்ணம் (Wachsmalstift) வர்ண எழுதி (Bundstift) வரைவு வர்ணம் (Tuchfarbe) வர்ண இழைத்தடி (Filqstift) நீர்வர்ணம் (Wasserfarbe)

வரையவேண்டிய ஓவியத்தின் அளவு : 24 செ.மீ X செ.மீ.

மேற்பிரிவினரும் அதிமேற்பிரிவினரும் பயன்படுத்தக்கூடிய வர்ணம்: நீர்வர்ணம் (Wasswefarbe) மட்டுமே.

வரையவேண்டிய ஓவியத்தின் அளவு: 30 செ.மீ X செ.மீ

**ஓவியத்தின் தலைப்பு:**

*கீழ்ப்பிரிவு*: விருப்பத்துக்கிமையத் தலைப்பிடலாம்.
*நடுப்பிரிவு*: சொந்தங்கள் பசியோடு சொந்தமண்ணில்...
*மேற்பிரிவு*: விடுதலை வீச்சு....
*அதிமேற்பிரிவு*: அடிமை என்னும் அவலம்

**விண்ணப்பங்களும் ஓவியங்களும் அனுப்பவேண்டிய முகவரி:**

**K.O.T.**
**Postfach 1160**
**37441 Bad Sachsa**

*கலைபண்பாட்டுக்கழகம்*
*தமிழீழ விடுதலைப்புலிகள் - ஜேர்மனிப்பணியகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிலெய்ட்டில் அவுஸ்திரேலியா வெற்றி

உலக டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளின் 1434 போட்டியான அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி 15.12.98 அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் அவுஸ்திரேலியாவின் அசத்தலுடன் முடிவடைந்தது.



ஸ்ரிவ் வோவ்

பூவா, தலையா தேர்ந்தெடுப்பதில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் மார்க் டெயிலர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்தார். லங்கரின் நேர்த்தியான ஆட்டத்தால் ஆட்டமிழக்காது பெறப்பட்ட 179 ஓட்டங்களுடனும் தலைவர் மார்க் ரெயிலரின் 59 ஓட்டங்களுடனும், உபதலைவர் ஸ்ரிவ் வோவ்வின் 59 ஓட்டங்களுடனும் அவுஸ்திரேலியா 391 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து முன்னைய தோல்வியை ஈடு செய்யும் வகையில் ஆடும் என எதிர்பார்க்கப்பட்டவேளையில், ஆரம்பநிலையில் சில விக்கட்டுகளை இழந்தது. ஆனாலும் நிதானமான ஆடிய இந்திய வம்சாவளி வீரர்களான நாசர் குசையினும், மார்க் ராம் பிரகாசும் சற்று தென்பைக்காட்டிய போதும் அவர்களால் பெரிய திருப்பு முனை எதையும் ஏற்படுத்தமுடியவில்லை. ஒரு கட்டத்தில் 3 விக்கட் இழப்புக்கு 187 ஓட்டங்களை பெற்றிருக்க இங்கிலாந்து 227 ஓட்டங்களுக்குள் அவுஸ்திரேலியாவிடம் சரணாகதியாகியது. ராம்பிரகாஸ் 61 ஓட்டங்களையும் குசைன் ஆட்டமிழக்காமல் 89 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். 164 ஓட்டங்களால் முன்னுக்கு நின்ற, பிரட்மனை விளைவித்த தேசம், தனது இரண்டாவது இனிங்சில் மீண்டும் லங்கர் பெற்றுக்கொடுத்த 52 ஓட்டங்களுடன் ஸ்ரிவ்வோவ், சிலட்டர் ஆகியோரின் திறமையின் பரிசான முறையே 51,103 ஓட்டங்களுடன் 278 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகள் வீழ்ந்த நிலையில் இங்கிலாந்தை ஆடப்பணித்தது. வெற்றி பெறுவதானால் 442 ஓட்டங்கள் எடுக்கவேண்டிய சிக்கலான நிலையில் தொடங்கிய இங்கிலாந்து 120/2 என்று ஒரு தென்பையும் வெற்றியின் அறிகுறியையும் காட்டிய போதும் தொடர்ச்சியாக அதனை செயற்படுத்த முடியா



ராம் பிரகாஸ்

மல் 237 ஓட்டங்களுக்குள் சுருண்டது. மீண்டும் ராம்பிரகாசின் திறமையான 57 ஓட்டங்களும் அணித்தலைவர் ஸ்ரிவாட்டின் ஆட்டமிழக்காத 63 ஓட்டங்களும் தோல்வியை தடுக்கமுடியவில்லை. 205 ஓட்டங்களால் வெற்றிகொண்ட அவுஸ்திரேலியா 5 டெஸ்ட் தொடரில் 2:0 என்று முன்னணியில் திகழ்கிறது.

# கொட்டு மழையும் மூடுபனியும் முடித்த போட்டிகள்

இந்திய, நியுசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி நியுசிலாந்தில் ஏற்பட்ட கொட்டும் மழையினாலும், பாகிஸ்தான், சிம்பாவே அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியான டெஸ்ட்போட்டி மூடுபனியினாலும் தடைப்பட்டதை அடுத்து கிரிக்கட் ரசிகர்கள் சோகமாகலாம். ஆனால் சிம்பாவே அணியினர் மட்டும் ஆனந்தக்கூத்தாடினர். ஏனெனில் வெளிநாட்டு தொடரை முதல் முதலாக வெற்றிகொள்ளும் இவர்களுக்கு மூடுபனி வடிவில் அதிர்ஷ்ட தேவதை. முதல் டெஸ்ட் வெற்றி, முதல் தர வெளிநாட்டு வெற்றி, முதல் வெளிநாட்டு தொடர் வெற்றி என்பது அத்தனையும் பாகிஸ்தானுக்கு எதிராகவே சிம்பாவே பெற்றது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: பொன். தாமோதரம்

# ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம்-பிரான்ஸ் புதிய நிர்வாகத் தேர்வு - 1999

ஈழத் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம்.- பிரான்சின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிறு 20.12.1998 அன்று பாரிஸ் 18-ல் அமைந்துள்ள 'தமிழச்சோலை' மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில், 1999ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ம. றொனி
உப தலைவர்: திரு. நிக்சன்
செயலாளர்: திரு. ப. ஜோனதாஸ்
உபசெயலாளர்: திரு. நெல்சன்
பொருளாளர்: திரு. யோகேஸ்வரன்


மேலும் ஈழத்தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு சில புதிய ஆலோசகர்களும், 99ம் ஆண்டுக்கான போட்டி அமைப்புக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

1999ம் ஆண்டு ஈழத் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்க விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 31.01.98-க்கு முன்னர் சம்மேளனத்தில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன், மேற்படி தொடர்புகளுக்கு, ம. றொனி - 01 43 39 19 05, ப. ஜோனதாஸ் - 01 48 39 91 55 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு சம்மேளன நிர்வாகம் அறிவித்துள்ளது.

## கிரிக்கட்

1999ம் ஆண்டு கோடை காலத்தில் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படும் வீரர்கள் சிலரை கிழமைக்கு ஒருவர் வீதம் அறிமுகம் செய்யும் வரிசையில் அடுத்து வருபவர் அவுஸ்திரேலிய அணியின் வளர்ந்து வரும் நட்சத்திரம் றிக்கி பொயின்டிங்.

### அஜித் அகர்கர் (Ajit Agarkar)



ஒருநாள் பந்தயங்களில் இந்திய அணியை வெற்றிகளுக்கு இட்டுச் சென்றவர்களில் ஒருவரும், அதிரடி அமர்க்களத்தில் உலக பந்து வீச்சாளர்களையே ஒரு உலுக்கு உலுக்கிய கிருஷ்ணமாச்சாரி சிறீக்காந்தின் பயிற்றுவிப்பின் மேற்பார்வையில் சர்வதேசப் போட்டிகளுக்கு அடியெடுத்து வைத்தவரே அஜித் அகர்கர். இவர் ஒரு வேகப்பந்து வீச்சாளர்.

சுனில் கவாஸ்கர், டெண்டுல்கர் போன்ற உலக சாதனையாளர்களின் உருவாக்க நகரான மும்பாயிலிருந்து கிளம்பிய வேகப்புயலுக்கு 21 வயது ஆகியிருக்கிறது. டெஸ்ட்டில் சாதனைபுரிந்த கர்நாடகச் சிங்கம் கபில்தேவைப்போல் ஒருநாள் பந்தயங்களில் சாதனை படைக்கவென்றே வந்தவரே அகர்கர் என்பதுபோல் அவருடைய ஆரம்பம் அமைந்திருக்கிறது. இதுவரை ஒரேஒரு டெஸ்ட்டையும் 30 ஒருநாள் போட்டிகளையும் சந்தித்திருக்கும் இவர், ஒருநாள் போட்டிகளில் 58 விக்கட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். 50 விக்கட்டுக்களை வீழ்த்துவதற்கு 23 போட்டிகளில் கலந்துகொண்டது அகர்கரின் உலக சாதனையாகும். இதற்கு முன் அவுஸ்திரேலியாவின் டெனிஸ் லில்லி 24 போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. அத்தோடு குறைந்த காலத்தில் 50 விக்கட்டுக்களை வீழ்த்திய பெருமையும் அகர்கரைச் சாரும். அதற்காக 182 நாட்கள் மட்டுமே தேவைப்பட்டது ஆனால் குறைந்த பந்துகளில் 50 விக்கட் வீழ்த்திய வக்கார் யூனஸ்சுக்கு 1 வருடம் 26 நாட்கள் தேவைப்பட்டது. ஒருநாள் போட்டிகளில் திருப்பு முனையை ஏற்படுத்தும் பெரும்பங்கு துடுப்பாட்டக் காரர்களுக்கு இருந்தாலும் பந்து வீச்சாளர்களாலும் .சாத்தியம் ஆகும் என்பதைஅஜர்கர் நிரூபித்துக்காட்டிய சந்தர்ப்பங்கள் சில உண்டு.



சுழல்பந்து தோரணையினை நம்பியிருக்கும் இந்திய அணிக்கு அகர்கர், சிறிநாத் போன்ற வேகப்பந்து வீச்சாளர்களும் முக்கியமா்கிவிட்டார்கள்.

ஆசிய மைதானங்களைப் போன்றோ, காலநிலையைப் போன்றோ இங்கிலாந்து இல்லாவிட்டாலும் வேகப்பந்துவீச்சாளருக்கு அம்மைதானங்கள் கைகொடுக்க தவறுவதில்லை. இதுவரை இங்கிலாந்து மைதானங்களில் ஆடிய அனுபவம் அகர்கருக்கு இல்லாவிட்டாலும் கூட பந்துவீச்சில் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒரு இளைய நட்சத்திரமாகும். உலகிலேயே மிக அனுபவமான வீரர் அசாருதீனின் தலைமையும், முதல்தர துடுப்பாட்ட புயல் டெண்டுல்கரின் பலமும் அகர்கரின் திறமைக்கு மேலும் உந்துசக்தியாக இருக்கும்.

இதுவரை சிறந்த துடுப்பாட்டக்காரர்களை வெளி உலகிற்கு காட்டிய மும்பாய், சிறந்த பந்துவீச்சாளர்களையும் காட்டவல்லது என்பதை அஜர்கர் செய்து காட்டவேண்டும். 1983-ம் ஆண்டு வேகப்பந்து வீச்சாளரான கபில்தேவ் தலைமையில் வென்றுவந்த இந்திய அணி, இம்முறை உலகக்கோப்பையை அஜர்கரின் வேகப்பந்துவீச்சால் வென்று வருமா?

தொகுப்பு:
பொன். தாமோதரம்

ஈழவர் விளையாட்டுக் கழகம் - பிரான்ஸ்
நடாத்தும்
ஈழவர் கலைமாலை-99

நிகழ்ச்சிகள்
பரதநாட்டியம், மேற்கத்தேய நடனம், தாளலயம், நகைச்சுவை நாடகம், இசை நிகழ்ச்சி

காலம்: 10.01.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி (நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் நிகழ்ச்சிகள் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும்)
இடம்: ESPACE SAINT-MARTIN
199bis, Rue Saint Martin, 75003 Paris. - Metro: Etienne Marcel

மேலதிக விபரங்களுக்கு:
01 39 83 78 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.61 | 1.66 | 0.18 | 0.75 |
| பிராங்பேட் | 1.64 | – | 2.79 | 0.30 | 1.24 |
| லண்டன் | 0.59 | 0.35 | – | 0.11 | 0.44 |
| பாரிஸ் | 5.53 | 3.35 | 9.36 | – | 4.15 |
| சூரிச் | 1.32 | 0.81 | 2.28 | 0.24 | – |
| பம்பாய் | 42.60 | 25.88 | 70.71 | 7.57 | 32.12 |
| கொழும்பு | 68.15 | 41.41 | 113.12 | 12.33 | 51.39 |

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளின் குரல்....

றலை வரிசைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் தனது சேவையை மேலும் விரிவுபடுத்தி சிங்கள மக்களுக்கு செய்திகளை உடனுக்குடன் வழங்குவதற்காகவே இப் புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### இந்துக்கோயில்....

பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் இராமர் சீதை கோவில் கட்டுவதை தடைசெய்யும் படி இவர்கள் அரசிடம் கோரியுள்ளனர்.

மூன்று மில்லியன் ரூபாவில் செலவு செய்து கட்டுவதற்கு தொண்டமான் திட்டமிடுவதாகக் குற்றம் சாட்டியுள்ள பௌத்த பிக்குகள் சிங்களவாகளின் பாரம்பரிய பூமியில் இக் கோவில்கள் கட்டப்படுவதாகவும் கூறுகின்றனர்.

இதேவேளை முஸ்லிம்களின் உணவு முறைக்கான பாரம்பரிய மத விதிகளை வலியுறுத்தும் கலால் சட்டத்தை சிறீலங்கா அமுல்ப்படுத்துவதற்கு இப் பௌத்த பிக்குகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளை....

பொறுப்பேற்ற லெப்டினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 15-ம் திகதியன்று புதிய இராணுவத் தளபதியாக பதவியேற்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிகளை ஒடுக்க முடியும் என்ற பூரண நம்பிக்கையுடனேயே நாம் யுத்தத்தை முன்னெடுத்துக்கொண்டிருக்கிறோம். இறுதி வெற்றி நமக்கே என்ற இலட்சியத்தைக் கொண்டே நாம் போரை நடாத்துகிறோம். புலிகளுக்கு எதிரான சண்டையை துரிதப்படுத்த உடனடியாக பெருமளவு படையினர் தேவைப்படுகின்றனர் அதற்காக நான் பெரிதும் பாடுபடுவேன் எனவும் புதிய இராணுவ தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### மட்டக்களப்பில்....

தப்பட்டுள்ளது. பேருந்தினை நோக்கி முதலில் கைக்குண்டுத் தாக்குதல்களை நடாத்திய புலிகள் பின்னர் தன்னியக்க ரக சுடுகலங்களால் தாக்குதலை நடாத்திவிட்டு சென்றுவிட்டனர்.

காயமடைந்த படையினர் பின்னர் அப் பகுதிக்கு வந்த மேலதிக படையினரால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து மட்டக்களப்பு - வாழைச்சேனை - கொழும்பு போக்குவரத்து முற்றாக படையினரால் துண்டிக்கப்பட்டதுடன், வாகனங்களில் பயணம் செய்தவர்களும், பாதசாரிகளும் படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

# அடுத்த நூற்றாண்டு ஐ.தே.கட்சியின் ஆட்சியுடன் ஆரம்பம்

## - ஐ.தே.க தலைவர்

அடுத்த வருட இறுதிக்குள் நாம் ஆட்சி அமைத்துவிடுவோம் என்பது உறுதி. நாம் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்துவோம். இவ்வாறு ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனியன்று சுதிர்காகமத்தில் நடைபெற்ற ஐ.தே. கட்சியின் 44வது வருடாந்த மாநாட்டில் பேசுகையில் தெவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண்பதாக பதவிக்கு வருவதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா கூறியிருந்தார். ஆனால் பதவிக்கு வந்ததும் அந்த வாக்குறுதியை காற்றில் பறக்க விட்டுவிட்டார். ஆனால் ஐ.தே.கட்சி அப்படியல்ல. சவால்களுக்கு முகம்கொடுத்து அவற்றில் வெற்றிகண்டவர்கள் நாம். அடுத்த ஆண்டிற்குள் இந்த அரசினை விரட்டியடிக்க உறுதி பூண்டுள்ளோம். பொதுஜன முன்னணியின் ஆட்சியானது அராஜகம், ஊழல் நிறைந்த ஆட்சியாகும். எனவே இந்த பேராபத்தில் இருந்து நாட்டை எப்படியும் நாம் மீட்டேயாக வேண்டும். எமது உறுப்பினர்கள் ஒன்று பட்டால் இருபத்தோராம் நூற்றாண்டு ஐ.தே.கட்சியின் ஆட்சியுடனே மலரும் என மேலும் தனதுரையில் தெரிவித்துள்ளார்.

# செம்மணி புதைகுழிகள் தோண்டப்பட கூடாதென்பது இராணுவத்தின் அழுத்தம்

## - வாசுதேவ நாணயக்கார

செம்மணி புதைகுழிகளை தோண்டக்கூடாதென இராணுவ உயர் அதிகாரிகள் அரசிற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இதனால்தான் இந்த விவகாரத்தில் அரசு அக்கறை காட்டவில்லை.

இவ்வாறு வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். அரசில் உள்ளவர்கள் இராணுவ அதிகாரித்தினால் பலவீனப்பட்டு போயிருப்பதால் இராணுவத்தின் அறிவுறுத்தல்களை மீற முடியாதபடி அரசு இன்று செயற்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டமையாலேயே எழுந்த இப் பிரச்சினையினை இராணுவ ரீதியில் அரசு அடக்க முயலுமானால் அதில் அரசு ஒருபோதும் வெற்றியடையப் போவதில்லை.

இவ்வாறு சிறீலங்காவின் இடதுசாரி தலைவர்களில் ஒருவரான வாசுதேவ நாணயக்கார செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்: 24.08.1968



வீர மரணம்: 24.12.1987

### வீரவேங்கை பஞ்சன்

**கணபதிப்பிள்ளை பஞ்சாச்சரலிங்கம்**

*(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)*

(24.12.1987 அன்று நடைபெற்ற இந்திய இராணுவச் சுற்றிவளைப்பில் வீரமரணம்)


*தமிழீழத்தின் காவலனே! நீர்வேலியின் புத்திரனே,*
*புலியென பாய்ந்து வெற்றி பல கண்டவனே...*
*புயலென வந்தவரை வெட்டிப் புதைத்தவனே,*
*பார்போற்றும் படைக்கு பலத்தை சேர்த்தவனே...*
*பாதியில் எம்மை விட்டு சென்றவனே.*

இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கம்.

தகவல்: நண்பர்கள்
தொலைபேசி: 079 218 52 34
சுவிஸ்

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 28.02.1930



விண்ணில்: 05.01.1998

### அமரர் செல்லையா இரத்தினம்

*(யாழ்/ அரியாலை)*

திதி: 26.12.1998

*ஆலமரம் நீரே அதன் விழுது நாமே என*
*ஆறி வாழ்ந்தநேரம் அந்தரிக்க விட்டதுபோல்*
*ஐயா எங்கு சென்றீரோ அவச்ரமேன் கொண்டீரோ?*
*ஆண்டொன்று சென்றதையா*
*அன்னிய மண்ணில் நாங்கள்*
*நீங்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு*
*வேதனைத்தீயை நெஞ்சில் தாங்கிட முடியவில்லையே ஐயா!*

ஆத்மாசாந்திக்கு இறைவனை வேண்டி
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவால்
துயருறும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள் நண்பர்கள்

தகவல்: மனைவி, பிள்ளைகள்
France, Norway, Germany
T.Phone -0153611158


AMV

IMPORT - EXPORT

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# விடுதலைப் புலிகளை சந்திப்பதற்குமுன் இறுதி முடிவுகளை எடுக்கக் கூடாது

## - தென்னாபிரிக்க தமிழர்கள் வேண்டுகோள்

சிறீலங்காவில் ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டு அங்குள்ள அரசியல் நிலவரங்களை அவதானித்த தென்னாபிரிக்க பாராளுமன்ற குழுவினர் நாடு திரும்பிய பின் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை சந்தித்துள்ளனர். பாராளுமன்ற தூதுக் குழுவினை சந்தித்த திருசின்னப்பன் தலைமையிலான குழுவினர் விடுதலைப் புலிகளை சந்தித்து பேச்சுக்களை நடாத்துவதற்கு முன்னர் தூதுக்குழுவினர் எவ்விதமான இறுதி முடிவுகளையும் எடுக்கக் கூடாது என கோரிக்கை விடுத்தார். இக் கோரிக்கைக்கு தூதுக் குழுவினரும் சாதகமான பதிலையே அளித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை சந்தித்து அவர்களது கருத்து அறியப்படுவது இன்றியமையாத விடயம் என தெரிவித்த தூதுக்குழுவின் ஒரு உறுப்பினரான திருகிஸ்ரன் ராஜு, தமது விஜயத்தின்போது விடுதலைப் புலிகளை சந்திக்க இயலாமல் போனது ஒரு மன வருத்தமான விடயம்தான் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமது கொழும்பு விஜயத்தின்போது. தமிழ் மக்களின் பிரச்சினை, தான் நினைத்ததை விட மிகவும் சிக்கலானதாக இருந்ததை அவதானிக் முடிந்தது எனவும், இந்த விடயத்தில் பலவிதமான அபிப்பிராயங்கள் நிலவுவதால் தீர்வு ஒன்றினை எட்டுவதற்கு பலகாரணிகளைக் கருத்தில் எடுத்து செயற்படவேண்டிய தேவை இருக்கின்றது. சம்மந்தப்பட்ட இரு தரப்பினருமே பேச்சுக்களை நடாத்தி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் என பாராளுமன்ற குழுவின் தலைவர் இப்பிராகிம் பிறிதொரு பேட்டியின்போது தெரிவித்துள்ளார்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு செல்ல தாங்கள் அனுமதி கேட்டபோதும் திட்டமிடப்படாத திடீர் விஜயங்கள் எதுவும் சாத்தியப்படாதென படையினர் மறுத்துவிட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## புலிகளை வென்றபின்னரே பேச்சுவார்த்தை

### - புதிய இராணுவ தளபதி

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற பெயரில் போர்முனையில் எமது படையினரை சிறிதளவேனும் பின்வாங்குவதற்கு இணங்கமாட்டோம். யுத்தத்தில் எதிரிகளை வென்று அவர்கள் வசமுள்ள பகுதிகளை மீட்டெடுத்த பின்னர்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு சந்தர்ப்பம் கொடுப்போம்.

இவ்வாறு சிறீலங்காவின் புதிய இராணுவ தளபதியாக

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மட்டக்களப்பில் இராணுவ தொடர்மீது புலிகளின் தாக்குதல்

(21.12.98)

இராணுவ துருப்புக்களை காவிச் சென்ற பேருந்து வண்டி ஒன்றின் மீது இன்று பிற்பகல் 2.30 மணியளவில் ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதியில் வைத்து புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன், எட்டுச் சிப்பாய்கள் காயமடைந்ததாக அரசு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு பிரதான வீதியிலேயே இத்தாக்குதல் நடாத்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## முல்லைத்தீவில் புலிகளின் ஆயுதக்கப்பல் கொள்கலங்கள் பாதுகாப்பாக இறக்கப்பட்டன?

முல்லைத்தீவு கடற் பிரதேசத்தில் தரித்து நின்ற விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலிலிருந்து கொள்கலங்கள் யாவும் கடற் புலிகளினால் பாதுகாப்பாக இறக்கிக்கொண்டு செல்லப்பட்டதாக கொழும்பு ஆங்கில வார ஏடான 'சண்டே ரைம்ஸ்' இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இக் கப்பலிலிருந்து கொள்கலங்கள் இறக்கப் பட்டவேளை கடற்புலிகள் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை கடலிலும் தரையிலும் மேற்கொண்டிருந்தனர். கப்பலிலிருந்த கரும்பச்சை நிறத்திலான இச் கொள்கலங்கள் யாவும் சிறிய படகுகளில் ஏற்றப்பட்டு கரைக்குக்கொண்டு செல்லப் பட்டன.

இக் கொள்கலங்களில் என்ன வந்தன என்பது மர்மமாகவே உள்ளதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இக் கொள் கலங்கள் இறக்கப்பட்டதை சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஒத்துக்கொண்டுள்ளன.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஆயுத தளவாடங்கள் வந்தமை பற்றி தெரிவித்தால் படையினரிடையேயுள்ள அற்ப சொற்ப மனோநிலையும் பாதிக்கப்பட்டு பெரும் பீதிகொண்டுவிடுவார்கள் என்ற அச்சத்தில் இக் கொள்கலன்களில் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களும், வெல்டிங் ஒட்டுக் கம்பிகளுமே வந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

## இந்துக்கோயில் கட்ட விடவேண்டாம்

### - பௌளத்த பிக்குகள்

(21.12.1998)

இந்துக் கோயில்களை கட்ட அனுமதி வழங்க வேண்டாம் என பெள்த்த பிக்குகள் சிறீலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்று மாலை கொழும்பு பொறலை சந்தியில் கூடிய நூற்றுக்கணக்கான பிக்குகள் இந்துக்கோவில் கட்ட அனுமதிக்க கூடாது எனக்கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்துக் கோவில்களை கட்ட அனுமதித்தால் சிறீலங்கா ஒரு இந்துக்களின் நாடாக போய்விடும் என தெரிவித்துள்ள இப் பௌளத்த பிக்குகள், தற்பொழுது நுவரெலியா

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## புலிகளின்குரல் சிங்கள சேவைக்கு புதிய நியமனங்கள்

புலிகளின் குரல் வானொலி தனது சிங்கள சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் சிங்கள, ஆங்கில மொழிகளில் அனுபவம் உள்ளவர்களை தமது சேவையில் இணைத்துக்கொள்ள வருமாறு தமிழ் மக்களிடம் இருந்து நியமனங்கள் கோரியுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பிக்கப் பட்ட 'புலிகளின்குரல் வானொலி சிங்கள சேவை' தற்பொழுது சிற

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில் புதுப் பொலிவுடன்
கணபதி தமிழ்க்கடை
வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org